www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම் 20
දිනමුරසු වාරමලර්
ஜூலை.23–29.1995
ரூபா 11/00


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL _TAMIL WEEKLY முரசு 111

## வட புலப் போரில் திடீர் திருப்பங்கள்

## பிரபாகரன் எங்கே?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## அசாருதீனைக் காதலித்த சங்கீதா!

## உஷார் பேர் வழியா நீங்கள்?

## அண்ணா சொன்ன கதை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## சமாதானத்திற்கான வழி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
வடக்கே மிகப் பாரியளவில்
மூண்டுள்ள யுத்தம்
ஏற்படுத்தியுள்ள
மிகப் பெரிய சோகம்-
அகதிகள்!

நான்கு இலட்சம் பேர்
உடனடியாக அகதிகளாயினர்
என்ற நெஞ்சை உலுக்கும் செய்தி
யுத்தத்தின் பரிமாணத்தை
உணரப் போதுமானது.

அகதிகளுக்கு உதவுவதற்கு
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக
அரசு அறிவித்துள்ள போதும்
அகதிகளுக்கு அவை போய்ச் சேருமா-
போதியளவில் கிடைக்குமா
என்பவையெல்லாம் கேள்விக்குறிதான்.

இது தவிர,
இழக்கப்பட்டுள்ள மனித உயிர்கள்
மாறாத சோகத்தையும்
போரின் கொடுமையையும்
நீண்டகாலத்திற்கு சொல்லப் போகின்றன.

"யாழ் குடாநாட்டு மக்கள்
பாதுகாக்கப்படுவார்கள்,
இது தமிழர்களுக்கு எதிரான
யுத்தம் அல்ல"என்று
அரசு அறிவித்திருக்கிறது.

மனித உயிர் அழிவுகளை
ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில்
ஜனாதிபதியும் உறுதியான உத்தரவுகளை
பிறப்பித்துள்ளார் என்று செய்திகள் வருகின்றன.

ஆனால், யுத்தத்திற்கு கண்கள் கிடையாது;
போரில் ஈடுபடும் தரப்புக்களுக்கு
எதிரியின் தோல்வியே பிரதானம்.
சகல யுத்தங்களின்
வரலாறுகளும் அப்படித்தான் இருக்கின்றன.

அதனால்தான்-
மனித உயிர்களின் மதிப்பறிந்தவர்கள்
யுத்தம் வேண்டாம் என்று
தங்கள் சக்திக்குட்பட்டவரை
குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் - இலங்கையில்
யுத்தம் என்பது
மக்களின் விருப்பு வெறுப்பைப்
பொறுத்து ஏற்பட்டு வருவதல்ல.

மக்களின் இழப்புக்களை எண்ணி
முன்னே பின்னே தாமதித்து
இங்கே யுத்தம் மூள்வதுமில்லை.

முந்துகின்றவர்களே வெல்ல முடியும்
என்ற அடிப்படையில்
தருணமறிந்து யுத்தம் மூள்கிறது.
இடையிலே சிக்கிக் கொள்ளும்
சாதாரண மக்கள்
மூச்சுத் திணறிப் போகிறார்கள்.

புலிகளை தமிழ் மக்களின்
முக்கியமான பிரதிநிதிகள் என்று ஏற்றுக்
கொண்டே அரசு பேச்சு
நடத்தப் போனது.

இன்று-புலிகளோடு
பாரிய போரை அரசு ஆரம்பித்துள்ளது.
ஆனால்-தமிழ் பேசும் மக்களின்
அரசியல் பிரச்சனைகள்
இன்னமும் தீர்க்கப்பட்டு விடவில்லை.

வடக்கில் குறிப்பிட்ட பிரதேசங்களை
படைகள் தமது கட்டுப்பாட்டில்
கொண்டு வருவதால் மட்டுமே
யுத்தம் முடிந்து விட்டது
என்று கருதுவதற்கு இடமில்லை.

போரில் வெற்றி - தோல்விகள்
ஏற்படலாம். ஆனால்
போருக்கான அடிப்படைகள்
இருக்கும் வரை நிரந்தர சமாதானம்
தோன்றுவது முயற் கொம்புதான்.

தமிழ் பேசும் மக்களின்
அரசியல் அபிலாசைகளை
அரசு எந்தளவுக்கு புரிந்துகொண்டு
செயற்படுகிறது என்பதைப் பொறுத்தே
இனப்பிரச்சனையின் தீர்வு தங்கியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின்
அபிலாசைகளுக்கு தீர்வு காண்பது
யுத்தத்தில் ஏற்படும்
வெற்றி தோல்விகளைப் பொறுத்து
தீர்மானிக்க வேண்டிய விடயமல்ல.

தற்போது வடபுலப் போரில்
அரசுக்கு கிடைத்துள்ள பெறுபேறுகள்
தென்னிலங்கையில் அரசு தனது
முகத்தைக் காப்பாற்ற உதவியிருக்கலாம்.
ஆனால், நிரந்த சமாதானத்தின்
உதயத்தைக் காணவேண்டுமானால்
இனப்பிரச்சனைக்கு
நீதியான தீர்வு அவசர! அவசியம்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## எல்லாரும் ஓரினம்

'சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்'. ஆம் இன்றைய உலகில் மிகப் பிரதானமாகத் தேவைப்படுவோர் இப்பேறு பெற்றோர்களே. தாமாகவே உணர்ந்து தார்மீக வாழ்க்கையைக் கடைப்பிடிப்பவர்களே அவர்கள். எல்லாரும் ஒரு நிலை, எல்லாரும் ஓரினம் என்ற எண்ணத்தோடு வாழ்பவர்களே அவர்கள். இந்த உண்மையை இயேசுநாதரே வெளியிடுகிறார். இந்த உண்மை அப்போஸ்தலர் நடவடிக்கையில் காணப்படுகிறது.

"கடவுள் மனிதரிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை"

(அப்:10:34)

மனிதர்களிடையே எந்தவித வேற்றுமையோ, வேறுபாடோ காட்டப்படக்கூடாது என்பதே இயேசுவின் எண்ணக் கருத்து. ஏனெனில் ஏதாவது வேற்றுமை காட்டப்பட்டால் அது உண்மையான ஆன்மீகம் ஆக முடியாது. பொதுவாக உலக மக்கள் எல்லாரையும் ஆன்மீக வழியில் வழி நடத்த வேண்டும் என்பதே அவரின் அடிப்படை நோக்கமாக இருந்தது. எனவேதான் அவர் தம் சீடர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்:

"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்". (மத்:28:14) எல்லா இனத்தாரையும் என்பதை நாம் இங்கு மனத்தில் கொள்ள வேண்டும். எனவே, நாமும் எந்தவிதமான வேற்றுமையும் பாராட்டாமல் எல்லாரையும் நம்மினத்தவராக, சகோதரர்களாகக் கொள்ள வேண்டும்.

-ஏ.பி.வி.கோமஸ்-



## பெருமான் நபியவர்களும் பேராசிரியர்களும்

உலக நாடுகளின் ஒற்றுமையை நோக்கமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலட்சியத்தை நடைமுறையில் கொண்டுவரத் துணை செய்வது முஹமத் நபி போதித்த இஸ்லாம் ஒன்றுதான்.

-சர் தாமஸ் ஆர்னால்ட்-

உலகத்தில் ஒற்றுமை ஏற்பட வெற்றித் திரு நபியின் வழியே ஏற்றது.

-டெனிசனும் தோமஸும்-

மனித சமூகத்தின் இரட்சகர் என்றே கூறவேண்டும். அவரைப் போன்ற ஒருவர் இன்றைய உலகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பாராயின், உலகின் பிரச்சனைகளைத் தீர்த்து இன்று உலகம் பெரிதும் வேண்டி நிற்கும் சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி வைப்பதில் வெற்றி பெறுவார்.

-பொனாட்ஷா-

உலகில் தெற்கிலும் வடக்கிலும் உள்ள மக்களையெல்லாம் ஒற்றுமைப் படுத்துவதற்காகத் தோன்றிய மனிதர் முஹம்மது நபியவர்கள்.

-எச்.எஸ்.டெனிசன்-

இஸ்லாத்தின் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது வாளாயுதமல்ல. கடினமான எளிமை, நபிகள் நாயகத்தின் சுயநல ஒழிப்பு, வாக்குறுதிகளுக்கு மதிப்பளித்தல், தமது சகாக்கள் மட்டுமன்றி சிஷ்யர்களிடத்திலும் அளவு கடந்த அன்பு, அன்னாரது வீரம், இறை மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை-இவையே முஹம்மதின் வெற்றிக்கு காரணமாகும்.

-மகாத்மா காந்தி-

அறிவுக்குப் பொருத்தமான நம்பிக்கை, புனிதம் பொருந்திய நடத்தை ஆகிய எவையும் இல்லாத ஒரு நாட்டில் பிறந்தார். அதே நாட்டில் இவற்றை நிலைபெறச் செய்தார். ஒரே நேரத்தில் பெரும் பிரயத்தனத்தோடு சமய, அரசியல் திட்டத்தையும், தூய்மையான சமயக் கோட்பாட்டையும் உருவாக்கினார்.

-டாக்டர் ஆர். ஸ்டீவன்ஸன்-

தொகுப்பு:- கரம்பை எம்.எச்.எம்.ஹாரிஸ் - புத்தளம்

## கவிதைப்போட்டி இல-108

### பரிசுக்குரிய கவிதை

### வேதனையில் வாடிடுதே!

கள்ளப்பூதமென கடுகி வந்த பூகம்பம்
மெள்ள வாய்விரித்து விழுங்கியதே பெற்றோரை
தரிக்க இடமின்றி தவிப்பின் குரலெழுப்பி
வெள்ளைப் பூவொன்று வேதனையில் வாடிடுதே!

-வாழையூர் வைரமுத்து -

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**மழலையின் அழுகை**

வெடியொலி எங்கும் கேட்குதம்மா!
ஷெல்களும் வந்து விழுகுதம்மா!
என்னையும் குண்டுகள் துளைத்து விடும்
ஓடிவந்து என்னைத் தூக்குமம்மா.

என்.அம்பிகா-மட்/கல்லடி வேலூர்.

**அழுகை**

முகத்திலே புன்னகை சிந்திவிட்டால்
முத்துக்கள் உதிர்ந்து விடும் என்றா
அகத்திலே அழுகையைக் காட்டிவிட்டாய்?

சி.கிருஷ்ணகுமார்- ஏறாவூர் 01

**சேயின் ஏக்கம்**

வேறொன்றும்
வேண்டாம் எனக்கு;
வேலை பார்க்க
வெளிநாடு சென்ற - என்
அம்மாதான் வேண்டும் இப்போ!

தீபன்-பண்டாரவளை

**தேம்பி அழுதுமென்ன?**

தேம்பி அழுது மென்ன,
தெம்பு சொல்ல யாருமில்லை!
தேகங்கள் தரை சாய்ந்து
தேச மெல்லாம் சிவந்த பின்னே,
சீறி அழும் உன்னை
சிரிக்க வைக்க யார் வருவார்?

தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்/கல்லடி.

**சிரித்தென்ன பயன்?**

தேசமெலாம் தேம்பிஅழ,
நான் சிரித்து என்ன பயன்?

நஸபியா பஹர்தீன்-புத்/கொத்தாந்தீவு.

**கிள்ளியது யார்?**

கிள்ளியது யாருன்னை?
துள்ளிவரும் புள்ளிமானே!
பள்ளிவிட்டு அக்கா வந்தால்
சொல்லிவிடு உன் துயரை!

திருமதி.பி. பிரேமராணி - கொழும்பு



**ஏனிந்த அச்சம்?**

தெய்வக் குழந்தையிவன்
சிந்தும் கண்ணீரெதற்கோ?
'பித்தலாட்ட உலகிலன்றோ
பிறந்து விட்டோ'மென்ற
அச்சந்தான் காரணமோ?

இரா.சிவசாமி-திருகோணமலை

**நின்று விட்டால்...?**

பால் அழுகை நின்றிடவே
பால் பழம் தேவையில்லை!
பஞ்சப் போர் நின்றுவிட்டால்
பச்சிள முகம் சிரிக்குமையா!

க.சுரேஸ்-குருக்கள்மடம்

**கிள்ளியதோ...?**

நீள் விழியில் நீர் நிரம்பி
நில்லாமல் கீழ் வழிய
பொல்லாத பசி உந்தன்
பூவயிற்றைக் கிள்ளியதோ?

ஜே.ராஜேஸ்வரி-கம்பூர்-07.

**கனவு**

சூரிய மலர்கள் மலர்கின்ற காலை
சுகமான தென்றல் வீசுகின்ற வேளை
கனவுகள் நனவாக எண்ணுகின்ற போது
கண் கலங்கி நீ அழுது கண்ணீரை விடலாமோ!

சோழவந்தான் ஆனந்தன்-கொழும்பு

**எப்போது?**

அதிரும் வெடிச்சத்தம்
அமருவது எப்போது?
அழிந்த உடன் பிறப்பை
அறிவது எப்போது?

ஆர்.ராஜகுமாரி-பொகவந்தலாவை

## கவிதைப் போட்டி இல-111



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.07.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 111
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

முரசே,
முத்தான செய்திகளை
தரும் உன்னால்
சத்தான ஒரு
நாவல்-
தாய்! அதனைத் தரும்
உனக்கு கோடான
கோடி நன்றிகள்!

ரூபி திருவேங்கடம்-மஸ்கெலியா

++




"சினிவிசிட்டில்" முழுப் படத்தைப் போட்டு மூழ்க வைத்து விட்டீர்களே!? தினமுரசாருக்கு ...இச்ச்...

எம்.ஸன்பர்-கிண்ணியா-06.

அன்பின் தினமுரசே! நீ தரும் அத்தனை அம்சமும் இனிமையிலும் இனிமை. லேடீஸ் ஸ்பெஷல், சிறு கதைகள், கவிதைகள் என்று ஒவ்வொன்றிலும் சுவை. உனது சேவை மென்மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

என்.எம்.ரொஸானா-அக்குறணை

++

என் இனிய முரசே!
கடந்த வாரம் நீ சுமந்து வந்த அனைத்து விடயங்களும் வெரி ஃபைன்! இராஜதந்திரியாரின் அரசியல் அலசலும், நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்'ட்டும், அற்புதனின் அரசியல் தொடரும் எமது நெஞ்சத்தை குளிர வைத்து விடுகிறது.

ஏ.ஏ.எம்.இக்ரம்-கல்ஹின்ன

தினமுரசில் குறிப்பிட்டு சொல்ல முடியாத அளவுக்கு எல்லாமே பெஸ்ட். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரையும் கவர்ந்த எமது தினமுரசு ஒரு சூப்பர் ஸ்டார் என்பதில் சந்தேகமேயில்லை.

வி.ராமர்-கம்பளை

++

நடப்பதை முன் கூட்டியே முன்னுரைக்கும் முத்தான முரசே! பத்திரிகையில் நீ ஒரு பத்தரை மாற்றுத் தங்கமே!

கரம்பை எம்.எச்.எம்.ஹாரிஸ்-புத்தளம்

++

என் அன்பின் முரசே!
வாரம் ஒருமுறை வலம் வந்து எல்லோரையும் மகிழ்விக்கும் நீ தினமும் வந்து முரசொலிக்க வேண்டுகிறேன்.

பி.எம்.எம்.ஏ.காதர்-மருதமுனை 01

++

அன்பின் முரசே! நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்!
உனக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

எ.ப்.ஆர்.எம்.அஸ்மி-புத்தளம்



தினமுரசே நீ
திரட்டி வருபவை
தேன் போல் சுவை!
உன் அரும்பணி தொடர
அன்புடன் வாழ்த்துகிறேன்

எஸ்.அன்பரசி(நீலா)-கொக்காகல

அன்புடன் ஆசிரியருக்கு...
முரசின் இரசிகர்கள் நாங்கள்-
படித்து முடித்ததும் பத்திரமாக
சேமித்து வைத்திருக்கிறோம்.
புத்தம் புதிதாக....
1 முதல் ......

எஸ். அலெக்சாந்தர்
எதன் சைட் எஸ்டேட், கொட்டகலை.

# போதியளவு ஆயுத பலம் உள்ளதாகப் புலிகள் தெரிவிப்பு!

# ஆட்பலமே உடனடித்தேவை என்றும் அறிவிப்பு!

(நமது விசேட நிருபர்)

**படையினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையை அடுத்து புலிப்பாய்ச்சல் நடவடிக்கையைப் புலிகள் மேற்கொண்டனர். இதனையடுத்து தமது இயக்கத்தில் உடன் இணைந்து ஆயுதங்களை கையிலெடுக்குமாறு புலிகள் பரவலான அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

14.07.95 அன்று தம்மால் மேற்கொள்ளப்பட்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை படையினருக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

14 - 15ம் திகதிகளில் 48 மணிநேர படை -புலிகள் மோதலில் 55 புலிகள் பலியானதாக 'புலிகளின் குரல்' உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட சண்டிலிப்பாய், அளவெட்டி, மாகியப்பிட்டி போன்ற பகுதிகளில்தான் பெரும் மோதல் ஏற்பட்டது.

புலிகளின் தாக்குதலில் ஷெல்கள் மற்றும் வெடி பொருட்களோடு வந்த இராணுவ டிரக் ஒன்று வெடித்துச் சிதறியது. இராணுவம் வேலிகள் அமைப்பதற்காக கொண்டுவரப்பட்ட முட்கம்பிகள், தளபாடங்கள் என்பவை தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்தனர்.

படையினர் திரும்பிச் சென்றுள்ள பகுதிகளில் அவர்கள் கைவிட்டுச் சென்ற ஆபத்தான பொருட்கள் இருக்கக்கூடும். அவற்றைக் கண்டால் தமக்குத் தெரிவிக்குமாறு புலிகளது அரசியல் துறையினர் 17.07.95 அன்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

## கரும்புலிகள் நான்கு பேர்

16.07.95 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் நடைபெற்ற கடற் போரில் புலிகள் தரப்பில் 16 பேர் பலியானார்கள்.

பலியான 16 பேரும் கடற் கரும்புலிகள் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகி இருந்தன. பலியானவர்களில் நான்கு பேர் மட்டுமே கடற் கரும்புலிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடற் கரும்புலிகள் சகிதம் கடற் புலிகளது அணி துறைமுகத்திற்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தியது. கடற் ,புலிகளது படகுகளில் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன.

கடற்புலிகள் ஒரு புறமாகத் தாக்கிக் கொண்டிருக்கும் போது, கடற் கரும்புலிகள் ஊடுருவி சென்று 'எடிதாரா' கட்டளைக் கப்பல் மீது மோதித் தாக்கினார்கள். தாக்குதலில் ஈடுபட்ட கடற்புலி ஒருவர் காணாமல்போய் பின்னர் மீட்கப்பட்டார்.

தாக்குதல் நடைபெற்ற போது துறைமுகத்தில் 7 டோரா படகுகள், ஒரு பீரங்கிப் படகு, மூன்று தரையிறக்க கப்பல்கள் என்பவை தரித்து நின்றன. அவை தாக்குதலில் இருந்து தப்பி விட்டன.

கடற் புலிகளது படகொன்றும் மோதலில் சேதமடைந்துள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

## இரண்டாவது தாக்குதல்

புலிகளால் தற்போது தாக்கப்பட்டுள்ள 'எடிதாரா' கட்டளைக் கப்பல் முன்பும் கடற் கரும்புலிகளால் தாக்கப்பட்டது. 10.07.90 அன்று வடமராட்சிக் கடலில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று கரும்புலிகள் பலியானார்கள். பின்னர் இக் கப்பல் திருத்தப்பட்டு பாவிக்கப்பட்டு வந்தது.

16.07.95 அன்று கட்டளைக் கப்பலை தாக்கி விட்டு பலியான நான்கு கடற் கரும் புலிகளும் பிரபாகரனோடு நின்று எடுத்துக் கொண்ட புகைப் படங்கள் யாழ்ப்பாண பத்திரிகைகளில் முன்பக்கத்தில் வெளியாகியுள்ளன.

இதுவரை புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ள விபரங்களின்படி, முன்னேறிப் பாய்தல் நடவடிக்கைக்குப் பின்னர் புலிகளது தரப்பில் 85 பேர்வரை பலியாகியுள்ளனர்.

படைத்தரப்பினர் தமது தரப்பில் ஏற்பட்ட முழு விபரங்களையும் வெளியிடவில்லை என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

படையினர் தரப்பில் குறைந்தது 200 பேர் பலியாகியிருக்கலாம் என்று ஊர்ஜித மற்ற செய்தியொன்று தெரிவிக்கிறது.

## புலிகளின் அழைப்பு

இதே வேளையில் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள அவசர வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:

"புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் படையினர் பின்வாங்க வைக்கப்பட்டுள்ளனர். முழுக் குடாநாடும் படையினரின் கைவசம் போய்விடுமோ என்று எல்லோரும் அங்கலாய்த்த வேளையில் தேசியத் தலைவர் அவருக்கே உரிய யுத்த தந்திரோபாயம் மூலம் படைகளை பின்வாங்கச் செய்துள்ளார்.

அவற்றைக் கையில் எடுத்துப் பாவிப்பதற்கு பெருமளவு ஆட்பற்றாக்குறை இருக்கிறது.

ஆகவே - இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரக் கணக்கில் களத்தில் குதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வயதானவர்களும் தமது பங்களிப்பைச் செய்யலாம். "தாமதிக்காமல் களத்தில் இறங்க வருக!!"

என்று புலிகள் தமது அவசர வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

## கட்டுப்பாட்டில்

புலிப்பாய்ச்சல் மூலம் வலி வடக்கு-வலி மேற்கு பகுதிகள் தமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகவும், மாகியப்பிட்டியில் 18 இராணுவ உடல்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். பொன்னாலையில் இருந்தும், மூளாயில் இருந்தும் 17.07.95 அன்று இராணுவம் பின்வாங்கி சென்று விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளுக்கு திரும்பிச் செல்கிறார்கள்.

# அமெரிக்க - இஸ்ரேலிய நிபுணர்கள் மேற்பார்வை!

## யாழ்ப்பாணத்தில் புலிகள் குற்றச்சாட்டு

'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின்போது அமெரிக்க - இஸ்ரேலிய நிபுணர்கள் ஆலோசனை வழங்கியதோடு அவர்களது மேற்பார்வையில் தாக்குதல் நடத்தப்பட்டது' என்று யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலி குற்றம் சாட்டியுள்ளது.

16.07.95 அன்று தனது மாலைச் செய்தியில் அக் குற்றச்சாட்டை புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

"அமெரிக்க, இஸ்ரேலிய ஆலோசகர்கள், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள், அமைச்சர் ரத்வத்த, முப்படைத் தளபதிகள் ஆகியோர் 15 ஆயிரம் படையினரோடு நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்து விட்டது. முன்னேறிப் பாய்தல் நடவடிக்கைக்கு தலைமை தாங்கியவர் மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய, என்றும் 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

வலிகாமம் மேற்கும், வடக்கும் படையினர் வசம் இருப்பதாக காட்டுவதற்கு புலிப்பாய்ச்சலுக்கு முன்பு எடுத்த வீடியோப் படங்களை 'ரூபவாஹினி' தொலைக் காட்சி காண்பித்து வருவதாகவும் 'புலிகளின் குரல்' தெரிவித்துள்ளது.

# 12 பேர் பெண் புலிகள்

**கா**ங்கேசன்துறை துறைமுகத்தில் நடந்த கடற்போரில் புலிகளின் தரப்பில் 16 பேர் பலியானார்கள். அதில் 12 பேர் பெண்புலிகள். கடற்புலித் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மாதவி (திருநாவுக்கரசு கலைச்செல்வி-அல்வாய் வடக்கு) கடற் கரும்புலிகளான கப்டன் தமிழினி (சிவப்பிரகாசம் கலைச்செல்வி - வல்வெட்டித்துறை) கப்டன் தாரிணி (மகாலிங்கம் ரஞ்சினி தேவி-வேலணை மேற்கு) கப்டன் கமலம் (குழந்தைவேல் சிறிரஞ்சனி-காரைநகர்) ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

# குடாநாட்டில் 63 முகாம்கள்

**யா**ழ் குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 63 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3 1/2 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தால் யாழ் குடாநாட்டில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன.

சுத்தமான குடி நீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, சுகாதார நிலைமையும் சீர்கேடு அடைந்துள்ளது. யாழ் நகரப்பகுதியில் அமைந்துள்ள முகாம்களில் கண் நோய், சொறி-சிரங்கு போன்ற தொற்று நோய்கள் பரவியுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இடம் பெயர்ந்த மக்களின் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

# வெடி விபத்து-புலிகள் மறுப்பு

**யா**ழ்ப்பாணம் தாவடியில் புலிகளது வாகனங்கள் வெடிவிபத்தில் சிக்கியதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்த மக்கள் சிலர் கூறிய தகவல்களே திரிபடைந்து வதந்தியாகப் பரவியது.

இதனையடுத்து பொதுமக்கள் பலர் புலிகளின் வெடி விபத்தால் பலி என்று கொழும்பில் செய்திகளும் வெளியாகியிருந்தன.

இது பற்றி முரசுக்கு தெரியவந்துள்ளதாவது;

11.07.95 அன்று யாழ்ப்பாணத்தில் வெடி விபத்தொன்று ஏற்பட்டிருந்தது. அதில் புலிகளது கப்டன் கண்ணாளன் என்பவரும், புலிகளது தீவிர ஆதரவாளர்கள் இருவரும் பலியானார்கள். 17 பொதுமக்கள் காயமடைந்தனர். பாரிய சத்தமும் கேட்டது. இச் செய்தியே வேறு விதமாக திரிபடைந்து பரவியிருக்கிறது.

இதே வேளை 17.07.95 அன்று புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தாவடியில் வெடி விபத்து ஏற்பட்டு 150 பொதுமக்கள் பலியானதாக அரசு கூறி வருவதில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ளது.

# பல முனைகளால் இராணுவம் வரலாம்.

## யாழ்ப்பாண பத்திரிகைகள் கருத்து

## அரசுக்கு பெரும் பின்னடைவாம்

**யா**ழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் புலிகள் அமைப்பில் அனைவரும் இணைய வேண்டும் என்று ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

'உதயன்' பத்திரிகை 17.07.95 அன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது:

"அரசின் திட்டப்படி யாழ்ப்பாணம் மீது ஒரே வேளையில் பல முனைகளில் இருந்து இராணுவம் முன்னேற முயலலாம். அப்போது சகல முனைகளிலும் நின்று போராட நிறைய வீரர்கள் தேவைப் படுவார்கள். இதனையுணர்ந்து தமிழ் இளைஞர்கள் புலிகளோடு சேர வேண்டும்." என்று அத் தலையங்கம் தொடர்கிறது.

'ஈழநாடு' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

"புலிப்பாய்ச்சல் காரணமாக சிறீலங்கா அரசு முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையை இடை நடுவில் கைவிட்டுள்ளது. இதன் மூலம் யாழ் நகரைக் கைப்பற்றும் திட்டத்தைக் கை விட்டுள்ளது போல் தெரிகிறது.

இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு என்ற இறுதி முடிவுடன் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை இடை நிறுத்தப் பட்டதோ, முற்றாகக் கைவிடப்பட்டதோ எதுவாயினும் அரசுக்கு பெரும் பின்னடைவேயாகும்.

அரசுக்கு மெள்ளவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இராணுவம் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாக அரசின் வெகுஜன தொடர்பு சாதனங்கள் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது."

என்று 'ஈழநாடு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இறந்தோர் தொகை 300?

**யா**ழ் குடாநாட்டில் 09.07.95 முதல் 13.07.95 வரை பலியான பொதுமக்களின் எண்ணிக்கை 300 பேர் வரை என்று முரசுக்கு தகவல் கிடைத்துள்ளது. பலியானவர்களில் நூறு பேர் வரையான பெயர் விபரங்களும் முரசிடம் கிடைத்துள்ளன.

இதில் யாழ் பல்கலைக்கழக மாணவி ஜெயசுதா உட்பட 50 மாணவர்கள் (ஆண்டு 1 முதல் ஆண்டு 10 வரையான) அடங்குவர்.

காயமடைந்த 125 சிறுவர்கள் யாழ் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். சரமாரியான ஷெல் தாக்குதல்களும், விமானக் குண்டு வீச்சுமே பலத்த சேதத்தை உருவாக்கியுள்ளன.

# வைத்தியர் ஓட்டம்!

**ஆ**னையிறவு இராணுவத் தளத்தில் இருந்து 13.07.95 அன்று கிளிநொச்சி நகர் நோக்கி ஷெல் வீச்சு இடம் பெற்றது. இதனால் கிளிநொச்சி வைத்திய சாலையில் பணியாற்றிய பிரான்ஸ் நாட்டு வைத்தியர்கள் கொழும்பு திரும்பி விட்டதாக கூறப்படுகிறது. சில மணி நேரத்தில் திரும்பி வருவதாக கூறிச் சென்றார்களாம். பின்னர் அவர்கள் கொழும்பு சென்று விட்டதாக தெரிய வந்ததாம்.

# வடக்கே செல்லாத கிழக்கு அணி

## கெரில்லா தாக்குதலை தீவிரமாக்கலாம்

(மட்டக்களப்பு நிருபர்)

**யா**ழ் குடாநாட்டில் படைகளது நடவடிக்கைகளையடுத்து கிழக்கில் உள்ள புலிகள் யாழ்ப்பாணம் நோக்கி செல்வதாக சில செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால், சமீபத்திய வடபுலப் போரில் புலிகள் தரப்பில் பலியானவர்களில் அனேகமானோர் வடபகுதியைச் சேர்ந்தவர்களேயாவர். கிழக்கில் கெரில்லா நடவடிக்கைகளை நிறுத்தி தமது அணிகளை வடக்கே அழைக்க பிரபாகரன் விரும்பவில்லை என்று தெரிகிறது.

முல்லைத்தீவில் இருந்தே 500 ற்கு மேற்பட்ட புலிகளது அணி யாழ் குடாநாட்டுக்கு அழைக்கப்பட்டது. சமரிலும் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் பலர் பலியாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து தமது அணிகளை நகர்த்தாமல் இருப்பது மூலம் அங்கு மேலும் கெரில்லாத் தாக்குதல்களை தீவிரப்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# கனடாவில் புலிகள் கையெழுத்து வேட்டை

(கனடா நிருபர்)

17.07.95 அன்று கனடாவில் ஒன்ராரியோ பாராளுமன்றம் முன்பாக கனடாவில் உள்ள புலிகள் அமைப்பினர் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். மெழுகுதிரிகளை கரங்களில் ஏந்தியபடி ஒன்ராரியோ பாராளுமன்றம் முன்பாக போராட்டம் நடைபெற்றது. 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இதே வேளையில், கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் புலிகள் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர். கனடாப் பிரதமர், கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு மகஜர் அனுப்பவே கையெழுத்துக்கள் பெறப்படுகின்றன.

15ம் திகதி அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ண் நகரிலும் புலிகள் அமைப்பினரால் ஊர்வலம் நடத்தப்பட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

# வெடி விபத்தில் 3 புலிகள் பலி

**ம**ட்டக்களப்பு வாகரையில் ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் புலிகள் அமைப்பினர் மூவர் பலியாகியுள்ளனர். கிழக்கில் தாக்குதல் ஒன்றுக்கு தயாரான போதே வெடி விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

# 300 பேர் பலி 500 பேர் காயம்

## யாழ் பல்கலைக் கழக துணை வேந்தர் கடிதம்

'**மு**ன்னேறிப் பாய்தல்' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் யாழ் பிரஜைகள் குழு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக பேராசிரியர் குணரட்ணம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். யாழ் பல்கலைக் கழக உப வேந்தரான பேராசிரியர் குணரட்ணம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை மூலம் 300 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 500 பேர் வரை காயமடைந்துள்ளனர். 3 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். சமாதான நோக்கத்தை அடைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகக் கூறுவது அர்த்தமற்றதாகும் என்று அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# 3 வயதுச் சிறுமி பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிண்ணையடியில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் பலியானவர்களில் உடனடியாக அடையாளம் காணப்பட்ட பொதுமக்களின் பெயர் விபரம் பின்வருமாறு: கந்தசாமி, வனிகலா-வயது 3, அரவிந்தன் நந்தினி-வயது 11, கந்தையா கணேசமூர்த்தி-வயது 30.

ஷெல் தாக்குதல் காரணமாக காயமடைந்த ஒன்பது பேர் வாழைச்சேனை மருத்துவ மனையிலும், ஒன்பது பேர் மட்டக்களப்பு மருத்துவ மனையிலும் அனுமதிக்கப் பட்டிருந்தனர். மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களை யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. பா.உ. திரு. ராசமாணிக்கம் சென்று பார்வையிட்டார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கிழக்கில் விவசாயிகளிடம் புலிகள் நிதி திரட்டல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கல் அதிகளவு உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களான வேப்பவெட்டுவான், மாவடி ஓடை ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள். இப்பகுதிகள் அடர்ந்த காட்டுப் பிரதேசங்களாகும்.

இங்கு கல்வாடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து புலிகள் தலா ஒரு கல்வாடிக்கு 5000/- ரூபா விகிதம் அறவீடு செய்ததாகக் கூறப்படுகிறது. எனினும் இவ்விதம் நிதி வசூலிப்பில் ஈடுபட்ட புலி உறுப்பினர் படையினரிடம் பிடிபட்டதால் இவர், தான் அறவீடு செய்த கல்வாடிக் காரர்களின் பெயர் விபரங்களையும், அறவீடு செய்த தொகையையும் படையினரிடம் தெரிவித்துள்ளதாகவும், இதனால் கல்வாடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்கள் கல்வாடிகளையும், தொழிலையும் விட்டு ஓட்டம் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வேப்பவெட்டவானிலிருந்து செங்கல் ஏற்றிவரும் ஒவ்வொரு லொறி, உழவு இயந்திரங்களுக்காக ரூபா 300 முதல் 500 வரை அறவிடுவதாகவும் அப்பகுதிகளில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிடத்தில் ஏக்கர் ஒன்றுக்கு தலா ரூபா800முதல் 1250/- வரை புலிகள் அறவிடுவதாகவும் கூறப்படுகிறது.

இது இவ்விதமிருக்க கல், மண் ஏற்றிவரும் வாகனங்களிடத்தில் சோதனைச் சாவடிகளிலுள்ள பாதுகாப்புப் படையினரும் பொலிசாரும் மின்குமிழ், பேனை, பெரிய பதிவேட்டுக் கொப்பி, என்பவற்றை வாங்கித் தரச் சொல்வதாகவும், பொலிஸ் இராணுவ சாவடிகளில் 10 செங்கற்கள் விகிதம் போடுமாறு கேட்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச் செங்கற்கள், கருங்கற்கள் என்பன "சென்றி" அமைப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஏறாவூரிலிருந்து உறுகாமத்திற்கு மீன் ஏற்றிவரச் சென்ற சீனி முகம்மது என்னும் மீன் வியாபாரியின் மோட்டார் சைக்கிள் ஒன்றைப் புலிகள், திருப்பித் தருவதாகக்கூறி எடுத்துச் சென்றதாகவும் இன்னமும் அது திருப்பிக் கொடுக்கப் படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த 1990ம் ஆண்டு உறுகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் அகதிமுகாமில் வாழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காட்டூன் மூலை

நன்றி—ஐலண்ட்




# மட்டக்களப்பில் மருத்துவர்கள் தட்டுப்பாடு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்சமயம் இரு சிங்கள வைத்திய நிபுணர்கள் நியமனம் பெற்று சேவையாற்றி வருகின்றனர். அர்ப்பண சிந்தையுடன் பணியாற்றும் இவர்களது சேவையை நோயாளிகளும் வைத்தியசாலை நிருவாகமும் பெரிதும் மெச்சுகிறார்கள். கடந்த 1985ம் ஆண்டுக்கு முன்னர் இவ்வைத்தியசாலை போதியளவு வைத்தியர்களைக் கொண்டிருந்தது. அம்பாறை, பொலன்னறுவை, திருக்கோணமலை மாவட்டங்களிலிருந்து கூட விஷேட சிகிச்சைக்காக இவ்வைத்தியசாலைக்கு நோயாளர்கள் கொண்டு வரப்பட்டனர். அநேக தமிழ் வைத்தியர்கள் இவ்வைத்தியசாலையில் அப்பொழுது கடமையாற்றினார்கள். பின்னர் வன்செயல்களின் நிமித்தம் அவர்கள் இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டனர். கடந்த 4 வருடங்களாக மட்டு. பொது வைத்திய சாலையில் அறுவைச் சிகிச்சைகள் M.S.F என்று அழைக்கப்படும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவன வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பாரிய அறுவைச் சிகிச்சைகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன. கடந்த 4 வருடங்களாக மட்டக்களப்பு நிலை வழமைக்குத் திரும்பியிருந்தாலும் இங்கு வைத்தியர்களுக்கு தட்டுப்பாடு இருந்தே வருகிறது. தனியார் மருத்துவமனை வைத்தியர்கள் மட்டு. பொது வைத்தியசாலையில் விருப்பமின்றிக் கடமையாற்றினர்.

தமிழ், முஸ்லிம் வைத்தியர்கள் மட்டக்களப்புக்கு வரத் தயங்கும் இவ்வேளையில் அறுவைச் சிகிச்சை வைத்திய நிபுணர் கே.எச்.ஆர்.கரணாரட்ண, மற்றும் வைத்திய நிபுணர் என். குமார் பெர்னாண்டோ ஆகிய சிங்கள வைத்தியர்கள் தமிழ் பேசும் மக்களுக்குச் சேவையாற்ற இங்கு வந்துள்ளமை அனைவரும் பாராட்டத் தக்கது. இதேவேளை மட்டக்களப்பு விமானப்படையைச் சேர்ந்த சிங்கள இராணுவ வீரரொருவர் தனக்கு முன் பின் தெரியாத தமிழ் பெண்ணொருவருக்கு இரத்ததானம் வழங்கி அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றிய சம்பவமும் குறிப்பிடத்தக்கது.

# லுணுகலையில் "பே போன்" தொலைபேசி வசதி

பதுளை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட லுணுகலைக்கு 'பேபோன்' உள்ளூர்-சர்வதேச தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

லுணுகலை பஸ் நிலையம் முன்பாக பேபோன் தொலை பேசிப் பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் தொலைபேசி வசதி பெறுவதற்காக பஸ் நிலையத்திலிருந்து தபாலகத்திற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்த சிரமம் இப்போழுது நீங்கியுள்ளது.

லுணுகலை நகர் மக்களின் நீண்ட காலக் குறையாகவிருந்த இவ்வசதி தற்சமயம் செய்துகொடுக்கப்பட்டுள்ளதால் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் அலுவல்கள் உள்ள பலர் இதனால் பெரிதும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பரீட்சையா? ... பயிற்சியா? .....
# முடிவு அரசின் கையில்

♦-மாணவ எண்ணம்-♦

பரீட்சைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதேவேளை வடக்கே யுத்தம் தீவிரமடைந்து வருகிறது. போர்க்கால கருத்தரங்குகள் மூலம் பெருமளவில் புதிதாக உறுப்பினர்களை புலிகள் சேர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் கணிசமானவர்கள் மாணவர்களே!

அண்மையில் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தர பரீட்சை நாடெங்கிலும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இந்த நிலையில் தான் வடக்கே பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய போராட்டம் வளர்வதற்கு கல்வி ரீதியாக பல்வேறு புறக்கணிப்புகள் தமிழ் மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டதும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

தற்போது வடக்கே மாணவர்கள், 'பாடப்புத்தகமா? ஆயுதமா? எதைக் கையில் தூக்குவது?' என்ற இரு மனநிலையில் உள்ளார்கள். ஆனால் புலிகளின் பிரச்சாரம் ஒரு கையில் புத்தகத்தையும் மறு கையில் ஆயுதத்தையும் ஏந்தும் படி வேண்டுவதாக அமைகிறது.

கல்வியில் நம்பிக்கை வைத்துள்ள மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள். வடக்கே பரீட்சையைக் குழப்பும் படியாக அமைந்துவிட்டது இராணுவ நடவடிக்கை மாணவர் மத்தியில் பெரிய ஏமாற்றத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நடவடிக்கை, மாணவர்களை ஒரேயடியாக புத்தகத்தை எறிந்து விட்டு, ஆயுதத்தைத் தூக்கி பயிற்சிக்கு செல்லும் நிலைக்கே இட்டுச் செல்லும்.

இதேவேளை பரீட்சைகளை உரியவேளையில் நாடு முழுவதும் நடத்தாமல் விடுவதால் ஏற்படும் பல சிக்கல்களை கடந்த காலங்கள் எடுத்துக் காட்டி உள்ளன. அவ்வேளைகளில் நடத்தப்பட்ட விஷேட பரீட்சைகளில் வடபகுதி மாணவர்களுக்கு உரிய முறையில் பல்கலைக்கழக அனுமதிகள் வழங்கப்படவில்லை.

அண்மையில் எட்டு மாணவர்கள், வடக்கு மாணவர்களின் வெட்டுப்புள்ளி தீர்மானிப்பு தொடர்பான அதிருப்தியை அரசியல் தலைவர்கள் பலருக்கும் கொழும்புக்கு வந்து எடுத்துக் கூறியிருந்தார்கள். தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதிகூறிய ஜனாதிபதி இதுவரை அதனை தீர்த்ததாக தெரியவில்லை. முன்னைய அரசாங்கம் விட்ட தவறுகளை இந்த அரசு விடாது என்று ஜனாதிபதி கூறிவருகிறார். அவர் வடபகுதி மாணவர்களின் கல்வி விடயத்திலும் நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும்.

நிவேதா-கொழும்பு-13.


BRIGHT இன் 1995

## ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி

வெற்றிப்படிகளை எட்டிப்பிடிக்கும் BRIGHT மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குகிறது என்பது, மாணவர்கள் பெறும் சித்தியின் மூலம் (பரீட்சைப் பெறுபேறுகளினால்) நிரூபிக்கப் படுகிறது.

1994 ஆம் ஆண்டு BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியில் கலந்து கொண்ட300 மாணவர்களுள் 92 பேர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகியுள்ளனர்.



எமது மாணவர்களுள் பதுளை தமிழ் மகளீர் வித்தியாலயத்தைச் சேர்ந்த *செல்வி. வித்யா கணேசன்* என்னும் மாணவி (BSE/188/94) மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஜப்பான் நாடு சென்று வரத் தெரிவாகியுள்ளார் என்பதை BRIGHTபெருமையுடன் அறியத் தருகின்றது. இவருக்கும் பரீட்சையில் சித்தியெய்திய ஏனையோருக்கும் BRIGHT வெகுமதியும் நற்சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளது. இத்தோடு இரு மாணவர்கள் றோயல் கல்லூரி அனுமதியும் பெற்றுள்ளனர்.

1995 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி, தபால் மூலம் நடைபெறுகின்றது.

**மிகச் சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்யவும், புலமைப் பரிசில் பெறவும் உகந்த வழி - BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியே.**

இதில் இணைய விரும்புவோர் பயிற்சிக்கட்டணம் 250/= ரூபா காசுக் கட்டளையை The Director-BTC எனும் பெயருக்கு Sea Srteet SPO இல் பெறக்கூடியதாக பெயர்,முகவரி கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி இணைந்து கொள்ளவும்.

இவற்றோடு BRIGHT இன் வெளியீடுகள்

- ★ பொது விவேகம் பாடநூல் 75.00
- ★ பொது விவேகம் செயல் நூல் 60.00
- ★ மாதிரி வினாவிடை ஆண்டு 5 100.00
- ★ மாதிரி வினாவிடை ஆண்டு 4 100.00

வெற்றிக்கனி

BRIGHT ன் கல்வி வெளியீடு

பிரதி மாதந்தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P. O. BOX 162,
COLOMBO CENTRAL SUPPER MARKET COMPLEX
COLOMBO-11 (T.P: 434770)



விளம்பரப் பகுதி



## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)**LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# ஒழுங்கைகளுக்குள் பதுங்கும் காதல் ஜோடிகள்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகர வீதிகள் போக்குவரத்துக்குப் பயன்படுவதைவிட கல்லும் மணலும் கொட்டி வைக்கவே பயன்படுகின்றன.

வீடுகட்டுபவர்கள், கொந்தறாத்துக்காரர்கள் எல்லாம் இப்போது தெருக்களில் வைத்தே கலவை போடுமளவுக்குத் துணிந்து விட்டார்கள். உள்ளே வசதிகள் இருந்த போதிலும் தெருவில் வைத்துச் சீமெந்துக் கலவை போடுவதிலேயே குறியாய் இருக்கிறார்கள்.

எந்தப் பாதையால் போனாலும் இந்தப் பிரச்சனையால் பாதசாரிகள், சைக்கிளோட்டிகள், மோட்டார் சைக்கிளோட்டிகளும் தங்கள் உயிரை கையில்பிடித்துக்கொண்டே பயணம் செய்கிறார்கள். கார், பஸ் போன்றவற்றுக்கு ஒதுங்கி வழிவிட இவர்களுக்கு பாதையில் குவிக்கப்பட்ட மணலும் கற்களும் இடைஞ்சலாக இருக்கின்றன.

இது தவிர, நகரத்தின் சில ஒழுங்கைகள்-குறிப்பாக ஜோர்ஜ் வீதி போன்றவை பட்டப்பகலில் காதலர் பூங்காக்களாக மாறிவிடுகின்றன.

வாகனப் போக்குவரத்துக் குறைந்த இந்த ஒழுங்கைகளில் எங்கே சந்து பொந்துகள் இருக்கின்றன, எப்படி நின்றால் மறைந்து கொள்ளலாம் என்பதெல்லாம் இந்தக் காதலர்களுக்கு அத்துப்படி! இவர்களது விரச வேலைகளால் அப்பாதையில் போகும் மரியாதை உணர்வுள்ளவர்கள் தலையைக் குனிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

நகரசபையாரும் பொலிஸாரும் இந்த விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

# மலையக நகர்களில் சீரற்ற பஸ் சேவை!
## சிறந்த சேவைக்கு தகுந்த வழி ஏற்படுமா?

மலையகத்தின் முக்கிய நகரமான நுவெரலியாவிற்கும் தலவாக் கெலைக்குமான பஸ் சேவை கடந்த சில மாதங்களாகவே மிகவும் சீரற்ற மந்த நிலையிலுள்ளதை இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டியுள்ளது.

மலையகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து எந்த ஒரு அவசியத்தேவைக்கும் நுவெரலியாவிற்கு வருவது கட்டாயமானதொன்றாகும், அப்படி இருந்தும் மக்களுக்கு இ.போ.ச.வும் பிரத்தியேக பஸ் சேவையும் நடத்தும் சேவை, மக்களை மிகவும் சிரமத்திற்கும், வருத்தத்திற்கும் உள்ளாக்கியுள்ளன.

எந்நேரமும் நிரம்பி வழியும் பிரயாணிகளைக் கொண்ட நுவரெலியாவிற்கும், தலவாக்கெலைக்கும் இடையே ஒரு சில இ.போ.ச. பஸ்களையே காணமுடிகிறது. அதுவும் பகல் 1.00 மணிக்குப் பின் மிகவும் மோசமான கஷ்டத்தையே மக்கள் அனுபவிக்கின்றனர். ஒரு சில பிரத்தியேக பஸ்காரர்கள் எவ்வளவு கூட்டம் சேர்ந்தாலும் குறைந்தது 1 மணித்தியாலம் கூட பஸ் தரிப்பிடத்திலிருந்து நகர்த்துவதேயில்லை.

பச்சிளங்குழந்தைகளை சுமந்து கொண்டும் சில தாய்மார்கள் பஸ்ஸில் இடம் பிடிக்க ஓடுவதையும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் குழந்தைகளின் அவல நிலையையும் சகித்துக் கொள்ள முடியவில்லை. முன்பு நடைமுறையிலுள்ள ஒரு பஸ் குறிப்பிட்ட 20 நிமிடத்தில் புறப்பட வேண்டும் என்ற முறை இப்போது கடைப்பிடிக்க படாததும் இதற்கொரு முக்கிய காரணமாகும். எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் செயல்பட்டு சிறந்த பஸ் சேவையை செய்து தருமாறு 'முரசு' மூலம் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

-ஷண்-நுவரெலியா


## எழுது வினைஞர் தேவை

தலைநகரில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு எழுது வினைஞர் தேவை. தகைமைகள்:

- ★ தமிழில் நல்லறிவும் பிறமொழியாற்றலும்,
- ★ தமிழ், ஆங்கிலம் தட்டச்சில் தேர்ச்சி,
- ★ கணக்கியல் தொடர்பான அறிவு.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா. தினமுரசு
வாரமலர்
த.பெ.எண்: 1772
கொழும்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

### நாரதர்

# வடபுலப் போரில் திடீர் திருப்பங்கள்!

**வ**டபுலப் போர் முனையில் பத்து நாட்களுக்குள் காட்சி மாற்றங்களும், திருப்பங்களும் ஏற்பட்டு முடிந்திருக்கின்றன.

முதல் ஐந்து நாட்களும் படைத்தரப்பு புலிகளின் எதிர்ப்பின்றி தனது கரத்தை உயர்த்திக் காட்டிக் கொண்டிருந்தது.

மினிபஸ் ஒன்றின் நடத்துநர் கூவிக் கொண்டிருப்பது போல-'மாதகல், பண்டத்தரிப்பு, அராலி, சங்கானை, அடுத்த இறக்கம் அராலித்துறை' என்று படைத்தரப்பு சொல்லிக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும் முதல் ஐந்து நாட்கள் நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் பலியானவர்கள் ஆக ஐந்து பேர் மட்டும்தான் என்பதுதான் ஆச்சரியம்.

ஐந்து நாட்களில் மொத்தமாக ஆறு புலிகள் பலியாகியிருந்தனர். அதில் ஒருவர் வெடிவிபத்தில் பலியாகியிருந்தார்.

படையினர் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் பாது காப்பான இடங்களில் சேர்ந்த பின்னர் மோதலை சந்திப்பதே சரியானது என்று புலிகள் திட்டமிட்டனர்.

நீண்டதொரு நிலப்பரப்பை கைப்பற்றிப் படைகள் தமது ஆட்பலத்தை பரவலாக்கும் போது தாக்குதல் நடத்துவதுதான் அதிக வாய்ப்பாக இருக்கும் என்பது புலிகளது தந்திரமாக இருந்தது.

கிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் மக்கள் வாழ்ந்த பகுதிகளை பதினைந்தாயிரம் படையினரால் நிரப்ப முடியாது என்பது புலிகளுக்குத் தெரிந்தேயிருந்தது.

இதனால்தான் முதல் ஐந்து நாட்களும் மோதலே இல்லாத புதிரான போர் முனையில் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன.

முன்னேற்றப் பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்பித்த மறுநாள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மதகுரு கொழும்புக்குப் புறப்பட்டார்.

அவரிடம் புலிகளது அரசியல்துறை துணைத்தலைவர் கரிகாலன் உறுதியான தொனியில் "ஆண்டவரே இன்னும் நான்கு நாட்களுக்கு பின்னர் கேள்விப்படுவீர்கள் பதிலடியை!" என்று சொல்லியிருக்கிறார்.

11.07.95 அன்று புலிகளது வன்னிப் பிராந்திய அணி கிளாலிக் கடலேரி வழியாக யாழ் குடாநாட்டுக்குள் பிரவேசித்தது. ஏறக்குறைய 500 புலிகள் வரை ஆயுதங்களோடு சென்று இறங்கினார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தாக்குதல் நடத்த அனுப்பப்பட்ட அணியையும் யாழ்குடா நாட்டுக்கு புலிகள் தருவித்துக் கொண்டனர்.

படைகள் முன்னேறி தம்மை நிலைப் படுத்திக்கொண்ட பின்னரே கரும்புலித் தாக்குதல்கள் நடத்துவதும் சுலபமாக இருக்கும்.

இல்லாவிட்டால் கரும்புலிகள் தமது இலக்கை நெருங்கும் முன்னரே அழிக்கப் பட்டுவிடும் வாய்ப்பு இருக்கும்.

ஆக, புலிகள் பதுங்கி விட்டதாக படைத்தரப்பு நினைத்துக் கொண்டிருந்த போது புலிகள் ஒரு பாய்ச்சலுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் ஒரு கேள்வி கிளம்பியது- "பிரபா எங்கே?" என்பதுதான் கேள்வி.

புலிகளது ஆதரவாளர்கள் இருவரும் அதில் பலியாகியிருந்தனர்.

"புலிகள் பின்வாங்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று படைத்தரப்பு சொல்லிக் கொண்டிருந்தது. 80 புலிகள் பலி என்றும் கணக்குக் காட்டப்பட்டது.

யுத்தத்தில் இவ்வாறான பிரசாரங்கள் சகஜமானவை. தாம் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகும் போது மறு தரப்பை ஏதாவது ஒருவகையில் உயர்த்திக் காட்டி சித்தரிக்க வேண்டியிருக்கும்.

தாம் தாக்குதல் நடத்தும்போது மறு தரப்பை பலவீனமாகக் காட்ட வேண்டியிருக்கும். சகல யுத்தங்களின் போதும் அவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம் தான்.

ஆனால், பிரசாரம் செய்பவர்களுக்கு தமது பிரசாரம் வேறு, உண்மையான கள நிலவரம் வேறு என்பது தெரிந்திருக்க வேண்டும்.

படைத்தரப்பும், வடபுலப் போர் முனையில் இருந்து வந்த செய்திகளால் பூரித்துப் போன அரச தலைமைப்பீடமும் தமது பிரசார மாயைகளுக்குள் தாமும் சிக்கிக் கொண்டார்கள்.

புலிகள் பயந்து திகைத்து ஓடத் தொடங்கி விட்டார்கள் என்றே படைத் தரப்பு நம்பிக் கொண்டிருந்தது.

அதனால்தான் யாழ் நகரைக் கைப்பற்றி தமது பலத்தை நிரூபிக்கப் போவதாக அவசரப்பட்டு அறிவிக்க வேண்டி ஏற்பட்டது.

முதல் ஐந்து நாட்களும் நிதானமாகப் போர் முனை நிலவரத்தை ஆராய்ந்திருந்தால் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்று படைத்தரப்பு ஊகித்திருக்க முடியும்.

படைகள் முன்னேறிச் சென்ற பகுதிகளில் புலிகளது பல முகாம்கள் இருந்தன.

அந்த முகாம்களை படைகள் கைப்பற்றியபோது புலிகள் அங்கு இருந்தமைக்கான அடையாளமாக பதுங்கு குழிகள் மட்டுமே இருந்தன.

எவ்விதமான பதற்றமும் இல்லாமல் தமது ஆயுதங்களையும், உணவுப் பொருட்களையும் வாகனங்களில் ஏற்றி எடுத்துக்கொண்டு புலிகள் சென்று விட்டனர்.

ஆக, புலிகளது பின்வாங்குதல் என்பது போர் நடவடிக்கையின் ஒரு தந்திரமாக முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றுதான்.

அவசரத்திலோ அல்லது போரிட்டு விட்டு தாக்குப்பிடிக்க முடியாத நிலையிலோ பின்வாங்கும்போது தமது முகாம்களுக்குள் உள்ள பொருட்களை எல்லாம் அப்புறப்படுத்திக் கொண்டிருக்க நேரமிருக்காது.

9ம் திகதி காலையில் புக்காரா விமானம் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது தொடர்ந்து ஆறு குண்டுகளைப் போட்டது.

அதனையடுத்து தமது அணிகளை புலிகளின் தலைமை முற்றாகவே பின்னால் எடுத்துக் கொண்டது.



'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின்போது வலிகாமம் மேற்கிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து செல்லும் காட்சி

## பிரபாகரன் எங்கே?

படைத்தரப்பு முன்னேறி வருவதால் பிரபா முல்லைத்தீவுக்கு சென்று விட்டதாக ஒரு கதை பரவியது.

ஆனால், பிரபாகரன் எங்கும் போக வில்லை. யாழ்குடா நாட்டில்தான் இருந்தார். முன்னேற்றப் பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முதல் நாள்தான் பிரபாகரனும், கடற்புலித் தளபதி சூசையும் மண்டைதீவு முகாமில் கைப்பற்றிய ஆயுதங்களை பார்வையிடும் புகைப்படங்கள் யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

மண்டைதீவுத் தாக்குதலில் சூசை காயமடைந்தார் என்று படைத்தரப்பு கூறியிருந்தது. ஆனால் சூசையோ ஒரு சேதமுமில்லாமல் கைப்பற்றிய ஆயுதங்களை பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்.

ஆக, பிரபா யாழ்குடா நாட்டில்தான் இருந்தார். ஆனால் வடமராட்சியிலோ, யாழ் நகரை அண்டிய பகுதியிலோ அவர் இருக்கவில்லை என்று மட்டும் சொல்ல முடியும்.

காங்கேசன்துறையில் கடற்படை கப்பலை தகர்க்கப் புறப்பட்ட நான்கு கடற் கரும்புலிகளோடு பிரபாகரன் சேர்ந்து எடுத்த புகைப்படங்களும் யாழ்ப்பாணம் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

படைத்தரப்பு நடவடிக்கையை ஆரம்பித்து முதல் கட்டத்தை பூர்த்தி செய்து விட்டதாக அறிவித்த மறுநாள்தான் புலிகளது பாய்ச்சல் ஆரம்பித்தது.

சரியாக ஐந்து நாட்களின் பின்னர் புலிகளின் தாக்குதல் பிரிவுகள் அதிகாலை ஒரு மணி 8 நிமிடமளவில் நடவடிக்கையை ஆரம்பித்தபோதுதான் வடபுலப் போரில் உண்மையான மோதல் தொடங்கியது.

மக்களே இல்லாத நிலப்பரப்பில் நின்று புலிகளது கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்வது எத்தனை கடினமானது என்று படைத்தரப்பு புரிந்து கொண்டது.

5 நாள் நடவடிக்கையால் உற்சாகமாக இருந்த படைத்தரப்பின் மனோபாவம், நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒன்றான 'புக்காரா' வீழ்த்தப்பட்டதோடு சரியவே செய்திருக்கும்.

காங்கேசன்துறையில் கடற்படையோடு புலிகள் நடத்திய சமரில் ஒரு கட்டளைக் கப்பலும் தரையிறக்க கப்பல் ஒன்றும் தாக்கப்பட்டன.

எனினும் - கடற்புலிகள் எதிர்பார்த்துச் சென்றது துறைமுகத்தில் இருந்த சகல படகுகளையும் தகர்ப்பதற்காகவே.

நான்கு கடற்கரும்புலிகள் உட்பட 17 கடற் புலிகளை இழந்து புலிகள் பெற்றுள்ள பயன் போதுமானது என்று மதிப்பிட இயலவில்லை. புலிகளால் முன்பெல்லாம் தகர்க்கப்பட்ட கடற்படைக் கப்பல்களுக்கு நான்கு பேருக்கு மேல் புலிகள் பலியாக வில்லை. 1994 இல் காங்கேசன்துறையில் கட்டளைக் கப்பல் ஒன்றை ஒரே ஒரு கடற் கரும்புலியை வைத்தே புலிகள் தகர்த்திருந்தனர். கப்டன் அங்கையற்கண்ணி என்னும் கடற் கரும்புலியே அதில் பலியானவர்.

ஆனாலும், கடற்படைக் கப்பல் கரும்புலிகளால் தாக்கப்பட்ட செய்தி படைத் தரப்புக்கு மற்றுமொரு அதிர்ச்சி வைத்தியமாக அமைந்துள்ளது. அது தவிர கடல் போக்குவரத்தில் படைகளுக்கு தடையற்ற ஒரு நிலை இருக்கப் போவதில்லை என்பதும் பாதகமான அம்சம்தான்.

புலிப் பாய்ச்சல் நடவடிக்கைக்குப் பின்னர் படைத் தரப்பினர் தாம் கைப்பற்றிய நிலைகளில் இருந்து பின்வாங்கியுள்ளனர்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் முன்னேற்றப் பாய்ச்சல் நடவடிக்கை அரசை விட பல வழிகளில் புலிகளுக்குச் சாதகமாக அமைந்து விட்டது.

முதலாவது மாபெரும் சாதகம், நவாலி தேவாலயம் மீது புக்காரா போட்ட ஆறு குண்டுகள், வடபுல மக்கள் அரசு மீது கொண்டிருந்த நம்பிக்கை மீது நீண்ட காலத்தில் கூட சீர் செய்ய முடியாத சிதைவை ஏற்படுத்தி விட்டன.

புலிகள் அவசரப்பட்டு யுத்தத்தை ஆரம்பித்து விட்டார்களோ என்று சந்தேகப் பட்ட மக்களைக்கூட, அரசு தன்னிடமிருந்து விலகிப் போகச் செய்து விட்டது.

புலிகளே முதலில் யுத்தத்தை ஆரம்பித்தனர் என்ற விடயம் அரசுக்கு வெளியுலகில் தன்னை நியாயப்படுத்தச் சாதகமாக இருந்தது.

அது தவிர, சமாதானத்தை விரும்பும் அரசு என்ற தோற்றப்பாடும், மனித உரிமைகள் பற்றிய ஜனாதிபதியின் பேச்சுக்களும் அரசுக்கு வெளியுலக அபிமானத்தை தேடிக் கொடுத்திருந்தன.

ஆனால், நவாலி தேவாலயத் தாக்குதல் அரசுக்கும், அதன் வெளியுலக செல்வாக்குக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி விட்டது.

இதைவிட மோசம்-தேவாலயத் தாக்குதலுக்கான பழியை புலிகள் மீது போட்டு விடலாம் என்று அரசு நினைத்ததுதான்.

பொய்யும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று சொல்லுவார்கள். விமானத் தாக்குதலுக்கு உள்ளான தேவாலயத்தை புலிகளின் தாக்குதல் என்று நிரூபிக்க நினைத்ததுதான் வேடிக்கை.

காரணம், வடபுலத்தில் இருந்து தலைநகருக்கு அனுப்பப்பட்ட செய்திகள் அரச தலைமைக்கு உற்சாக மூட்டுவனவாக அனுப்பப்பட்டளவுக்கு, உண்மைகளை கொண்டதாக அனுப்பப்படவில்லை.

அதனால்தான் தேவாலயம் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம். புலிகளிடமும் ஷெல் தாக்குதல் வசதியிருப்பதால் புலிகளை நோக்கி கை காட்டிவிடலாம் என்று நினைத்து விட்டார்கள்.

ஆனால், செஞ்சிலுவைச் சங்க அறிக்கை அரசு சொல்வதில் உண்மையில்லை; அரச விமானமே குண்டு போட்டது என்ற செய்தியை உலகறியச் சொல்லி விட்டது.

இதனால்-செஞ்சிலுவைச் சங்கத்தோடும் அரசு மல்லுக்குப் போக வேண்டியதாகி விட்டது.

உண்மையில் தேவாலயம் மீது குண்டு வீசுமாறு அரச உயர் பீடமோ, அல்லது படை உயரதிகாரிகளோ உத்தரவிட்டிருக்க முடியாது.

ஆனால், யுத்தம் என்று படைகள் களத்தில் இறங்கி விட்ட பின்னர் அரசு தனது கடிவாளத்தை இழந்து போய் விடுகிறது.

கடிவாளம் தமது கையில் இருந்து நழுவிப் போனதை ஒப்புக் கொள்ள முடியாத நிலையில் படைகளது நடவடிக்கைகளை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டு விடுகிறது.

சந்திரிக்கா அரசுக்கும் அப்படியொரு கட்டாயம்தான் ஏற்பட்டுள்ளது. ஆனால், ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள் மிக அதிகம் என்பதால் அதனை மூடிமறைக்க அரசு செய்யும் ஒவ்வொரு முயற்சியும் அரசு தனது நம்பகத் தன்மையை இழக்கவே வழி வகுக்கும்.

நவாலி தேவாலய இடிபாடுகள், அவற்றுக்கிடையே சிக்கிய மனித உடல்கள், 60க்கு மேற்பட்ட சிறுவர்கள் பலியாகிய காட்சிகள், ஷெல் அடிகளால் வீதிகளில் கிடக்கும் மனித உடல்கள் யாவும் புலிகளால் வீடியோவில் ஆவணப்படுத்தப் பட்டு விட்டன.

இவையெல்லாம் விரைவில் வெளியுலகெங்கும் செல்லப்போகின்றன. அரசின் மறுப்புகள் வலுவிழக்கப் போகின்றன.

ஆக, பிரசாரப் போரில் புலிகளிடம் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாகப் போகிறது.

'முன்னேற்றப் பாய்ச்சல்' நடவடிக்கை வடபுலத்தில் உள்ள தமிழ் மக்களிடம் புலிகள் பற்றிய மாயைகளை உடைத்து விட்டதாக அரசு சொல்கிறது.

அது சரியான கூற்றாகத் தெரியவில்லை. பெருந்தொகையாகப் படைகள் வந்ததால்தான் புலிகள் பின்வாங்கினார்கள் என்பது பரவலாகத் தெரிகிறது. அதனால், ஆட்பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று புலிகள் கூறுவது இனி நியாயமாகிவிடும்.

படைத்தரப்பு உள்ளே வந்தால் பேரழிவுகள் ஏற்படும் என்று இனி புலிகள் சொல்லும்போது, அந்தக் கூற்றுக்கு 'ஆட்திரட்டல்' தந்திரம் என்று முலாம் பூச முடியாதளவுக்கு நிலமை மாறிவிட்டது.

ஆட்பலத்தில் உயர்ந்த படை நேரடிச் சமர்களில் கையோங்க முடியும். ஆனால், தான் போரிடும் தளத்தில் புதிய எதிரிகளை உருவாக்கும் நடவடிக்கைகளை அது தொடருமானால் அப்படையால் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முடியாது போகும்.

ஒரு யுத்தத்தில் வெல்ல நான்கு பிரதான காரணிகள் அவசியம்.

(1) ஆட்பலம். (2)ஆயுத பலம். (3) மனோபலம். (4) நின்று போராடும் தளம்.

ஆட்பலத்தில் மட்டுமே படைத்தரப்பு உயர் நிலையில் இருக்கிறது. ஆயுத பலத்தைப் பொறுத்தவரை இரு தரப்புமே ஓரளவு சமநிலையில் உள்ளன. ஆயுத பலத்தில் புலிகளைவிட மேலதிகமாக போர் விமானங்கள், டாங்கிகள், போர்க் கப்பல்கள் அரச படைகளிடம் இருக்கின்றன.

ஆனால் - அவற்றைப் பயன்படுத்தினால் இழப்பு புலிகளைவிட பொது மக்களுக்கே அதிகமாகும். அது புலிகளுக்கே சாதகமாகும். தவிர - குடியிருப்புக்கள் நிறைந்த வடபுலத்தில் நடக்கும் போரில் விமானப்படை பலம் தம்மிடம் மேலதிகமாக இருப்பதால் படைத் தரப்புக்கு சாதகம் ஏற்பட்டுவிடாது. எனவேதான் மோதலில் ஈடுபடக் கூடிய ஆயுதபலம் சமநிலையில் உள்ளது என்று கூறவேண்டியுள்ளது.

மனோபலம், நின்று போராடும் தளம் - இவை இரண்டிலும் புலிகளின் தரப்பு உயர்ந்த நிலையில் இருக்கிறது.

எனவே - வடபுலப் போர் சுலபமாக முடிந்து விடக் கூடிய ஒன்றல்ல என்பதை முன்னேற்றப் பாய்ச்சலும் நிரூபித்துள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



**வ**டபுலம் முழுவதும் கையில் வரப்போகுது எண்டு பை நிறைய பட்டாசு வாங்கி வைத்திருந்தவைக்கு நஷ்டம் பல நூறுரூபாய்களாம். மலை சூழ் பகுதியிலை பட்டாசுகள் வாங்கி வைத்திருந்த பெரும்பான்மை இன சோதரர்கள் 'புக்' விழுந்தவுடனை பட்டாசுகளை அமுக்கி மறைச்சுப் போட்டினமாம். சிறுபான்மை இனப் பகுதிகளிலை பட்டாசு சத்தம் தடபுடலாய் கேட்டுதாம். 'புக்' விழுந்ததுக்கு மகிழ்ச்சி ஆரவாரமாம். ஏட்டிக்குப் போட்டி எண்டு சொல்லுறது இதுதான். சபாஷ்! சரியான போட்டி!

**வி**மானியின் இறுதிக் கிரியைக்கு சென்ற அதிகாரமுள்ள ஒருவர்மீது அதிருப்திக் கணைகள் வீசப்பட்டதாம். ரெண்டு எழுத்தாரிடம் ஏவுகணை இருக்கிறது தெரிந்தும் அந்தப்பக்கம் போகச் சொல்லிப் போட்டியளே எண்டு தந்தையும் கவலையோடு கலந்த கண்டனத்தை தெரிவிச்சவராம். விமானியின் தந்தை ஒரு கருத்தை சொன்னவராம் "இனிமேல் விமானி தேவை எண்டு கேட்காமல் தற்கொலைப் படைக்கு ஆள் தேவை எண்டு கேளுங்கோ. இரண்டுமே ஒண்டுதான்" எண்டவராம்.

**ம**லையக தனித்துவத் தலைவர் வடபகுதி விவகாரம் தொடர்பாக ஒரு கண்டனம்கூட உடனடியாகத் தெரிவிக்கேல்லை. கண்டனம் விடலாம் எண்டு கேட்டவையைக்கூட "கொஞ்சம் பொறுங்க, பார்க்கலாம்" எண்டு தடுத்துப் போட்டாராம். என்ன சூக்குமம் எண்டு விளங்கேல்லை. எதிரணித் தலைவர் ஒரு நிகழ்ச்சியிலை தனித்துவ தலைவரிடம் 'வடநிலவரம்' பற்றி அபிப்பிராயம் கேட்டவராம். அதுக்கு தனித்துவ தலைவர் சொன்ன பதில், "இப்போது அவர்கள் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். இனி அவர்களின் முறைதானே!" எல்லாம் சரி பாருங்கோ பிறகு ஏன் பகிரங்கத்தில் மௌனம்?

"**அ**ரசுக்கு நாம் ஆதரவு கொடுப்பது புலிகளோடு பேச்சு நடத்தி பிரச்சனையைத் தீர்க்கமட்டும்தான். அதை மீறினா அரசை வீழ்த்தவும் தயங்கோம்." ஒரு பத்திரிகையில் தடித்த எழுத்தில் முன்பக்கத்தில் வந்த பேச்சு இது. பேசியவர் கிழக்கின் சிங்கத்தார். அடடே சண்டை உக்கிரமாகி சனமும் சாகுதே; கௌரவ சிங்கத்தார் எங்கே எண்டு அக்கறையா விசாரித்துப் பார்த்தனான். அவர் "கோண் டு லண்டன்." மகனின் கலியாணவீடு அங்கை அமர்க்களமாக நடக்குதாம். நல்ல காலம் பாருங்கோ! அவர் கல்யாணவிஷயத்திலை ஒடுப்பட்டுத் திரியுறதாலை அரசு தப்பிக் கொண்டுது. இல்லாட்டி....

**யா**ழ் தீவுப் பகுதி படையில் இருந்து ஒருவர் தப்பிப் போய் ரெண்டு எழுத்தாரிடம் சரணடைஞ்சவர். அவர் சொல்லித்தான் தீவு முகாம் தாக்கப்பட்டது, எண்டும் பிரபல ஆங்கிலப் பத்திரிகை எழுதியிருந்தது. அதை ஒரு தமிழ் பத்திரிகையும் (பக்குவமாக மொழி பெயர்த்து விட்டு-நன்றியும் போடாமல்) மறுபிரசுரம் செய்திருந்தது. எனக்குள்ள கேள்வி ரெண்டு எழுத்தார் சரண் எண்டு செய்தி வெளியிடுகிற அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள், ரெண்டு எழுத்தார் வசம் சிக்கும் தமது தரப்பார் பற்றி ஏன் பாருங்கோ செய்தி தாறேல்லை?

**கொ**ழும்பில் வங்கியொன்றின் விழா. அந்த வழியாக எதிரணித் தலைவர் வாகனத்தில் போனவராம். அவரும் விழாவுக்குத்தான் வருகிறார் எண்டு நினைச்ச பொலிஸ்காரர் ஒருவர் ஓடிவந்து "சேர் அந்த வழியாகத்தான் போக வேண்டும்" எண்டு சொன்னவராம். எதிரணித் தலைவர் சிரித்துக்கொண்டே சொன்னாராம், "இன்று நான் வருவதாக இல்லை. இன்னும் ஆறு மாதத்தில் வந்து விழாவை நானே நடத்துவேன்!" பிரதான எதிரணி ஏதோ ஒரு கணக்குப் போடுது எண்டு தெரியுது.

**தி**ருவான மலையில் தந்தையின் சிலையை அரவது சீடர்களே திரும்பிப்பார்க்கேல்லை. தம்பிமார்தான் கட்டித் திறந்து வைச்சிருக்கினம்.

**க**விதையை வாளாகப் பாவிப்பவர் கவிஞர் இன்குலாப். உதாரணத்திற்கு ஒன்று:

"வாழ்க்கை என்பது
காதலின் கடிதம்;
புன்னகை
அதன் கையெழுத்து"

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆடுகள் சிக்கிய புலிகளின் கண்ணிவெடி

ஆரம்பிக்கவில்லை. நேரடி மோதல்களிலும் பெரிதாக ஈடுபடும் பலம் இருக்கவில்லை.

கெரில்லா தாக்குதல் நடத்துகிறவர்கள் மீது கவச வாகன தாக்குதல்கள் நடத்துவது பெரிய பயனை ஏற்படுத்தாது. முக்கியமாக டாங்கிகளால் ஒன்றும் செய்ய முடியாது.

## ஆடுகள் சிக்கின

உதாரணத்திற்காக ஒரு சம்பவம் கூறுகிறேன்–

1983 மார்ச் 4ம் திகதி பரந்தனுக்கருகே உமையாள்புரத்தில் புலிகள் ஒரு தாக்குதல் நடத்தியது பற்றி முன்னரே கூறியிருந்தேன்.

இத் தாக்குதலுக்காக நிலக்கண்ணி வெடிகளை புதைத்துவிட்டு புலிகள் காத்திருந்தனர்.

கண்ணிவெடிகளைக் கையாள்வதில் பூரண தேர்ச்சி பெறாத காலகட்டம் அது.

கண்ணிவெடிகளை புதைத்திருந்த இடத்திற்கு அருகே இராணுவ வாகனங்கள் வந்து கொண்டிருந்தன.

வாகன இரைச்சலுக்குப் பயந்து ஆட்டுக் குட்டிகள் மிரண்டு ஓடத் தொடங்கின. மிரண்டு ஓடிய ஆடுகள் கண்ணிவெடிகளை மிதித்தபோது அவை வெடித்து விட்டன.

எதிர்பாராத இச்சம்பவத்தால் புலிகளில் பத்துப்பேர் கொண்ட குழு திகைத்தபோது இராணுவ கவச வாகனங்கள் துப்பாக்கி ரவைகளை பொழிந்தன.

வீதிக்கு அருகே தண்டவாளம். அதன் இரு புறமும் வெட்டை வெளி.

கிட்டுவின் கையில் ஜி.3.ரகத்துப்பாக்கி இருந்தது. கவச வாகனத்தை நோக்கி கிட்டு சுடத்தொடங்கினார். சாரதி காயமடைந்து போக, கவச வாகனம் சரிந்து கவிழ்ந்தது.

இதன் பின்னரே கிட்டுவை இயக்கத்தின் தாக்குதல் பிரிவின் இரண்டாவது பொறுப் பாளராக பிரபாகரன் நியமித்திருந்தார்.

இனி-84 இல் நடந்த தாக்குதலுக்கு

## தொடர் தாக்குதல்கள்

இத் தாக்குதல் நடவடிக்கை வடக்கில் படையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் யாழ் குடா நாட்டில் இரண்டு நிலக்கண்ணிவெடித் தாக்குதல்கள் புலிகளால் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து பத்துமைல் தொலைவில் உள்ள அச்சுவேலி-வசாவிளான் வீதியில் ஒரு நிலக்கண்ணிவெடித் தாக்குதல்.

1.11.84 அன்று நடந்த இத்தாக்குதலில் இராணுவக் கவச வண்டி ஒன்று நாசமானது. ஒன்பது இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

2.11.84 அன்று தொண்டமானாறு- பலாலி வீதியில் இராணுவ கவசவண்டி ஒன்று புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது. இராணுவத்தினர் ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

இலங்கை நிலவரங்கள் தொடர்பாக வெளியுலகம் கொண்டிருந்த கருத்துக்கள் சிலவற்றை தெரியப்படுத்திவிட்டு மேலே தொடரலாம்.

## ‘நியூஸ்வீக்’ பார்வையில்

அமெரிக்காவில் இருந்து வெளியிடப் படும் ‘நியூஸ் வீக்’ சஞ்சிகை வெளியிட்ட விமர்சனத்தின் ஒரு பகுதி இது:

“கொல்லப்படும் தமிழர்களில் மிகச் சிலரைத்தவிர ஏனையோர் பயங்கர வாதிகளே” என்று அரசாங்கம் கூறுவதை சிங்கள மக்களில் பலர்கூட நம்ப மறுக்கிறார்கள்.

இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காணுமாறு இலங்கை அரசை இந்தியா வற்புறுத்திவருகிறது.

இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களும், சிங்களவர்களும் தங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் விரைவாகத் தீரும் என்னும் நம்பிக்கையை இழந்து விட்டார்கள்.(நியூஸ்வீக் 27.8.84)

## ஐ.நா.வில் பேச்சு

இனப்பாதுகாப்பு தொடர்பாக ஆராய ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு குழு இருக்கிறது.

அக் குழுவின் செயற்குழு 21.8.84. அன்று ஜெனிவாவில் கூடியது. இக்குழுவில் இந்தியாவின் உறுப்பினர் சி.எம்.சி. பண்டாரே.

இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை அக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார் பண்டாரே.

திரு.பண்டாரே அங்கு பேசியதில் முக்கியமான பகுதிகள் இவை;

**“எனது கருத்துப்படி தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இணக்கமான அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதில் இலங்கை அரசு அக்கறை செலுத்தவில்லை.**

**தமிழர்களுக்கு எதிரான வன்முறை என்பது இலங்கை அரசின் நேரடி நடவடிக்கையாகிவிட்டது. இதற்கே அரசு தனது படைகளைப் பயன்படுத்துகிறது.**

**அரச பயங்கரவாதத்தைத் தார்மீக ரீதியில் நியாயப்படுத்தவே முடியாது. சமாதான-சாத்வீக வழிகளில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவேண்டும். அத்தீர்வு தமிழ் மக்களை பாதுகாப்பதாகவும், மறுபடியும் பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்ப்பதாகவும் அமையவேண்டும்.”**

அது இந்தியப் பிரதிநிதியின் பேச்சு.

## ‘பிளிட்ஸ்’ பாய்ச்சல்

இந்தியாவின் பிரபலமான முற்போக்குப் பத்திரிகையான பிளிட்ஸ் (BLITZ) 18.8.84 இல் எழுதியிருந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு பகுதி இது:

“சாதாரணக் குடிமக்களுக்கு எதிராகத் தமிழர்வாழும் வட இலங்கையில் இராணுவமும், கடற்படையும் சேர்ந்து நடத்திய வன்செயல்களால் உயிரிழந்தவர்கள் பல நூற்றுக்கணக்கானோர்.

அதே சமயம் தமிழ் பகுதிகள் பல பேய்கள் நடமாடும் வெட்டவெளிக் காடுகள் **ஆக்கப்பட்டுள்ளன.**

**பயங்கரவாத எதிர்ப்பு கண்காணிப்பு நடவடிக்கை என்ற பெயரில் இராணுவ டாங்கிகளும், கவச வண்டிகளும் கிராமங் களை தரைமட்டமாக்கி உள்ளன.**

**தனது சொந்தக் குடிமக்களையே சிறீலங்கா அரசு குண்டுவீசி அழித்துள்ளது.**

**பஞ்சாபில் இடம்பெற்ற பயங்கரவாதம் பிந்திரன்வாலே கூட்டத்தினால் பின்பற்றப் பட்டது. இலங்கையிலோ பயங்கரவாதத்தில் அரசாங்கமே ஈடுபட்டுள்ளது.”**

இவ்வாறு கடும் விமர்சனம் வெளி யிட்டிருந்தது ‘பிளிட்ஸ்’பத்திரிகை.

‘வோஷிங்டன் போஸ்ட்’ பத்திரிகையாளர் வில்லியம் கௌயர் எழுதிய குறிப்பில் படைகளது நடவடிக்கைகள் பழிவாங்கும் விதமாக அமைந்துள்ளன என்று தெரிவித் திருந்தார்.

**அவரது குறிப்பிலிருந்து ஒரு பகுதி இது:**

**இலங்கையின் வட மாகாண தலை நகரான யாழ்ப்பாணப் பட்டினம் ஆவிகள் நடமாடும் மயான அமைதியுடன் காணப் படுகிறது. அரசு படைகள் தமிழ் புலிகளை அடக்குவதாகக் கூறிக்கொண்டு அப்பாவிச் சாதாரண மக்கள் மீது தம் மனம்போன போக்கில் தாக்குதல் நடத்திவருகிறார்கள்.”**

இவையெல்லாம் 1984 ஆகஸ்ட்– செப்டம்பர் மாத காலத்தில் படையினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளின் விளைவு களையடுத்து எழுந்த விமர்சனங்களாகும்.

## இரகசிய வானொலி

இக்கால கட்டத்தில் புளொட் அமைப் பினரால் இரகசிய வானொலிச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலிருந்து இயங்கிய அந்த வானொலிச் சேவையின் பெயர் ‘தமிழீழத்தின் குரல்’

சிங்களத்திலும் ‘தமிழீழத்தின் குரல்’ ஒலிபரப்பப்பட்டது. சிங்கள மக்கள் பலர் அந்த ஒலிபரப்பைக் கேட்டு வந்தனர். தென் னிலங்கையில் பரபரப்பாகப் பேசவும் பட்டது.

‘தமிழீழத்தின் குரல்’ ஒலிபரப்பைக் கேட்டு வந்தவர்களில் முக்கியமான ஒருவர் அப்போது பிரதமராக இருந்த பிரேமதாசா.

இலங்கையின் முதலாவது ‘இரகசிய வானொலி சேவை’ அதுதான்.

இதன்பின்னர்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரால் தமிழ் நாட்டிலிருந்து ‘ஈழவானொலி’ சேவை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது வடக்கில் புலிகளால் இரகசிய வானொலி ஒலிபரப்பு நடத்தப்பட்டு வருகிறது. ‘புலிகளின் குரல்’ என்பது அதன் பெயர்.

# ’84 இல் இராணுவ நடவடிக்கை சீறி வந்த கண்டனக் கணைகள்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

36



பிரிகேடியர் ஆரியப்பெரும

## அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

### கவச வாகனங்கள்

இராணுவத்தின் வட பிராந்திய அதிகாரிகளில் ஒருவராக இருந்தவர் ஏ.ஆரியப் பெரும.

திறமையான இராணுவ அதிகாரி. கேர்ணல் பதவி வகித்த ஆரியப் பெருமவை வடபகுதிக்கு அனுப்பிவைத்தது அரசு.

இராணுவ ரீதியில் அவரது செயற்பாடுகள் சுறுசுறுப்பானவையாக இருந் தமையால் பிரபலமானவராக அறியப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் தமது கவச வண்டிகள் சகிதம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு.

உண்மையில் அக்காலகட்டத்தில் கவச வாகனங்களைப் பயன்படுத்தி மோதல் நடத்த வேண்டிய அவசியம் எதுவும் இருக்கவில்லை.

இராணுவம் குறித்து பயம் கலந்த பிரமையை ஏற்படுத்துவதற்காகவே கவச வாகனங்கள் சகிதம் ரோந்துகள் நடைபெறுவதுண்டு.

அப்போதெல்லாம் புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களும் கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தக்கூடிய பலத்தில் மட்டுமே இருந்தனர்.

இயக்கங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் பெரும் முகாம்கள், காவலரண்கள் என்பவற்றை நிறுவி செயற்படவும் செல்லுவோம்.

### குறியில் கேணல்

கேணல் ஆரியப் பெருமவும் இரண்டு கவச வாகனங்கள் சகிதம் ரோந்து சென்று கொண்டிருந்தார். கவச வாகனங்களுக்கு முன்பாக சென்றுகொண்டிருந்த ஜீப்பொன் றில் அவர் அமர்ந்திருந்தார்.

கட்டுவன்-தெல்லிப்பளை வீதியில் நிலக் கண்ணிவெடிகளை புதைத்து வைத்துவிட்டுப் புலிகள் காத்திருந்தனர்.

முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப்வண்டி நிலக்கண்ணியில் சிக்கியது.

பின்னால் வந்த கவச வாகனங்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

கேணல் ஆரியப் பெரும உட்பட எட்டு இராணுவத்தினர் அந்த நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் பலியானார்கள்.

பண்டிதர், கிட்டு ஆகியோரும் புலிகளின் தரப்பில் அத்தாக்குதலில் பங்கு கொண்டனர்.

யாழ் பிராந்தியத்திற்கு புலிகளின் பொறுப்பாளராக அப்போதிருந்தவர் பண்டிதர்.

கேணல் ஆரியப் பெரும குழுவினர் மீது தாக்குதல் நடந்தது 19.11.84 இல்.

தாக்குதலில் பலியான ஆரியப் பெரும வுக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனா பிரிகேடியர் பதவி வழங்கி கௌரவித்தார்.

### பாதுகாப்பு நிதி

தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவதில் அமைச்சர் அத்துலத்முதலி தீவிரமாயிருந்தார்.

இதனையடுத்து புலிகள் தாமும் தேசிய பாதுகாப்பு நிதி திரட்டப்போவதாக அறிவித்தனர்.

‘தமிழீழ தேசியப் பாதுகாப்பு நிதி’ என்று தமது நிதிதிரட்டலுக்கு பெயர் சூட்டிய புலிகள் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் நிதிகோரி வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பாக பிரபாகரனால் பிரத்தியோக வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டது.

அந்த வேண்டுகோளில் பிரபா வெளியிட்ட சில கருத்துக்கள் முக்கியமானவை.

வடபுலப் போரில் இன்றுள்ள நிலவரத்தில் பிரபாவின் மனநிலை எப்படியிருக்கும் என்றும் ஊகிக்கவும் அந்தக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம்.

அரசியல் தொடருக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை போர்விமானம் வந்து– மன்னிக்கவும் போர் விமானம் பற்றிய தகவல் வந்து ஆக்கிரமித்து விட்டது. எனவே பிரபாவின் செய்தி அடுத்தவாரம்.

**(தொடர்ந்து வரும்)**

# புக்காரா -எம். ஐ. 8 போர்விமானங்கள்: -பலம் - தரம் - வேகம்- ....?




**14.7.95** வெள்ளிக்கிழமையன்று புக்காரா விமானம் ஒன்று புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

புக்காரா விமானம் பற்றிச் சில தகவல்கள்:

புக்காராவில் இரு விமானிகள் பயணம் செய்ய முடியும்.

‘சியாமாசெட்டி’ என்னும் போர் விமானமும் இலங்கை அரசிடம் இருக்கிறது. அதனைவிட ‘புக்காரா’ தரத்தில் உயர்ந்தது.

சியாமாசெட்டிக்கு ஒரு காற்றாடி மட்டுமே இருக்கிறது. புக்காராவுக்கு இரண்டு காற்றாடிகள்.

சியாமாசெட்டியில் ஒரு விமானி மட்டுமே பயணம் செய்ய முடியும். ஒரு பறப்பின் போது 800 கிலோகிராம் எடையுள்ள குண்டுகளை சியாமா செட்டியால் காவிச் செல்ல முடியும். அதன் பறப்பு வேகம் மணிக்கு 200 மைல்களாகும்.

புக்காரா ஒரே தடவையில் 1500 கிலோகிராம் எடை கொண்ட வெடிகுண்டுகளை காவிச் செல்ல முடியும். ஒரு குண்டின் எடை 500 கிலோகிராம் கொண்ட மூன்று குண்டுகளாகவோ அல்லது 250 கி.கிராம் கொண்ட ஆறு குண்டுகளாகவோ இருக்கலாம். 125 கி.கிராம் கொண்ட பன்னிரண்டு குண்டுகளாகவும் இருக்கலாம். தேவைக்கேற்ப குணடின் எடை அமையும்.

புக்காராவின் வேகம் மணிக்கு 310 மைல்களாகும். 10 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கக் கூடியது. 20 நிமிடத்தில் அநுராத புரத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்று விடலாம்.

புக்காரா குண்டுகளை வீசுவது மட்டுமல்ல, றொக்கட்டுக்களையும் ஏவும்.

அதுமட்டுமல்ல; 20 மில்லிமீற்றர் விட்டமுள்ள பீரங்கியையும் பொருத்தி தாக்குதல் நடத்தலாம்.

போர் விமானங்கள் எந்த ரகமாக இருந்தாலும் இரண்டுவிதமாகத்தான் குண்டுவீச்சுக்களை நடத்த முடியும்.

1. கிடையாகப் பறந்து குண்டு போடுவது.
2. குத்திப் பதிந்து குண்டு போடுவது.

கிடையாகப் பறந்தபடி குண்டு வீச்சுநடத்தும்போது குறித்த ஒரு இலக்கின்மீது குறிவைத்து தாக்கமுடியாது.

பெரிய நிலப்பரப்பில் அவ்வாறு பறந்து குண்டுவீசினால் அந்த நிலப்பரப்பில் நகரும் படையணிகளுக்கு தேசம் ஏற்படுத்தலாம். நாலு குண்டு போட்டால் ஒரு குண்டு என்றாலும் பயன் கொடுக்கும்.

‘அடர்ந்த காடுகள் உள்ள பகுதிகளிலும் போனால் போ வந்தால் வா’ என்று கிடையாகப் பறந்தபடி குண்டுவீசலாம்.

பொதுமக்கள் செறிவாக உள்ள, அல்லது குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகளில் கிடையாகப் பறந்தபடி குண்டுவீசுவதால் இலக்குகளை தாக்கவே முடியாது. குடியிருப் புக்கள் மட்டுமே நாசமாகும்.

குத்திப் பதிந்து குண்டு வீசும்போது இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் சாதகம் அதிகமுள்ளது.

அதேவேளையில் விமானம் சுட்டு வீழ்த்தப்படும் வாய்ப்பும் இருக்கும்.

குத்திப் பதிந்து வரும் விமானம் தரையி லிருந்து குறைந்தது 200 மீற்றர் உயரத் திலாவது பதிந்தால்தான் இலக்கை இனம் கண்டு தாக்குவது வசதி. ஆனால் அந்த உயரத்தில் வைத்து இலகு இயந்திரத் துப் பாக்கி எனப்படும் எல்.எம்.ஜி. மூலமே விமானத்தை சுட்டுவீழ்த்திவிட கூடியதாக இருக்கும்.

இதனால்தான் உயரத்தில் கிடையாகப் பறந்தபடி குண்டுகளை வீசுவதும், அதனால் இலக்குகள் தவறுவதும் அடிக்கடி நேருகிறது.

புலிகளிடம் தற்போது விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதாக தெரியவந்த பின்னர் அரசின் விமானங்கள் குத்திப் பதிந்து தாக்கத் துணிவது அபூர்வமாகவே இருக்கும்.

இலங்கை விமானப்படையினரிடம் உள்ள இன்னொரு போர் விமானம் எம்.ஐ.8. இந்தியப் படையினரும் இதேரக விமானத்தை பயன்படுத்தினார்கள்.

1987 அக்டோபர் மாதம் 11ம் திகதி எம்.ஐ.8 ரக விமானங்கள் இரண்டு 80 இந்திய இராணுவத்தினரை யாழ் பல்கலைக்கழக வளவினுள் இறக்கியது. திடீர் கொமாண்டோ தாக்குதல் நடத்தவே அப்படி செய்யப்பட்டது.

எம்.ஐ.8 ரக போர்விமானம் 30 படையினரை ஒரு பறப்பில் ஏற்றிச் செல்லும். மொத்தமாக 4000 கிலோகிராம் எடையைத் தாங்கிச் செல்லும். இதன் வேகம், பாரம் உள்வாங்காதபோது மணிக்கு 260 கிலோமீற்றர்; பாரம் உள்ளபோது மணிக்கு 180 கிலோமிற்றர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உண்மைகளை விழுங்கும் யுத்தம்!

# கொடிய யுத்தத்தில் மக்களே பகடைக்காய்கள்

அலசுவது-இராஜதந்திரி





ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் (Operation Leap foward)என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கை யாழ் குடாநாட்டில் நீண்டகாலத்துக்குப் பின்னர் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல் நடவடிக்கையாக இருக்கின்றது.

யாழ் குடாநாட்டிலிருந்து கிடைக்கும் தகவல்கள், இந்த ஒப்பரேஷன் நடவடிக்கை காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன.

இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ள னர். காயப்பட்டவர்களால் யாழ்ப்பாணம் வைத்தியசாலை நிரம்பி வழிகின்றது.

யாழ் வைத்தியசாலையில் கூட காயப்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை வழங்க ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணர் மட்டுமே இருக்கின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர போதியளவு மருத்துவப் பொருட்கள் கூட வடக்கே இல்லையெனவும், இதனால் பாதிக்கப்பட்ட மக்களைக் கையாளுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வடக்கேயிருந்து அறிவித்துள்ளது.

கடந்த ஒரு தசாப்த கால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அப்பாவி மக்களே ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் பாரியளவு பாதிப்பை எதிர்நோக்கிவரக் காணப்படுகின்றனர்.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் எல்.ரி.ரி.ஈயினரும், ஆயுதப்படையினரும் தத்தமது தரப்பில் என்றுமில்லாதவாறு பெருமளவு நவீனரக-கொடிய ஆயுதங்களை வைத்திருக்கின்ற நிலையிலேயே ஒப்பரேஷன் 'முன்னேற்றப்பாய்ச்சல்' ஆரம்பமாகியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினருக்கு எதிராக 'ஒப்பரேஷன் லிபரேஷன்' (Operation Liberation)என்று பெயரிட்டு 1987ம் ஆண்டிலேயே இலங்கை ஆயுதப் படையினர் முதன் முறையாக இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

பலாலி இராணுவ தளத்திலிருந்து ஆரம்பமான அந்த இராணுவ ஒப்பரேஷன், அன்று வடபகுதியில் பலத்த சேதத்தை உண்டு பண்ணியிருந்தது. வடமராட்சிப் பகுதியைச் சுற்றிவளைப்பதே அந்த இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பதினையாயிரத்துக்குமதிகமான படையினர் அன்று வடமராட்சி ஒப்பரேஷன் நடவடிக்கையில் குதித்திருந்தனர்.

குடா நாட்டு மக்கள் இந்த நடவடிக்கை குறித்து மிகவும் கலக்கமடைந்திருந்த வேளையில் வடபகுதியின் ஆகாயப்பரப்பில் தோன்றிய இந்திய விமானப்படை விமானங்கள் உணவு, மருத்துவப் பொட்டலங்களை பாரசூட் மூலமாக போட்டு யாழ் குடாநாட்டு மக்களுக்கு வடமராட்சி ஒப்பரேஷன் ஏற்படுத்திய பீதியைப் போக்கியிருந்தன.

அன்று இந்திய விமானப்படை 'ஒப்பரேஷன் பூமாலை' (Operation Garland) என்ற பெயரில் வடக்கே பாரசூட்கள் மூலமாகப் பொட்டலங்களைப் போடும் பணியை மேற்கொண்டிருந்தது.

இதனையடுத்து இலங்கைப் படையினரின் வடமராட்சி ஒப்பரேஷன் நடவடிக்கையும் இடைநிறுத்தப்பட்டது.

இருந்தபோதிலும், 1987ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அமைதிப்படை என்ற பெயரில் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் காலடி எடுத்துவைத்த இந்தியப்படையினர் எல்.ரி.ரி.ஈ.யினருக்கு எதிராக தமது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இந்தியப்படையினரின் தாக்குதல் நடவடிக்கை 'ஒப்பரேஷன் பவான்' (Operation Bawan) என்று பெயரிடப்பட்டு குடா நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் முடுக்கிவிடப்பட்டிருந்தது.

இந்தியப் படையினரின் தாக்குதல் நடவடிக்கையானது யாழ் குடா நாட்டவரைப் பந்தாடுவதாகவே இருந்தது.

எனவே இலங்கைப் படையினரால் மட்டுமல்ல, இந்தியர்களினால்கூட தமக்குப் பாதுகாப்பில்லை என்பதனையே யாழ் குடா நாட்டில் 1987ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இடம்பெற்ற வடமராட்சி ஒப்பரேஷனும், இறுதிப்பகுதியில் இடம்பெற்ற இந்தியரின் 'ஒப்பரேஷன் பவானும்' உணர்த்தியிருந்தன.

இந்நிலையில் இன்று மீண்டும் யாழ் குடாநாடுமீது இலங்கை ஆயுதப்படையினர் பாரியளவில் 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' என்ற இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் இதுவரை கால விளைவுகளை எடுத்து நோக்கும்போது இலங்கையில் அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் முதற்கொண்டு இன்று ஆட்சியிலிருக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணியினர்வரை அப்பாவிப் பொது மக்களை ஒரு பொருட்டாக நினைக்காத நிலையே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் இதுவரை சுமார் 50 ஆயிரம் பொதுமக்களைப் பலியெடுத்துள்ளது. அத்துடன் பல இலட்சக்கணக்கானவர்களை இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் அகதிகளாக இடம் பெயரச் செய்துள்ளது. கூடவே பல கோடி சொத்துக்கள், உடமைகளையும் இந்த நாசகார யுத்தம் நாசமாக்கியுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கவே யுத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என்று ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது வெறுமனே பொய்யும், புரட்டும் நிறைந்த ஒரு பிரச்சாரமாக இருப்பதனையேஅவதானிக்க முடிகின்றது.

"யுத்தம் என்று ஏற்பட்டுவிட்டால் உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது" என்று ஓர் அறிஞர் ஒருதடவை குறிப்பிட்டிருந்தார்.

யுத்தத்தில் ஈடுபடுவோர் தமது தரப்பை நியாயப்படுத்த தம்மால் மேற்கொள்ளப்படும் பாரதூரமான தவறுகளையும் மூடிமறைப்பதிலேயே ஆர்வங்காட்டுவர்.

உலகில் நான்காவது வல்லரசு என்று வர்ணிக்கப்படும் இந்தியப்படைகூட 1987ம் ஆண்டு வடக்கே தனது இராணுவ நடவடிக்கையை மூர்க்கத்தனமான முறையில் ஆரம்பித்திருந்தது. வீடு வாசல்கள், கோயில்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்த பொது மக்கள்கூட மோசமான இழப்புகளுக்குள்ளாகியிருந்தனர்.

அத்துடன் யாழ்நகரைக் கைப்பற்றிய இந்தியப் படையினர் மேற்கொண்ட முதல் நடவடிக்கையானது மயிர்க்கூச்செறியச் செய்வதாகவே இருந்தது.

யாழ் வைத்தியசாலைக்குள் நுழைந்து அங்கே இருந்த டாக்டர்கள், மற்றும் ஊழியர்கள் உட்படப் பலரை இந்தியப்படையினர் சுட்டுக்கொன்றிருந்தனர்.

அத்துடன், வடக்கே பரவலாகப் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்த அப்பாவிமக்கள் கூட மூர்க்கத்தனமான தாக்குதலுக்குள்ளாகியிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரி என்ற பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொது மக்கள்மீதும் இந்தியப்படையினர் தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர்.

ரஷ்யத்தயாரிப்பு-ரி-72 ரக நவீன யுத்த டாங்கியொன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மீது தனது வேட்டுக்களைத் தீர்த்ததில் சுமார் முப்பது அப்பாவி மக்கள் துடிதுடித்து மாண்டனர். குழந்தைகள், பெண்கள் முதியோர் என்ற வேறுபாடின்றி கணப்பொழுதில் டாங்கிவேட்டுக்கு அம்மக்கள் இரையாகியிருந்தனர்.

இது தவிர, நடமாடமுடியாது வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த வயோதிபர்கள்கூட 'சுட்டாக்காலி'களைப்போன்று சுட்டுத்தள்ளப்பட்டிருந்தனர்.

சில இடங்களில் பெண்கள் கூட மானபங்கப்படுத்தப்பட்டிருந்தனர்.

எனவே யாழ் குடாநாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் அனைத்துமே 'கண்கடை' தெரியாத முறையிலேயே நடத்தப்பட்டுவரக் காணப்படுகின்றன.

இவ்வகையில் தற்போது 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சலும்' பாரதூரமான இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களை தேவாலயங்கள், கோயில்களை நாடிச் சென்று தஞ்சமடையுமாறு படையினர் துண்டுப்பிரசுரங்களைப் போட்டும், வானொலி மூலமாகவும் அறிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மக்கள் தேவாலயங்கள், கோயில்களை நாடியிருந்தனர்.

ஆனால் வடக்கே நவாலிப் பிரதேசத்தில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் அங்குள்ள சென் பீட்டர் தேவாலயம் தகர்ந்துள்ள்துடன் அதனுள் தஞ்சமடைந்திருந்த அப்பாவி மக்களில் நூற்றுக்குமதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்களும் உயிரிழந்தோரில் அடங்குகின்றனர் என்ற தகவல் வேதனையளிப்பதாகவே இருக்கின்றது.

கடந்த ஜூலை 8ம் திகதியன்று 'வெண்தாமரை இயக்கம்' என்ற சமாதான நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்திருந்தார்.

கையில் வெண்தாமரை மலர்களை ஏந்தி சமாதானத்துக்காக நாட்டு மக்களை நோக்கி ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது கட்சியினரும் அறைகூவல் விடுத்திருந்தனர்.

ஆனால் மறுநாள் காலை (ஜூலை 9ந் திகதி) யாழ் குடாநாட்டில் ஆயுதப்படையினர் 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' என்ற பெயரில் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

எனவே ஒருபுறம் சமாதானம் என்று வெண்தாமரையை ஏந்திய அதே சமயம் மறுபுறத்தே இராணுவ நடவடிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிகா சைகை காட்டியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் எல்.ரி.ரி.ஈ.யினர் ஒரு தலைப்பட்சமான முறையில் தமக்கும் அரசுக்குமிடையிலான மோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டனர்.

அன்றிலிருந்து ஆயுதப்படையினர் மீது வடக்கிலும்- கிழக்கிலுமாக எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல் நடவடிக்கைகள் மும்முரமடைந்திருந்தன.

இதனையடுத்து ஆயுதப்படையினர் முழு அளவில் கடந்த ஜூலை 9 ந்திகதி எல்.ரி.ரி.ஈயினருக்கெதிராக ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் என்ற தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இதன்மூலம் எல்.ரி.ரி.ஈயினரும், ஆயுதப்படையினரும் ஒரு மோசமான பலப்பரீட்சையில் குதித்துள்ளனர். இதில் எதுவுமறியாத அப்பாவிகளே இடையில் நசுங்குண்டு பரிதவிக்கின்றனர்.

எல்.ரி.ரி.ஈயினரின் பிடியிலிருந்து அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பதே இந்த யுத்தத்தின் நோக்கம் என்று ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், யுத்தம் ஆரம்பித்த நாள்முதல் ஏற்பட்ட இழப்புக்களை அவதானிக்கும் போது பொதுமக்களே பெருமளவு உயிர், உடமை இழப்புகளுக்குள்ளாகியுள்ளனர்.

படையினரின் கண்மூடித்தனான தாக்குதலுக்கு நவாலி தேவாலய குண்டு வீச்சச் சம்பவமும், அங்கு ஏற்பட்ட பேரிழப்பும் நல்ல உதாரணமாக இருக்கின்றன.

கடந்த வருடங்களிலும் யாழ்நகரை அண்டிய கத்தோலிக்க தேவாலயமொன்று விமானக்குண்டு வீச்சுக்கு இலக்காகித் தகர்ந்திருந்தது. அத்தாக்குதலிலும் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே, ஆட்சியாளர்கள் பொது மக்களைப் பாதுகாக்கவே இந்த யுத்தமென்று கூறிவருகின்ற போதிலும், எவ்வகையிலும் அவர்களால் பொதுமக்களை தகுந்த வகையில் பாதுகாக்க முடியாது என்பதனையே கடந்த கால இழப்புகளும், தற்போது 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சலில்' ஏற்பட்டுள்ள இழப்புகளும் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' நடவடிக்கையை அவதானிக்கும் போது ஆயுதப்படையினர் முன்னேறி வரும் பகுதிகளிலிருந்து எல்.ரி.ரி.ஈயினர் பின்வாங்கிச் செல்வதைக் காணமுடிகின்றது.


இந்தியப் படையினர் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த வேளையிலும் இதே பாணியில் எல்.ரி.ரி.ஈயினர் நடந்து கொண்டிருந்தனர். ஆனால் இந்தியப்படையினர் முற்று முழுதாக வடக்கு- கிழக்கை ஆக்கிரமித்ததும், கெரில்லாப் பாணியில் தமது தாக்குதல்களை எல்.ரி.ரி.ஈயினர் தொடுத்திருந்தனர்.

இந்நிலையில் தம்மால் தாக்குப்பிடிக்க முடியாத பகுதிகளில் பின்வாங்குவதும், பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கும் போது கூடுதலான பலத்துடன் வந்து தாக்குவதுமே எல்.ரி.ரி.ஈயினர் கடந்த காலங்களில் கையாண்ட தந்திரமாக இருந்துள்ளது.

எனவே, ஆயுதப்படையினர் முன்னேறிச் சென்று மேலும் கூடுதலான பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரலாம். ஆனால் அதன்மூலம் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும், அல்லது சமாதானம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணுவது தவறான கணிப்பாகவே இருக்கும்.

வடக்கின் இன்றைய யுத்தநிலபரத்தை நன்கு அலசி ஆராயும் போது ஒரு நீண்ட கெடுபிடி யுத்தத்துக்கான சூழ்நிலைகள் தோற்றம் பெறுவதையே காணமுடிகின்றது.

இத்தகைய நிலைமையில் இலட்சக்கணக்கான அப்பாவி உயிர்களின் பாதுகாப்பென்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது.



# கொல்ல வந்தவன்



உண்மைச் சம்பவம் ரசிகனின் பாணியில்

தருவது—ரசிகன்

லியோன்-28 வயது.

அமெரிக்காவின் ஒகாயோ மாகாணத்தில் வயர் தொழிற்சாலையில் வேலை.

"இனி உனக்கு இங்கே வேலையில்லை லியோன்."

"நான் எந்தத் தவறும் செய்யவில்லையே."

"செய்தாய் என்று சொன்னோமா? செய்ய வேலையில்லை, நீ போகலாம்!"

முடிந்தது. இனித் தெருவில்தான் வாழ்க்கை. லியோனுக்கு ஆத்திரம் வந்தது. அத்தோடு அழுகையும் வந்தது.

"வேலை போனால் போகிறது, வா லியோன் வருதப்படாதே!"

என்றாள். இளமையான அழகான அவள்ளத்தான் லியோன் காதலித்துக் கொண்டிருந்தான். அவள் இப்போது லியோனின் சட்டைப் பொத்தான்களை ஒவ்வொன்றாய் விடுவித் தாள்.

"வேண்டாம், இன்று எனக்கு 'மூட்' சரியாகவே இல்லை."

என்றவனின் வெற்று மார்பை இதமாக வருடிக் கொடுத்தாள். அவனின் இடது கரத்தை பற்றி தன் மார்பில் வைத்துக் கொண்டாள்.

லியோனுக்கு இப்போது அவள் வேண்டும் போல் இருந்தது.

மெல்லக் குனிந்து அவளின் மூக்கில் உதடுகளால் தொட்டு இதழ்களில் இறங்கினான்.

அவள் லியோனை வெளியுலகில் இருந்து விடுவித்து தன்னை நோக்கி தனக்குள் இழுத்துக் கொண்டிருந்தாள்.

எல்லாம் முடிந்ததும் லியோன் பாரம் தளர்ந்து தூங்கிப் போனான்.

காலையில் எழுந்து ஒரு சிகெரட்டைப் பற்றவைத்துக் கொண்டு, அன்றைய தினசரியைப் புரட்டினான்.

**இத்தாலிய மன்னன் சுட்டுக் கொலை** என்று செய்தியிருந்தது.

'யார் செத்தால் என்ன?'

சுவாரசியமில்லாமல் செய்தியைப் படித்தான்.

"இத்தாலிய மன்னர் முதலாம் **ஹம்பர்ட்** சுட்டுக் கொல்லப்பட்டார்.

**வேலையிழந்த நெசவுத் தொழிலாளி ஒருவனே மன்னரைக் கொலை செய்திருக்கிறான்."**

இந்த இடத்தில் லியோன் 'அடடே' என்று மனதுக்குள் சொல்லிக்கொண் டான்.

மீண்டும் ஒரு முறை அந்தச் செய்தியை வாசித்தான்.

லியோன் இன்னுமொரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டு தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தான்.

இரவு லியோனின் மார்பில் தலை வைத்துக் கொண்டு அவள் கேட்டாள்,

"என்ன லியோன், இன்று நீ அதிதீவிர உற்சாகத்தில் இருக்கிறாய்?"

"ஒரு உடைந்த குச்சியை, அல்லது உபயோகமில்லாத வயர் துண்டை தூக்கி யெறிவது போல தொழிற்சாலையிலிருந்து என்னை வெளியே தூக்கிப் போட்டார்கள் அல்லவா..?"

"சும்மா இரு லியோன், அதையே ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

லியோன் தன் மார்பில் இருந்த அவள் தலையை ஒரு கரத்தால் வருடிக்கொண்டே சொன்னேன்,

"வாங்கிய அடிகளை நினைப்பது வருத்தப்பட என்றா நினைக்கிறாய்? இல்லை, திருப்பிக் கொடுக்க-வாங்கியதற்கு மேலாக திருப்பிக் கொடுக்க வேண்டுமானால் கணக்குப் பார்க்க வேண்டுமல்லவா?"

" நீ என்ன சொல்லுகிறாய் லியோன்?"

"அது இப்போது புரியாது. இப்போது நீ உன்னை புதிதாக புரியவை அது போதும்."

தன் வலது காலை அவளின் கால் மீது போட்டு இறுக்கிக் கொண்டான். தீ பரவியது.

**

**1901** செப்டம்பர் 6ம் திகதி. லியோன் நியூயோர்க் நகருக்கு போய்ச் சேர்ந்தான்.

அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மாக்கின்லி-அவர்மீது அமெரிக்கா்வில் இருந்த கிளர்ச்சியாளர்களுக்கு கோபம்.

'இவர்கள் கோபம் என்னை என்ன செய்துவிட முடியும்?' என்று நினைத்துக் கொண்டிருந்தார் மாக்கின்லீ.

நீயூயோர்க்கில் ஒரு கண்காட்சி. திறந்து வைக்க வந்த ஜனாதிபதி மாக்கின்லீக்கு பிரமாதமான வரவேற்பு.

அங்கு லியோனும் வந்தான். வலது கை மணிக்கட்டில் கைக்குட்டையை மடித்துக் கட்டியிருந்தான்.

ஒரு பொலிஸ் அதிகாரிக்கு சின்னதாய் ஒரு சந்தேகம்.

அவர் லியோன் அருகே வந்து அவனை ஏற இறங்க பாாத்துவிட்டு,

"கையில் ஏன் கைக்குட்டையை கட்டியிருக்கிறீர்கள் ஜென்டில் மேன்?"

"மதிப்பிற்குரிய அதிகாரியே! கையிலே காயம் என்றால் கனவானோடு கைகுலுக்க முடியாது என்று சட்டமா?"

"இல்லை, நான் அதற்காக கேட்கவில்லை."

அதிகாரி அசட்டுச் சிரிப்பை உதிர்த்து விட்டு நழுவினார்.

ஜனாதிபதி மாக்கின்லீ எல்லோரோடும் கைகுலுக்கி புன்னகைத்துக் கொண்டே வந்தார்.

லியோனுக்கு அருகே நின்றவரோடு அவர் கைகுலுக்கும் போது லியோனின் இதயத் துடிப்பு அதிகரித்தது.

மாக்கின்லீ "ஹலோ" என்று லியோனுக்கு கைநீட்டினார்.

லியோன் ஜனாதிபதி மாக்கீன்லீயின் கையைப் பற்றி, அடுத்த நொடியே அவரை



ஜனாதிபதி மாக்கன்லீயை லியோன் கொல்ல முயலு ம் காட்சி

தன்னை நோக்கி இழுத்தான்.

அதே நேரம் லியோனின் மறு கரத்தில் சிறிய கைத்துப்பாக்கி முளைத்தது.

தாமதிக்கவேயில்லை.

சுட்டான்!

முதல் சூடு ஜனாதிபதியின் 'கோட்' பொத்தானில் பட்டது.

இரண்டாவது தடவையும் சுட்டான்.

இப்போது சூடு வயிற்றில் விழுந்தது.

வயிற்றுக்குள் நுழைந்த குண்டு முதுகு வழியே வெளியேறியது.

மிக அருகில் இருந்து சுட்டதால் அப்படி நேர்ந்தது.

ஜனாதிபதி மாக்கின்லீ இரத்த வெள்ளத்தில் சரிந்தார்.

பாதுகாப்பு பொலிசார் லியோனை வளைத்துப் பிடித்தனர். லியோன் முகத்தில் எவ்வித சலனமுமின்றிச் சொன்னான்:

"எனது கடமையை முடித்துவிட்டேன்!"

இரத்தம் கொட்டிய நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்ட்ட மாக்கின்லீ எட்டாவது நாள் செத்துப் போனார்.

லியோன் தினசரிகளில் அலசப்பட்டான். பிரபலமானான். ஒரு ஹீரோவாகும் அவனது கனவு நிறைவேறியது.

லியோனுக்கு மரணதண்டனை கிடைத்தது. மின்சார நாற்காலியில் அமரவைத்து தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகள் அழைத்துச் சென்றனர்.

லியோன் முகத்தில் கவலையின் ரேகைகள் துளியுமில்லை. ஒரு அதிகாரி கேட்டார்,

"நீ வருத்தப்படவில்லையா லியோன்?"

லியோன் குரலில் சிறு பிசிறும் இல்லாமல் சொன்னான்:

"நான் நடப்பதை நினைத்து வருந்துபவன் அல்ல, நினைத்ததை முடித்தவன்!"

# 'நான் செத்துப் பிழைத்தவன்டா'

## இது ஒரு வித்தியாசமான அனுபவம்

இறந்த பிறகு நமது ஆவி என்னாகிறது? எங்கு செல்கிறது என்றெல்லாம் விதவிதமான கற்பனைகள் நமது மூளையில் உதிக்கின்றன. இதற்கு விடை கண்டவர் யாருமில்லை என்றும் அங்கலாய்க்கின்றோம்.

ஆனால் செத்துப் பிழைத்த ஒருவர் இறந்த பின் என்ன நடந்தது என்று கூறுகிறார் என்றால் அது வியப்புக்குரிய ஒரு செய்தி அல்லவா?

அமெரிக்காவில் நடந்த இந்தக் கதையைக் கேளுங்கள்:

அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் வசிப்பவர் டேவிட் வெர்டகால். வயது 42. இவருக்கு ஜில் என்ற மனைவியும், ஜோசவ்(18), ஜெம்மா(17), காரா(14) ஆகிய பிள்ளைகளும் உள்ளனர்.

ஒரு நாள் டேவிட் தனது அப்பா சைமனுடன் ஒஸ்ரியா நாட்டிற்கு வியாபார நிமித்தமாகச் சென்றார். அங்கு ஒரு லொட்ஜில் ஒர் அறையில் தங்கி இருக்கும்போது டேவிட் மயக்கமுற்று விழுந்தார். சைமன் பதறி விட்டார். உடனே அம்புலன்ஸை அழைத்தார்.

அம்புலன்ஸ் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்குள் டேவிட்டின் இதயத்துடிப்பு நின்று விட்டது. உடனே டாக்டர்கள் டேவிட்டைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றனர். அவருக்கு மின்சார அதிர்ச்சி கொடுத்தனர். ஆனால் பலனில்லை.பிறகு டாக்டர் பொட்டாசியத்தை ஊசி மூலம் செலுத்தினார். பின்னர் மீண்டும் மின்சார அதிர்ச்சி கொடுக்கப்பட்டது. இப்போது சிறிதாக டேவிட்டின் இதயம் துடிக்க ஆரம்பித்தது. இருப்பினும் டேவிட் ஆழ்ந்த மயக்க நிலையிலேயே (கோமா) இருந்தார். இரண்டு வார காலம் இதே நிலை நீடித்தது.

இதே நிலையிலேயே விமானத்தின் மூலம் ஒஸ்ரியாவிலிருந்து டேவிட், பொஸ்டனுக்குக் கொண்டு வரப்பட்டார். அவரது மனைவி ஜில், மைத்துனி வோல் ஆகியோர் அருகிலிருந்து டேவிட்டைக் கவனித்துக் கொண்டனர்.

இரண்டு வாரம் கழித்து திடீரென டேவிட் கண்விழித்தார். அருகிலிருந்த மைத்துனி வோலைப் பார்த்து மெல்லக் கேட்டார்;

"நான் ஏன் சாகவில்லை?" அதிர்ந்து போன வோல் மகிழ்ச்சியால் துள்ளிக் கொண்டே ஓடிப்போய் தன்னுடைய அக்கா ஜில்லிடம் கூறினாள். ஜில்லுக்கு 'ஜில்லென்று' ஆகிவிட்டது.

உள்ளே ஓடிச் சென்று கணவன் டேவிட்டின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

"நீ யார்?" என்று டேவிட் மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

"நான் தான் ஜில். உங்கள் மனைவி," என்று ஜில் பதிலளித்தாள்.

"நமக்கு எத்தனை குழந்தைகள்?" டேவிட் கேட்ட அடுத்த கேள்வி.

"நீங்களே சொல்லுங்கள் பார்க்கலாம்." ஜில் பதில் கூறினாள்.

"பன்னிரெண்டு" தங்கள் குழந்தைகளின் எண்ணிக்கையை நான்கு மடங்காக்கிக் கூறினார் டேவிட்.

ஒரு வாரம் ஓடியது. படிப்படியாக பழைய நினைவுகள் டேவிட்டிற்குத் திரும்பின. இதயமே நின்று இறந்து போன சடலம் ஒன்று உயிர் பெற்றது - மருத்துவர்களின் திறமையால். இதயம் நின்று விட்டாலும் கூட, டேவிட் உடல் மீண்டும் இயக்கத்தை உருவாக்கும் விதத்தில் நல்ல நிலையில் இருந்ததே



இதற்குக் காரணம் என்று டாக்டர்கள் விளக்குகின்றனர்.

இது விஞ்ஞானம் கூறும் விளக்கம். ஆனால் உடலில் இருந்து ஆவி வெளியேறுவதாக நம்பப்படுகிறதே. இது உண்மைதான் என்று கூறு கிறார் டேவிட். இறந்து விட்ட பின் தனக்கு ஏற்பட்ட அனு பவத்தை அவர் கூறு கிறார் கேளுங் களேன்:

"திடீரென ஒரு கத்தி என்னுள் சொருகியது போலிருந்தது. என்னுடைய உடலில் இருந்து நான் (ஆவி) விடு விக்கப்பட்டேன்.

பின்னர் மிகமிக அழகிய ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். யாரோ என்னைக் கட்டித் தழுவியது போன்ற உணர்வு ஏற்பட்டது. அது நிச்சயம் கடவுளாகத் தான் இருக்க முடியும். அப்போது திடீரென ஒரு சத்தம் கேட்டது. 'உன்னுடைய உடம்புக்கே நீ திரும்பிப் போ', என்று அந்தக் குரல் உத்தரவிட்டது. ஆனால் அதில் எனக்கு விருப்பமில்லை. இருப்பினும் திரும்பத் திரும்ப அந்தக் குரல் தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொன்னது.

"சாவு என்பது எவ்வளவு அற்புதமான ஒரு அனுபவம். உண்மையிலேயே சொர்க்கத்தைக் கண்ட மனிதன் நான்தான் என்பது எனது அதிஷ்டம்தான். இனி சாவைக் கண்டு நான் பயப்பட மாட்டேன். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்"என்று டேவிட் கூறுகிறார்.

சிலர் இவரை ஒரு மாதிரியாக ஏற இறங்கப் பார்க்கிறார்கள்.

"பழைய நினைவுகளே முற்றிலும் திரும்பாத நிலையில்தான் டேவிட் இன்னமும் இருக்கிறார் என்று மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. அப்படி இருக்கையில் சொர்க்கத்திற்குச் சென்றதை மிகத் தெளிவாக அவர் விளக்குவதால் நான் அதனை முழுமையாக நம்புகிறேன்" என்கிறார் டேவிட்டின் மனைவி ஜில்.

இப்போது ஜில் தனது கணவர் டேவிட்டுடன் ஜில்லென்று குடும்பம் நடத்துகிறார்.

எச்சரிக்கை ரிப்போர்ட்

# ஆடை அவிழ்க்கும் கம்பியூட்டர்

## போஸ் கொடுத்த அழகி பொறி கலங்கினார்

நடிகை திவ்யபாரதி. குழந்தைத்தனமான கண்கள். தோடம்பழக் கன்னங்கள் என்று நிறைய வர்ணிக்கக் கூடிய வஞ்சகமில்லாத இளமை. அவர் ஒரு நாள் மாடியில் இருந்து நழுவி அல்லது வேண்டுமென்றே குதித்து செத்துப் போனார்.

அது எத்தனை பெரிய சோகம் நம் ரசிக மகாஜனங்களுக்கு. ஆனால் கம்பியூட்டர் வித்தை தெரிந்தவர்களுக்கு அந்தச் சோகம் துளியும் இல்லை.

ஏன்? கம்பியூட்டரிலேயே திவ்யபாரதியைப் போலவே உருவாக்கலாம். சிரிக்க வைக்கலாம். சின்ன இடை நெளிய நடனமாட வைத்துப் பார்க்கலாம்.

சந்தேகமா? கம்பியூட்டரிலேயே உருவாக்கி நடிக்க வைத்தும் காட்டினார்கள்.



கம்பியூட்டர் துறையில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டன. இந்த நிமிடம் கூட புதியதொரு முன்னேற்றத்தை யாராவது தங்கள் மூளையைக் கசக்கி கண்டு பிடித்திருக்கலாம்.

கம்பியூட்டரில் வீடியோ, புகைப்பட சாகசங்கள் பலவற்றை செய்து காட்டத் தொடங்கி விட்டார்கள்.

சிகப்பு உடையோடு நீங்கள் புகைப்படத்திற்கு போஸ் கொடுக்கிறீர்கள் என்று வையுங்கள், பின்னர் திடீரென்று 'அடடே நீல உடையில் போஸ் கொடுத்திருக்கலாமே' என்று நினைத்தீர்களானால் கவலையே வேண்டாம்.

கம்பியூட்டர் நிறத்தை மாற்றித் தரும். இது மட்டுமா? இன்னுமொரு அதிர்ச்சியான சமாச்சாரம் சொல்கிறோம். இதைப் படித்துவிட்டு புகைப்படத்திற்கு போஸ் கொடுக்கவே இனிப் பயந்து தொலைக்கப் போகிறீர்கள்.

இந்தியாவில் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்து கலக்கியடித்த சமாச்சாரம் இது.

பீடிகை போதும், விஷயத்திற்கு வாரும் என்பீர்களே!

பம்பாயில் ஒரு மொடல் அழகி. விளம்பரப் படங்களுக்கு அசத்தலான போஸ் கொடுப்பதற்கு ஏற்ற உடல் விசயமுள்ளவர்.

'ஸ்டார் டஸ்ட்' என்றொரு சினிமா இதழ் அந்த பெண்மணியை அல்லது அம்மணியை தமது பத்திரிகைக்காக ஒரு போஸ் பொடுக்க அழைத்தது.

போஸ் கொடுக்க கூலி சில இலட்சங்கள் மட்டும்.

வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்ட அம்மணி சட்டையைக் கழற்றி ஸ்ரூடியோவின் ஹாங்கரில் மாட்டினார். அதாகப்பட்டது அரை நிர்வாண போஸ்.

ஜீன்ஸ் போட்டுக் கோட்டு மேலே மட்டும் வெறுமையாக குப்புறப்படுத்து போஸ் கொடுத்தார்.

பொருத்தமான கோணங்களில் புகைப்படக்காரர் படம் சுட்டெடுத்துவிட்டு "நன்றி" என்றார்.

'ஸ்டார் டஸ்ட்' பத்திரிகை அம்மணியின் கலக்கல் போஸ் சகிதம் வெளிவந்தது.

பார்த்தவர்கள் எல்லாம் ஜொள்ளுவிட்டுக் கொண்டிருக்க, அம்மணியும் பார்த்தார்.

பயங்கரமான அதிர்ச்சி.ஏன்?

அம்மணி ஜீன்ஸ் போட்டபடி போஸ் கொடுத்தார் அல்லவா?

பத்திரிகையில் பிரதானமான படத்தில் ஜீன்ஸ் உருவப்பட்டிருந்தது. முழு நிர்வாணம்!

அதெப்படி?

அதுதான் கம்பியூட்டர் சாகசம். 'கம்பியூட்டர் கிராபிக்ஸ்' முறையில் போர்த்தி மூடிக்கொண்டு நீங்கள் புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தாலும் ஆடைகளை மொத்தமாகவே உருவி விட முடியும்.

'கம்பியூட்டர் கிராபிக்ஸ்' முறையைப் பயன்படுத்தி வக்கிரமானவர்கள் புகைப்படத்தை வைத்தே வில்லத்தனம் செய்யலாம்.

உங்கள் காதலரோ, காதலியோ 'கம்பியூட்டர் கிராபிக்ஸ்' தெரிந்தவராக இருந்தால் உங்கள் புகைப்படத்தை மறந்தும் கூட கொடுத்து விடாதீர்கள்.

எதற்கும் கூட்டத்தோடு கூட்டமாக நின்று தலையை மட்டும் கமராவுக்கு நீட்டுவது நல்லது. குறிப்பாக பெண்கள் ஜாக்கிரதை. கம்பியூட்டர் வில்லன் மடியில் மட்டுமல்ல மடிதாண்டியும் கைவைத்து விடலாம்.

சரி - அந்த அம்மணி என்ன செய்தார்? தன்னை அம்மணமாக்கிய விளம்பரக் கம்பனி மீது பாய்ந்தார்.

விவகாரம் பெரிதாகியதால் கடைகளில் தொங்கிய 'ஸ்டார் டஸ்ட்' இதழ்களை (விற்றது போக) அவசரமாகத் திரும்ப எடுத்தார்கள். இதனால் பத்திரிகைக்கு நஷ்டம் கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் ரூபாய்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தீராத விளையாட்டுப் பிள்ளை

சிம்பன்சி மனிதக் குரங்குகள் கிட்டத்தட்ட மனிதர் போலவே நடந்து கொள்கின்றன.


மேலை நாடுகளில் 'சிம்பன்சி'களுக்கு தனி மரியாதை. சிறு குட்டியாக இருக்கும் போதே வாங்கி வந்து அல்லது பிடித்து வந்து வளர்க்கத் தொடங்கி விடுவார்கள்.

சிறு வயதில் இருந்தே செல்லமாக வளர்வதால் சிம்பன்சியும் நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகத்தில் ஒரு ஆயுட்கால உறுப்பினராகி விடும்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு என்று குழந்தைக்கு சிம்பன்சி வேடிக்கை காட்டும் காட்சி இலண்டனில் உள்ள வீடொன்றில் 'கிளிக்' செய்யப்பட்டது. பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, ஆனால் சிம்பன்சியை வளர்த்தா...? கண்ணீர்தான் - இது ஆனந்தக் கண்ணீர். நீங்களும் வளர்த்துப் பார்க்கலாமே!

# சித்து வித்தைக்கு பத்து வருசம்

தேங்காய் சகிதம் காட்சி தருபவர் ஒரு சுவாமியார். (ஆசிரமத்தில் பெண்கள் இல்லையா?) இவர் வம்பு தும்புக்குப் போகமாட்டார். இந்தியாவில் உள்ள கல்கத்தாவில்தான் சாமியார் இருக்கிறார். இவரிடம் உள்ள ஸ்பெசல் குணாம்சம் என்ன தெரியுமோ? பக்தர்களோடு பேசும் போதும், பிரசங்கம் செய்யும் போதும் தலையில் தேங்காய் ஒன்று படு அடக்கமாக இருந்து கொண்டேயிருக்கும். 1981ம் ஆண்டு முதல் 10 வருடங்கள் இதற்கான பயிற்சியைப் பெற்றாராம் சாமியார். இந்தச் தேங்காய் சாமியாரைப் பார்க்க இப்போது கூட்டம் திரள ஆரம்பித்து விட்டது. இனி யோகம்தான். சாமியாரின் பெயர் குருடிலிப் ராவ்.



# கண்ணுக்குப் பொய் அழகு?

வீடு பாருங்கள் வீடு. எவ்வளவு சின்னதாக இருக்கிறது. கையின் கீழ்ப் பகுதி உயரம் கூட இல்லையே, இது என்ன உலகில் சிறிய வீடோ? என்றெல்லாம் சட்டுப்புட்டென்று முடிவுக்கு வரவேண்டாம். இதே சின்ன வீடுதான் திரைப் படங்களில் பிரமாண்டமான பங்களாவாக உங்கள் கண்களை ஏமாற்றுகிறது. திரைப்படங்களில் பிரமாண்டமான வீடுகளை குண்டு வைத்து தகர்க்கும் காட்சிகள் வருகிறதல்லவா? பிரமாண்டமான பங்களாக்களைப் போல சிறிய சைஸில் வீடுகளை உருவாக்குவார்கள். பின்னர் கமரா தந்திரம் மூலம் பெரிதாகத் தெரியச் செய்து விடுவார்கள். நாங்கள் அது தெரியாமல் 'அய்யய்யோ..... மாபெரிய வீட்டை என்னமாய் உடைத்துப் போடுகிறார்கள்' என்று வியந்து போவோம். படத்தில் பாருங்கள், வீட்டுக்குள் இருந்து ஒரு கை நீள்கிறதல்லவா? சின்ன மண்மூடைகளை அடுக்கி செட்டப் செய்கிறார். நம் கண்களை ஏமாற்ற எத்தனை தூரம் கஷ்டப்படுகிறார்கள் பாருங்கள். இதனால் அறியப்படும் நீதி யாதெனில், திரைப்படம் பார்க்கும் போது அதிகமாகக் கண்களை நம்பக்கூடாது.


## தகவல் பெட்டி





# வந்து பாரு ரூபா இரண்டு

உடல் ஒன்று தலை இரண்டு. இந்த அபூர்வக் கன்றுக் குட்டி பிறந்தது தமிழ் நாட்டில் உள்ள சேலத்தில்! விஷயமறிந்து வேடிக்கை பார்க்க கூட்டம் குவிந்து விட்டது. ஆனால் ஒரு சோகம், அதற்கு முன்னரே கன்றுக் குட்டி இறந்து போய்விட்டது. இறந்த பின்பும் வேடிக்கை பார்க்க வந்தவர்களிடம் தலைக்கு 2 ரூபா வீதம் வசூலித்து சம்பாதித்தாராம் உரிமையாளர். செத்தும் கொடுத்த சின்னக் கன்று.




ஒட்டி இருக்கும் வயிற்றை உயர்த்திக் காட்ட உங்களால் முடியுமா? முடியாது என்பதால்தான் படத்தில் உள்ள சிறுவனுக்கு மவுசோ மவுசு. பதினொரு வயதான இந்த அமெரிக்கச் சிறுவனின் பெயர் ஜோர்ஜ் அட்கின்ஸ்.

மூச்சை உள்ளே இழுத்துவிட்டு ஏப்பம் விடும் சத்தத்தோடு தொடர்ந்து 2 நிமிடம் மூச்சை வெளியேற்ற வேண்டும். கேட்கும் போது சுலபமாகத் தெரியும். எங்கே நீங்கள் செய்து பாருங்கள். ஆகக் கூடியது மூன்று செக்கன்கூட பலர் தாக்குப் பிடித்திருக்க மாட்டீர்களே! (60 செக்கன் ஒரு நிமிடம் என்று தெரியும்தானே!) சிறுவனின் இந்தச் சாகசம் அமெரிக்காவின் பல அரங்குகளில் பல்லாயிரம் மக்களை வியப்படைய வைக்கிறது. ஏப்பராஜா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அம்மி மிதிச்ச மம்மி வந்தாச்சு

எடுக்கப்போகும் படங்களின் பெயர்களை பிலிம் சேம்பரில் பதிவு செய்து வைத்துவிடுவார்கள். அப்படி பதிவு செய்து விட்டால் வேறு யாரும் அதே பெயரில் படமெடுக்க முடியாது. சமீபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய பட பெயர்கள் இவைதான். 'எங்க ஊரு கவுண்டர்' 'என் இனிய ராசாவே' 'அம்மி மிதிச்ச மம்மி வந்தாச்சு' 'செம்படை' 'சத்தமில்லாத முத்தம்' 'சன் ஆப் இண்டியா' 'மிஸ் மெட்ராஸ்' 'நியூ இயர்' 'ரவுடி மாப்பிள்ளை' 'வெளிநடப்பு' 'பாரதி கண்ணம்மா' 'கிரிமினல் 007' 'ஜுராசிக் சிட்டி' 'கருவறை சுவாமி' 'லவ்வர்ஸ் பார்க்' 'நான்கு முடிச்சு' 'நம்ம ஊரு நாட்டாமை' 'நாளை நமதே' 'பாலின் நிறம் மாறுவதில்லை' 'ஜிசர்வ் தொகுதி எம்.எல்.ஏ.' 'என்னை விட நாடு பெரிது' 'குட் மோனிங் மேடம்' 'ஹலோ மேடம்' 'மிஸ்டர் கருப்பு பூனை' 'மதர் இண்டியா' 'பரமாத்மா' 'ஊரெல்லாம் உங்க பேச்சு' 'அன்னியன்' 'வந்தே மாதரம்'

பெயர்கள் எப்படி? என்ன படத்திற்கு போகிறாய் என்று அம்மா கேட்டால்; தொண்டையைச் செருமி சரிப்படுத்திக் கொண்டு "அம்மி மிதிச்ச மம்மி வந்தாச்சு" என்று சொல்லிவிட்டு கிளம்ப வேண்டியதுதான்.



சரத்குமார்-மீனா
படம்-நாட்டாமை ...

## முகப்பி...

ராதிகா
படம்:-சித்திரச்...

சரத்குமார்
விஜயசாந்தி
படம்:-ஸ்ரீட் ...

## குதிரைக்கு கடிவாளம்

கமல்-ஆம்னி ஜோடி தெலுங்கில் நடித்து தூள் கிளப்பி இப்போது தமிழில் மொழி மாற்றப் பட்டுள்ள படம் பாசவலை. அதன் இயக்குநர் கே. விஸ்வநாதர் முரசுக்கு வழங்கிய பேட்டி.

**'பாசவலை' எந்த வகையான படம்?**

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படக்கூடிய தூய்மையான காதலை சித்தரிக்கும் படம் என்று கூறலாம். காதல் என்பது பல வகையாக இருக்கிறது அல்லவா? நேசிக்கும் இரு உள்ளங்கள் ஒன்று கூடி வாழ்க்கை நடத்துவது ஒரு வகை. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நேசித்த உள்ளங்கள் இணைய இயலாமல் போவது ஒரு வகை. தனது நேசத்தை வெளிப்படுத்தாமலே தூரத்திலிருந்தே அன்பைப் பொழிந்து ஆனந்தப் படுவது ஒரு வகை. காதலை சரீரத்தின் தளமாக கருதாமல் ஆத்மாவின் ராகமாக எண்ணுகிற சில நல்ல உள்ளங்களை சுற்றிச் சுழலும் கதை இது.

**இந்தக் கதைக்கு பொருத்தமான நாயகன் என்று கமல் சாரை தேர்ந்தெடுக்க காரணம் என்ன?**

இந்தக் கதைக்கு பொருத்தமான நாயகன் என்று கமல் சாரை தேர்ந்தெடுக்கவில்லை. கமல் சார் நடிக்க ஒரு படத்தை உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்தபின், உருவாக்கப் பட்ட கதை இது. குதிரைக்கு பொருத்தமான கடிவாளம் அது.

**படப்பிடிப்பில் கமல் சாருடன் இணைந்து பணிபுரியும் போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி....?**

நானும் கமல் சாரும் இணைந்து பணிபுரிந்த முதல் படம் அல்ல இது. நான் ஏற்கனவே அவர் நடித்த 'சாகர சங்கமம்' (சலங்கை ஒலி) 'சுவாதி முத்யம்' (சிப்பிக்குள் முத்து) போன்ற படங்களை இயக்கியுள்ளேன். ஆனாலும் இப்போதும், இந்தப் படத்தின் படப்பிடிப்பிலும் கூட ஒவ்வொரு நாளும் காலையில் செட்டுக்கு வரும் போது, முதல் முதலாக நடிக்க வரும் ஒரு புதுமுக நடிகரைப் போலத்தான் வந்தார். அவ்வளவு தொழில் பக்தி அவருக்கு. ஆனால் கேமரா முன் நின்று நடிக்க ஆரம்பித்துவிட்டால், அப்பப்பா! அபாரம். இந்தப்படத்தில் அவர், நடிப்பின் பல எல்லைகளைத் தொட்டிருக்கிறார் என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு புத்தகத்தைக் கூர்ந்து படிப்பது போல் அவருடைய நடிப்பை நுணுக்கமாக கண்டு ரசிக்க வேண்டும்.

'பாசவலை' விரைவில் வருகிறது திரைக்கு. கமல் ரசிகர்களுக்கு கொண்டாட்டம்.



பிரபு தேவா-சில்பாஷெட்டி
படம்-மிஸ்டர் ரோமியோ

## காதோடு சொல்லுகிறோம்

இந்தியில் இருந்து தமிழுக்கு வந்து சூப்பர் ஸ்டாருடனும் நடித்து விட்டவர் அந்த மூன்றெழுத்து நடிகை. தற்போது தமிழ் நாட்டில் ஓடிக் கொண்டிருக்கும் மிஸ்டர் படத்திலும் வெளுத்து வாங்கியிருப்பவர் அவர். தமிழக அரசியல்வாதியொருவரின் மகனது உடும்புப் பிடியில் இருக்கிறாராம். அந்த மூன்றெழுத்து நடிகை முக்காலா முக்காபலா யம்மா

'கௌ' நடிகை 'வரன்' நடிகரோடு நடிக்கும் படத்தில் தாராளமாக நடித்திருக்கிறாராம். சாட்சி என்பதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பார்த்தால் அந்தப் படத்தின் பெயர் வரும். படவாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் விழாக்களுக்கு ஆஜராகிவிடுகிறார் 'கௌ' நடிகை. 'கௌ' நடிகை மடக்கிய ஹிந்தி ஹீரோ என்னவானார்? குட்பை!

தமிழில் தயாராகி இந்தியிலும், தெலுங்கிலும் வெளியாகப் போகும் படத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறார் 'மீன்' நடிகை. இந்தி ரசிகர்களை கொக்கி போட்டிழுக்க வேண்டும் என்பதற்காக 'ஆக்ஷன்கிங்' உடன் 'கலிங்கம்போல்' ஒட்டி நடித்துள்ளதாம் 'மீன்'. இதுதாண்டா வலைவீசும் மீன.

## வெயிலுக்கு இதம்

தமிழ் நாட்டில் அதுவும் சென்னையில் இது உச்சி வெயில் காலம். சுகன்யாவும், பாக்கியராஜும் குளிரான குன்னூரில் இருந்து தப்பிவிட்டார்கள். 'ஞானப்பழம்' படப்பிடிப்பை சுகன்யா மற்றும் தனது படக்குழுவினர் சகிதம் நடத்திவிட்டு 'அப்பாடா' என்று சென்னைக்கு திரும்பிவந்துள்ளார் பாக்யராஜ்.

## ஏக்கம்

பாதாம் காய்ந்த நடு! ...

## உ...

படத்தில் ஒப்பாரமாய ...
கிரிக்கெட் போட்டியை ...
சார்ஜா போட்டி நடந்த...
பிடிக்கும். கிரிக்கெட்டை பிடி...
சார்ஜாவில் சங்கீதாவும் ...
பத்திரிகைகள் கொட்டை ...
பம்பாயில் இருந்து ...
அதிர்ச்சிக்கு காரணம் ...
சங்கீதாவும் சல்மான்கானுட...
பிரபலமான சமாச்சாரம்.
அதிர்ச்சியடைந்த ...
சங்கீதா சந்திக்க மறுத்துவி...
வெறுத்துப்போன ...
சங்கீதா- அசாருதீன் ...
ஆனாலும் பத்திரிகைகளில் ...

## சமரச சங்கீதா

'புன்னகுட்டிக்காரன்' பட நாயகி சங்கீதா (இந்தி நடிகை அல்ல) பார்த்திபன் சொன்னால் தான் நடிப்பேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார். பிரபுவோடு நடிக்கவும் மறுத்திருந்தார். இப்படியே போனால் சினிமா உலகில் நிலைப்பது கஷ்டம் என்ற சங்கதியை யாரோ சங்கீதாவுக்கு புட்டு வைத்துவிட்டார்கள். அதனால் பிரபுவை வலியத் தேடிப்போய் சமரசம் செய்தாராம். இப்போது புதிய படம் ஒன்றில் பிரபுவோடு நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் சங்கீதா. பலிக்காத பந்தா.



தேவராஜ்-நிரோஷா
படம்-பொலீஸ் லாக்கப்



சோமி அலி

## மினி சினி

* பிரபல மலையாள இயக்குநர் சிபிமலையில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் தமிழ்ப் படமொன்றை இயக்கவுள்ள செய்தி 'சினிசிட்'டில் ஏற்கனவே வெளியானது. இப்போது இன்னொரு செய்தி பிரபுவுடன், மலையாள நடிகர் சுரேஷ் கோபியும் இப்படத்தில் நடிக்கவுள்ளார்.
* 'சின்னத்தம்பி' படத்தைத் தயாரித்தவரும், சத்தியராஜின் ரசிகர் மன்றத் தலைவருமான கோபாலு அடுத்து ஒரே நேரத்தில் இரண்டு படங்களைத் தயாரிக்கவுள்ளார். அவற்றில் ஒன்றில் சத்தியராஜ் கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப்படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கவுள்ளார். சத்தியராஜ்-கே.எஸ். ரவிக்குமார் இணையும் முதல் படம் இது.
* 'டேக் இட் ஈஸி ஊர்வசி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வரும் தீனா, முன்னர் மந்தாகினி, இந்து போன்ற பெயர்களில் நடித்துள்ளார்.
* 'லக்கிமேன்' படத்தை தயாரித்த நிறுவனம், கார்த்திக் நடிக்கும் 'மாஜிக்மேன்' என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தது. தற்போது இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.
* மலையாளத்தில் மோகன்லால் நடித்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'ஸ்படிகம்' என்ற படத்தை தெலுங்கில் தயாரித்து வருகிறார்கள். தெலுங்கில் நாகார்ஜுன்-ரோஜா நடித்து வரும் இப்படத்திற்கு 'வஜ்ரம்' எனப் பெயரிட்டுள்ளது.
* கேயார் இயக்கிவரும் 'மாயா பஜார் 1995' படத்தில் ஊர்வசி இரட்டை வேடத்தில் நடிப்பது தெரிந்ததே. இந்தப்படத்தில் ஊர்வசி மட்டுமல்ல, கதாநாயகனாக நடிக்கும் ராம்கியும் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.
* தமிழ், தெலுங்குப் படங்களில் நடித்துவரும் விசித்ராவுக்கு ஹிந்திப் படம் ஒன்றில் நடிக்க அழைப்பு வந்துள்ளது.
* 'ஏழைஜாதி' படத்திற்குப் பின்னர் ஜெயப்பிரதா தமிழில் நெப்போலியனுக்கு ஜோடியாக 'முந்தய' வில் நடிக்கிறார்.
* சில வருடங்களுக்கு முன் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்ட டாக்டர் ராஜசேகரின் 'இதுதாண்டா பொலிஸ்' படத்தின் இரண்டாவது பாகம் 'புலிக்குப் பிறந்தது' என்ற பெயரில் தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வருகிறது.
* 'புதிய மன்னர்கள்' படத்திற்குப் பின்னர் விக்கிரமன் இயக்கும் படத்தை 'சூப்பர் குட்பிலிம்ஸ்' நிறுவனம் தயாரிக்கின்றது. இந்தப் படத்தில் கதாநாயகனாக விஜய் நடிக்கிறார்.
* ரதினி நடிக்கும் 'முத்து' படத்தை அடுத்து கவிதாலயா தயாரிக்கும் படத்தில் கமல் நடிக்கிறார். இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் இதை இயக்குகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சி னி வி சி ட்




# ...ாராக இருப்பாரா அசார்

...க்கிறாரே அவர்தான் சங்கீதா பிஜ்லானி. சானியா கோபிகைக்கான ...காட்சியில் கண் அயராமல் கண்டு களித்திருப்பீர்கள்.

...கீதாவும் அங்குதான் இருந்தார். கிரிக்கெட் என்றால் சங்கீதாவுக்கு ... இந்திய கிரிக்கெட் கப்டன் அசாருதீனை ரொம்ப ரொம்ப பிடிக்கும். ...சேர்ந்து சுற்றினார்கள். சிரித்துப் பேசினார்கள் என்று இந்திய ...செய்திகள் போட்டிருந்தன.

...திகளைப் படித்த இளம் ஹீரோ சல்மான்கானுக்கு அதிர்ச்சி. ... சங்கீதாவை தீவிரமாகக் காதலித்துக் கொண்டிருந்தார். ...பொழுதை கழித்துக் கொண்டிருந்ததும் பம்பாய் படவுலகில்

...ஷார்ஜாவில் இருந்து திரும்பிய சங்கீதாவை சந்திக்க விரும்பினோ.

...சங்கீதாவின் காதலை தன் மனசிலிருந்து ஒட்ட நறுக்கிவிட்டார் ...நாமாலும் இதுவரை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளப்படவில்லை. ...புகைந்து கொண்டேயிருக்கிறது. சங்கீதாதான் நெருப்பு.

அசார் உஷாராக இல்லாவிட்டால் நெருப்பு விழுங்கிவிடும் என்று எழுதியிருக்கிறது பம்பாய் இதழ் ஒன்று.

சரி-சங்கீதா லேட்டஸ்டாக ஒரு பேட்டியில் சொல்லியுள்ளதையும் அறிந்து கொள்ளுங்கள். "நான் யாரைக் காதலிப்பது என்று இதுவரை முடிவு செய்யவில்லை. சல்மான்கானோடு சேர்ந்து சில விருந்துகளுக்கு சென்றதால் மட்டும் அவரைக் காதலிக்கிறேன் என்று அர்த்தமாகிவிடுமா?"

"அப்படியானால் அசாருதீன்..?"

"அவர் ஒரு ஜெண்டில் மேன். அவரை எனக்கு பிடிக்கும். நான் அவரின் தீவிர விசிறி. அதற்காக அவரைக் காதலிக்கிறேன் என்று அர்த்தமா?"

கேள்வி கேட்ட நிருபர் ஆளைவிட்டால் போதும் என்று கம்பி நீட்டிவிட்டாராம்.

## நேரடித் தொடர்பு

ஊர்வசி முன்பெல்லாம் வந்த வாய்ப்புகளை நழுவவிடாமல் கெட்டியாகப் பிடிப்பதில்தான் கவனம் செலுத்தி வந்தார். இப்போது அப்படியில்லை. தெரிவு செய்துதான் பற்றிக் கொள்ளுகிறார். வாய்ப்புகளை! சம்பள விஷயமானாலும் சரி, கதை கேட்பதானாலும் சரி வேறு யாரையும் தலையிட அனுமதிப்பதில்லை. எல்லாமே நேரடித் தொடர்புதான்.

## கண்ணே! கண்ணே கண் திறவாய்

நடிகை மீனாவுக்கு தூங்குவது என்றால் கொள்ளைப் பிரியம். காலை நேரத்தில் போர்த்து மூடிக் கொண்டு கும்பகர்ண தூக்கத்தில் இருப்பாராம். அம்மா ராஜமல்லிகா தான் தட்டி எழுப்பிவிடுவாராம். மீனா எழுந்துகுள வேண்டுமானால் அம்மாவின் கரம் பட வேண்டும். நடிகையானாலும் தாய்க்கு மகள் தானே.

## வைரமுத்து மாளிகை

கவிஞர் வைரமுத்து சொந்தமாக ஒரு கல்யாண மண்டபம் கட்டியிருக்கிறார். ரஜினிகாந்த் திறந்து வைத்தார். கே.பாலசந்தர் வாழ்த்திப் பேசினார். கல்யாண மண்டபத்துக்கு தனது மனைவி பொன்மணியின் பெயரைச் சூட்டியிருக்கிறார். வைரமுத்து. வாழ்த்திப் பேசிய பாலசந்தர் "வைரமுத்து புத்திசாலி. பிழைக்கத் தெரிந்தவர்." என்று பாராட்டினார்.

## முதல் பயணம்

'லவ்பேர்ட்ஸ்' படப் பிடிப்புக்கள் வெளிநாடுகளில் நடந்து முடிந்து விட்டன.

பிரபுதேவா - நக்மாவோடு வடிவேலுவும் வெளிநாடுகளுக்குப் போய் வந்தார். நடிக்க வந்த பின்னர் மட்டுமல்ல, வாழ்க்கையிலேயே அதுதான் வடிவேலுக்கு முதலாவது வெளிநாட்டுப் பயணம். "கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல இருந்தது" என்று உண்மையைச் சொல்லியிருக்கிறார் வடிவேலு.

வடிவேலு சென்ற விமானத்தில் தான் ரஜினிகாந்தும் பயணம் செய்தாராம். இலண்டனில் பார்க்க வேண்டிய இடங்களை ஒரு தாளில் குறித்துக் கொடுத்தாராம் ரஜினி. "மறக்காமல் பார்த்துவிட்டு வந்துவிட்டேன்" என்கிறார் வடிவேலு.

## சக்கை போடல்

'ஹம் ஆப்கே ஹைன் கௌன்' இந்திப்படம் (சல்மான்கான்-மாதுரி டிக்ஷித்) 250 நாட்கள் தாண்டி இந்தியாவில் ஓடிக்கொண்டிருக்கிறது. இன்றுவரை ஹவுஸ்புல் காட்சிகள். பதினாலு பாடல்கள் உள்ள படம். இந்தியாவில் நூறு நாட்களை தாண்டி ஹவுஸ்புல்லாக ஓடிக் கொண்டிருக்கிருக்கும் ஆங்கிலப்படம் 'ஸ்பீட்' (கியனு ரீவ்ஸ் நடித்தது)

## என் என்றால் எண்ணெய்

இந்தி நடிகை சோமி அலி கவர்ச்சி விடயத்தில் இயக்குநர் என் என்றால் எண்ணெயாகும் ரகம். 'கப்' என்னும் இந்திப் படத்தில் ஒரு பாடல் காட்சி. "எப்படி நடிக்க வேண்டும்?" என்று கேட்டார் சோமி அலி. "கவர்ச்சி முக்கியம்" என்றார் இயக்குநர். அவ்வளவுதான் மேலாடையில் பட்டன்களை போடாமல் வந்து கமரா முன் நின்றுவிட்டார் சோமி அலி. இயக்குநருக்கு பலத்த அதிர்ச்சி. "பட்டன்களை போடு சோமி" என்று கத்தினார். "எத்தனை பட்டன்களை?" என்று கேட்டார் சோமி. "மூன்று பட்டன்களை!" என்றார் இயக்குநர். சோமி அலி போட்டிருந்த மிகச் சிக்கனமான மேலாடையில் இருந்ததே மூன்று பட்டன்கள்தான்.





செந்தில்-வடிவேலு
படம்-நீலக்குயில்

## ரசிகன் போலத்தான் இதுவும்

'ரசிகன்' படத்தில் விஜய்-சங்கவி ஜோடி அமர்க்களப்படுத்தியிருந்தது. அந்த அமர்க்களத்தைப் பார்த்து ரசிகர்கள் 'ஜொள்ளு' விட்டதால் சங்கவியின் மார்க்கெட் தட தட வென்று உயர்ந்து போனது. இப்போது விஜய்-சங்கவி இருவரும் இணைந்து நடித்து வரும் படம் 'விஷ்ணு' முடிவடையும் நிலையில் உள்ள 'விஷ்ணு'வில் 'ரசிகன்' படத்தைவிட அதிரடியான காட்சிகள் வருகிறதாம். சங்கவி வளைந்து நெளிந்து ரொம்பக் கஷ்டப்பட்டு நடித்திருக்கிறாராம். அடப் பாவமே! எல்லாம் கலைச் சேவைக்காகத்தான். நம்புகிறீர்களா?

## இரண்டுமே 'பாஸ்'

தமிழில் 'மன்னன்' படம் ரஜினி நடித்து ஓஹோ என்று ஓடியதால் தெலுங்கில் சிரஞ்சீவி-நக்மா ஜோடி நடிக்க அர்ஜுன் என்ற பெயரில் தயாராகியது. தெலுங்கிலும் மகா வசூல். அதை அப்படியே தமிழில் 'டப்' செய்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டார்கள். ஏற்கனவே 'மன்னன்' தமிழில் வந்து சக்கைபோடு போட்டதால் அர்ஜுன் தமிழில் வசூல் அள்ள முடியாமல் போய்விட்டது.

இப்போது சிரஞ்சீவி நடித்த 'ரவுடி பாஸ்' மொழி மாற்றுப் படம் திரைக்கு வரவிருக்கிறது. அதையடுத்து சிரஞ்சீவி-ரோஜா நடிக்க மற்றுமொரு மொழி மாற்றுப் படம் திரைக்கு வரப்போகிறது. அதன் பெயர் 'பிக்பாஸ்'. பெயர் ஒற்றுமைப்பதால் இரண்டாவது படம் பாதிக்கப்படலாம். எப்படியோ ஒரு விஷயம் மட்டும் சிரஞ்சீவி படங்களில் பஞ்சமே இல்லாமல் இருக்கும். அது என்ன? தூக்கலான கவர்ச்சி.


## ஒரு கோடிக்கு குறையாது

ஏ.வி.எம்.பட நிறுவனம் விரைவில் பொன்விழாவைக் கொண்டாடப் போகிறது. அதனை முன்னிட்டு ஏ.ஆர்.ரகுமான் இசையில் பிரபுதேவா நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கப் போகிறது. இதற்காக பெருந்தொகை ஒன்று ரகுமானுக்கு கொடுக்கப்பட்டு விட்டது.

பெருந்தொகை என்றால் எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? சொன்னால் நம்பவே மாட்டீர்கள். முதலில் சில விபரங்கள். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் பாடல் கசட்டுக்களை இந்தியில் வெளியிடும் உரிமை 85 இலட்சம், தமிழில் வெளியிடும் உரிமைக்கு 80 இலட்சம், வெளிநாட்டு விற்பனை உரிமைக்கு 60 இலட்சம் (இதெல்லாம் இந்திய பண மதிப்பு நம் நாட்டு மதிப்பு இன்னும் அதிகம்) இவ்வாறான விலைகளில் விற்பனை உரிமைகள் இருக்கும்போது சம்பளம் எவ்வளவு இருக்கும் நிச்சயமாக ஒரு கோடிக்கு குறையாது. இந்தியாவில் அதிக சம்பளம் வாங்கும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்மை அடைந்தவர்களுக்கும் அடையப் போகிறவர்களுக்கும்....



முதன்மையாகத் தாய் கருவுற்றது தெரிந்தவுடன் மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற வேண்டும். கருவுற்ற நாள் முதல் ஏழு மாதங்களுக்கு ஒரு முறையும், எட்டு, ஒன்பது மாதங்களில் 15 நாட்களுக்கு ஒரு முறையும், பிறகு பிரசவ காலம் வரை வாரம் ஒரு முறையும் மருத்துவரிடம் காண்பிப்பது அவசியம். ஒவ்வொரு முறையும் இரத்தக் கொதிப்பு மற்றும் சிறுநீரில் உப்பு, சீனி உள்ளதா? என்பதை மருத்துவப் பரிசோதனை செய்து அறிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக தலைவலி, காய்ச்சல், சளி போன்றவற்றிற்கு தாங்களாகவே மாத்திரை வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## உணவு முறை

நான்காவது மாதத்தில் இருந்து குழந்தை வேகமாக வளர ஆரம்பிப்பதால் நன்கு பசி எடுக்கும். அப்பொழுது சத்தான உணவு உட்கொள்ளுதல் அவசியம். உணவில் காரம் குறைத்து காய்கறி, பழங்கள் நிறையச் சேர்த்துக் கொள்ள வேண்டும். நீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும். சிலருக்கு முதல் மூன்று மாதங்கள் வாந்தி அதிகமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் வாந்தி நிற்கும் வரையிலும் திரவ உணவு உண்ணுதல் நன்று.

தினமும் இரு வேளை குளித்து இலகுவான ஆடைகள் அணிய வேண்டும். பகலில் இரண்டு மணிநேரமும், இரவில் எட்டு மணி நேரமும் உறக்கம் தேவை. கடினமான வேலைகளைத் தவிர்த்து, சிறு சிறு வேலைகள் செய்யலாம்.

## தடுப்பூசி.

கர்ப்பம் தரித்த முதல் நாலு மாதத்திற்குள் முதலாவது தடுப்பு ஊசியும், ஒரு மாத இடைவெளியில் இரண்டாவதும், பிரசவத்திற்கு ஒரு மாதம் முன்பு மூன்றாவது ஊசியும் போட்டுக்கொள்ளவேண்டும். இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட பிரசவத்திற்கு 2 தடுப்பூசிகள் போதுமானது. இவ்வாறு தடுப்பூசி போட்டுக் கொள்வதால் பிறக்கும் குழந்தைக்கு நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

## கவனிக்க வேண்டியவை:

சில பெண்களுக்குக் கர்ப்பகாலத்தின் போது சில அறிகுறிகள் தோன்றலாம். உதாரணமாக,

1. கர்ப்பவாயிலிருந்து இரத்தக்கசிவு.
2. அடிவயிற்றில் வலி.
3. கால், முகம் வீங்குதல்.
4. திடீரெனப் பார்வை குறைதல்.
5. காய்ச்சல்.
6. வாந்தி தொடர்ந்து இருத்தல்
7. சிறுநீரக எரிச்சல்.
8. பனிக்குடநீர் வடிதல்
9. குழந்தை அசைவு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தெரிதல்.
10. வெள்ளைபடுதலும், நமைச்சலும்.

மேற்கண்ட அறிகுறிகள் தோன்றினால், கர்ப்பிணிகள் உடன் சென்று மருத்துவரிடம் ஆலோசனை பெற்று சிகிச்சை பெற வேண்டும்.


## எடை அதிகரிப்பு

கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்ப காலத்தின் போது குழந்தை வளர்வதன் காரணமாகவும், கர்ப்பப்பை வளர்வதன் காரணமாகவும், எடை பத்திலிருந்து பன்னிரண்டுகிலோ அதிகமாகும். அதற்குக் குறைவாகவோ, அதிகமாகவோ இருந்தால் அதற்குரிய காரணங்ளை ஆராய வேண்டும். எடை குறைவாக இருந்தால் குழந்தை வளர்ச்சி குறைவாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளதா அல்லது பனிக்குட நீர் அதிகமாக உள்ளதா என்று பார்க்க வேண்டும். அல்லது கர்ப்பகாலத்தின் போது உண்டாகும் இரத்தக் கொதிப்பினால் இருக்கலாம். ஆகவே முறையான சிகிச்சை அவசியம்.

இரத்தத்தில் ஈமோக்குளோபின் அளவு, இரத்தகுறூப்+ஆர்.எச். குறூப், சிறுநீரில் உப்பு, சீனி போன்றவற்றை சோதித்துக் கொள்ள வேண்டும். பெண்ணுக்கு ஆர்.எச். குறூப் நெகடிவ் ஆக இருந்தால், கணவனுக்கு ஆர்.எச்.குறூப் செய்வது அவசியம்.

## தாய்ப்பால்

முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால்



கொடுப்பது மிகவும் அவசியம். இதனால் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும். புட்டிப் பால் குடிக்கும் குழந்தைக்கு வயிற்றுப் போக்கு அடிக்கடி ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

# லேடீஸ் ஸ்பெஷல்

## நீங்கள் உஷார் பேர்வழியா இல்லையா?



**ஒருவர் எவ்வளவுதான் படித்து இருந்தாலும், அவசர காலத்தில் சமயோசிதமாக செயல்பட வேண்டும்! அவர்தான் 'புத்திசாலி' என கருதப்படுகிறார். நீங்கள் சமயோசிதமாக செயல்படக்கூடியவரா? சிக்கலான நேரத்தில் அமைதியாக சிந்தித்துக் கொண்டிருப்பவரா? இதோ ஒரு 'குவிஸ்!' கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு 'சரி' அல்லது 'தவறு' என பதில் அளியுங்கள்.**

1. டாக்டர்கள் எப்படி சத்திர சிகிச்சை செய்கிறார்கள் என 'டிவி'யில் காட்டினால் அதை நான் விரும்பிப் பார்ப்பேன்.
2. கீழே விழுந்து அடிபட்டால் மற்றவர்களிடம் அனுதாபம் கிடைக்கும். சிலர் அதைவிரும்புவார்கள். ஆனால், நான் என் வலியை வெளியே தெரிவிக்க மாட்டேன்.
3. இரத்தத்தை அவசரமாக தேவைப்படுவோருக்கு வழங்க தயங்க மாட்டேன்.
4. எனது காரில், வைக்கும் முதல் உதவிப் பெட்டி, அவசர விளக்கு ஆகியவை எப்போதும் இருக்கும்.
5. சிக்கலான இயந்திரத்தைக்கூட இயக்கும் விதத்தை அறிந்து வைத்திருப்பேன்.
6. என் பொக்கட் டையரியில் போலிஸ், தீயணைப்பு ஆஸ்பத்திரி டெலிஃபோன் இலக்கங்கள் கண்டிப்பாக இருக்கும்.
7. சிக்கலான நேரத்தில் என் உள்ளுணர்வு சரியான பாதையில் செல்லத் தூண்டும்.
8. நல்ல ஆலோசனைக்கு என்னை அணுகலாம் என என் நண்பர்களுக்குத் தெரியும்.
9. தற்காப்பு கலைகளில் நான் பயிற்சி பெற்றுள்ளேன்.
10. யாராவது என்னை அவமரியதையாகப் பேசினால் உடனே தக்க பதிலடி கொடுப்பேன்.
11. கார், பைக் ஆகியவற்றின் 'டுப்ளிகேட்' சாவியையும் எடுத்துக் கொள்ளாமல் நான் வீட்டைவிட்டு வெளியேறமாட்டேன்.
12. சரியான நபர்களை உரிய நேரத்தில் தேர்ந்தெடுப்பது எனது திறமைகளில் ஒன்று.

### மதிப்பெண்:

**மேலே உள்ளவற்றில் ஏதாவது 9க்கு மேற்பட்ட விடைகளுக்கு (9-12) நீங்கள் சரி என்று பதிலளித்திருந்தால் மிக புத்திசாலி என்று அர்த்தம்.**

எந்த திடீர் திருப்பத்தையும் சந்திக்கும் திறமைபெற்றவர்! அவசரமான நேரத்தில் எல்லாரும் உங்கள் ஆலோசனையத் தான் கேட்பார்கள்.

5-8 'சரி': வாழ்வா சாவா என்ற பிரச்சனையை சந்திக்கும் போது சமமான முடிவை நீங்கள் மேற்கொள்வீர்கள். உங்களது விரைவான தெளிவான-சிந்தனை காரணமாக பலமுறை வெற்றி பெறுவீர்கள்.

1-4 'சரி': எந்த ஆபத்தான சூழ்நிலையிலும் நீங்கள் தப்பி ஓடுபவரில் கடைசி நபராகத்தான் இருப்பீர்கள். எந்த முடிவையும் சுயமாக எடுக்க மாட்டீர்கள். மற்றவர்கள் முடிவுதான் உங்கள் முடிவாக இருக்கும். கொஞ்சம் உஷாராக இருந்தால் தான் நீங்கள் முன்னேற முடியும்.

# விரலுக்கென்ன அழகு

பெண்களின் ஒவ்வொரு உறுப்பிலும் அழகைக் கொடுத்திருக்கிறார் அந்த இறைவன். இதில் நாம் தினமும் வேலை செய்யும் கை விரல்களை கவனிக்காட்டா விட்டால் எப்படி?

கைவிரல்கள் சதைப்பிடிப்பற்று மெலிந்து காட்சியளித்தால்தான் அழகு தெரியுமா? 'லேடீஸ் பிங்கர்' என்று வெண்டைக் காய்க்கு பெயர் வைத்திருக்கின்றனர். அப்படியிருக்க நம்ம விரல்கள் முருங்கைக் காய் மாதிரி இருந்தா எப்படி?

சரி....! வெண்டைக்காய் விரல்கள் மாதிரி இருக்கவேண்டுமானால் வீட்டு வேலைகளை சுறுசுறுப்பாகச் செய்யவேண்டும்...! (போச்சுடா...அங்கதானே இடிக்கிது என்கிறீர்களா?)

★பாத்திரம் தேய்த்தல், துணிதுவைத்தல் போன்ற வேலைகளைச் செய்வது கைவிரல்களுக்கு நல்ல பயிற்சியாகும்.

★இரவு படுப்பதற்கு முன்பும், அதிகாலையிலும் கைவிரல்களில் விளக்கெண்ணை தடவி இரண்டு கை விரல்களையும் கோத்து பிணைத்து, 15 நிமிடங்கள் உருவிவிட்டுக் கொள்ளுங்கள்.

★ஒலிவ் எண்ணையைத் தடவி உருவி விட்டு வந்தால் கை விரல்கள் மொழு மொழு வென்று பளபளப்படைந்து அழகாக இருக்கும்.

★ 'டைப்' அடிப்பது போன்ற பாவனையில் விரல்களை வேகமாக அசைத்துப் பழகினால் விரல்களின் அமைப்பு சீராவதோடு விரல்களும் சுறுசுறுப்பாகும்!

★பாலாடையையும், கோழி முட்டையின் வெண்கருவையும் கலந்து இரவில் கைவிரல்களில் தடவி காலையில் பச்சைப் பயிறு மாவு போட்டு தேய்த்துக் கழுவினால் விரல்கள் பேரழகுபெறும்.

# கருத்தரங்கம்

அமரர் டாக்டர் மு.வரதராசன் தமிழகத்தின்தலைசிறந்த படிப்பாளி, படைப்பாளி. கருத்தரங்கில் இன்று அவர்.

## வல்லமை

தமிழ் மொழி நல்ல மொழிதான்; ஆனால், அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமா? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்பட வில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

வல்லமை இல்லாத நல்ல தன்மை வாழாது தம்பி. அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றது தான்.

நம் முன்னோர் இதை மறந்த காரணத்தால் தான் எத்தனையோ இழந்தனர்; ஒன்று சொல்லட்டுமா?

தமிழ்க்கலை நல்ல கலைதான்; அதிலும் யாழிசை நல்ல இசைதான்; ஆனால் வாழ்ந்ததா? இல்லை ஏன்? முன்னே, செல்வாக்குப் பெற்றவர்கள் யாழைப் புறக்கணித்தார்கள். பிறகு பொதுமக்கள் மறந்தார்கள். இன்று தமிழுக்கும் ஏறக்குறைய அதேநிலை இருப்பதை எண்ணிப்பார்; உன் மனம் புண்படும்.

பொதுமக்களுக்குத் தங்கள் எதிர் காலத்தையும் நிகழ்காலத்தையும் சேர்த்து எண்ணித் தேவையை உணர இன்னும் தெரியவில்லை. அவர்கள் களி மண்ணாய்த் திரண்டு கிடக்கிறார்கள்; யார் யாரோ நீர் சேர்த்துப் பிசைந்து தமக்கு வேண்டியவாறெல்லாம் உருவங்களைச் செய்து கொள்கிறார்கள்.

# மாம்பழமும் மருந்தாகும்

மாம்பழத்தின் தோலைப் பாலில் நன்கு அரைத்து தேனுடன் சேர்த்துக் கொடுத்தால் இரத்தபேதி நிற்கும். மாங்காய்த் தோலை நெய்யில் வறுத்து, சீனியுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் ஒழுங்குபடும். மாங்கொட்டைப் பருப்பைத் தூளாக்கி ஒரு சிட்டிகை அளவு தேனுடன் கலந்து சாப்பிட்டால் மூல நோய்க்கு நல்லது.

மாந்தளிர்களை உலர்த்திப் பொடியாக்கிச் சாப்பிட்டால் நீரிழிவு நோய்க்கு நல்லது. மாவிலைச் சாம்பலைத் தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து எரிகாயங்களுக்கு போட்டால் புண்கள் விரைவில் ஆறிவிடும். மாம்பழத்தை அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுங்கள். கை, கால் நடுக்கம், பலவீனம், மயக்கம், இவைகள் மாறிவிடும். மாம்பழத்தை கருவுற்ற பெண்களுக்கு கொடுங்கள். குழந்தை ஊட்டச்சத்துடன் பிறக்கும்.

## மாம்பழ சாடோ

பத்து நன்கு பழுத்த இனிப்பான மாம்பழங்களைப் பிழிந்து சாற்றை வடிகட்டி வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு தேக்கரண்டி ஏலப்பொடி, முந்திரிப்பருப்பை சிறு சிறு துண்டுகளாகச் செய்து இதனுடன் கலந்து அகன்ற பெரிய தட்டிலே ஊற்றி வெய்யிலில் வைக்கவும். மறுநாள் முந்திய நாள் ஊற்றிய கலவையின் மீது மீண்டும் இதே போல் மாம்பழச்சாற்றை ஊற்றவும். மீண்டும் இதை வெய்யிலில் வைக்க வேண்டும். இம்மாதிரி ஆறு நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

வெய்யிலில் வைக்கப்படும் இந்தச் சாறு நன்றாக உறைந்து கெட்டியாகி இறுகிவிடும். நன்றாகக் காய்ந்த பின் சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒயில் பேப்பரில் சுற்றி, காற்றுப் புகாத டின்னில் வைத்தால் ஐந்து மாதம் வரை பயன்படுத்தலாம். கெட்டுப்போகாது.

## ரசா சிவடி

**தேவையானவை:**

மாம்பழச்சாறு 1 கிலோ.
சீனி - 1 கிலோ.
ஏலப்பொடி 1 மேசைக்கரண்டி.
முந்திரிப்பருப்பு - 25 கிராம்.
நெய் - 1 மேசைக்கரண்டி.

**செய்முறை:** பழுத்த மாம்பழங்களைப் பிழிந்து வடிகட்டி சாறு எடுத்துக் கொள்ளவும். அடிகனமான பாத்திரத்தில் இந்தச் சாற்றை விட்டு இளஞ்சூட்டில் கொதிக்க விடவும். சற்றுக் கெட்டியானதும் சீனி, மற்றும் ஏலப்பொடி, முந்திரிப்பருப்பு போன்றவற்றைக் கலவையில் போடவும்.

பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் வரை கைவிடாமல் (அடிப்பிடிக்காமல்) கிளறி பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வந்ததும் நெய்தடவிய தட்டில் கொட்டி துண்டுகள் போட வேண்டும். சுவையான ரசாசிவடி தயார்.

# நேற்று இல்லாத மாற்றம்...



நல்ல நிறமாக இருக்வேண்டும் என்று யாருக்குத்தான் ஆசை இல்லை. கறுப்பா இருக்கிறோமே என்று கவலைப்படுகிறீர்களா? கறுப்பும் ஒரு அழகுதான்! உங்களுடைய மனக் குறையை தூக்கி எறிந்துவிட்டு 'நான் இப்போ அழ காயிட்டேன்' என்று ஒரு முறை சொல்லிப் பாருங்கள். ஓ.கே., இப்போ கீழே கொடுத்துள்ள ஐடியாக்களை படித்து தொடர்ந்து செய்து பாருங்கள்!

★கறுப்பாக இருப்பவர்கள் பசும் பாலுடன் கசகசாவைச் சேர்த்து அரைத்து குளிப்பதற்கு முன் உடல் முழுவதும் தடவி சிறிது நேரத்திற்குப் பின் குளியுங்கள். நாளடைவில் உடலின் நிறம் சற்று வெளுப்பாகும்.

★ தக்காளிப் பழங்களை தினமும் நிறையச் சாப்பிடுங்கள்.

★ நல்லெண்ணையுடன் சிறிது தண்ணீர் சேர்த்து கைகளில் இட்டுத் தேய்த்தால் வெண்ணை போன்று வரும். அதை உடலில் சூடுபறக்கத் தேய்த்துக் குளித்து வந்தால் தோலின் நிறம் மாறும்.


★சீரகம் போட்டுக் காய்ச்சிய தண்ணீரை தினமும் பருகிவந்தாலும் நிறத்தில் மாற்றம் ஏற்படும்.

★ 'முள்தானி மட்டி' என்ற கட்டி (கடைகளில் கிடைக்கும்) வாங்கி அதைப் பன்னீரில் குழைத்து உடலில் இரவில் பூசி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும். விலையும் குறைவு!

'உங்களிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிகிறது'என்று எல்லாரும் சொல்கிறார்களா?

# ஹம்மா - ஹம்மா - ஹம்மா

படத்தில் இருக்கும் பெண் ஒரு கவர்ச்சி அழகி. இடுப்புக்கு கீழே 13 என்று இலக்கம் இருக்கிறதே, வயதா? சேச்சே.... அப்படியெல்லாம் பொய் சொல்வாரா அழகி? அது வாக்குச் சீட்டில் உள்ள அவரது இலக்கம்! வாக்காளர்கள் கனவிலும் மறக்காமல் இருக்க வேண்டாமோ? அதற்காகத் தான் கண் இமைக்காமல் பார்த்து மறக்காமல் இருக்க இந்தத் தந்திரம்.அதாகப்பட்டது-இவர் ஒரு வேட்பாளர். சென்டல் லீமா என்னுமிடத்தில் போட்டியிட்டார். இரவு விடுதி நாட்டியம்தான் தொழில். பெயர், ஆசி டயஸ். பிரச்சாரத்தின் போது இந்த அழகி செய்த மற்றொரு பொதுச் சேவை-கர்ப்பத்தடை உறைகளை வழங்கியமை. இவர் கொடுத்த முக்கிய



வாக்குறுதி என்ன தெரியுமோ? 'இனி ஆடைக் குறைப்பே செய்ய மாட்டேன்' என்பதுதான். தேர்தலில் வெற்றி பெற்று விட்டாரா? என்றுதானே கேட்கிறீர்கள்? அமோக வெற்றி!

**பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 22**

## மகளிர் மட்டும் -பரிசுப் போட்டி-

### முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## யாருடைய பிணம்?

வங்காளக் கவிஞர் சக்தி சட்டோபாத்யாயா. மறைந்துவிட்ட அந்தக் கவிஞர் எழுதிய கவிதை ஒன்று இங்கே பிரசுரமாகிறது. சிறந்த கவிதைகள் காலவெள்ளத்தால் அழிவதில்லை. எக்காலத்திற்கும் எந்த நாட்களுக்கும் எப்படிப் பொருந்துகிறது பாருங்கள்!

கடற்கரையில்
அவ்வளவு இரைச்சல்!
நீரில் மிதப்பது
யாருடைய பிணம்?
எங்கிருந்து
வந்தான் அவன்?
சளசளவெனும்
இரவு சொல்வதெல்லாம்-
'நான் ஒரு கொடுங்கோலன்'



கடல்
- செத்தோ
உயிரோடோ
திடீர் என்று
இப்படி ஆகிவிடுகிறது
பிரியப்படும்படி.
தண்ணீர் முழுவதும்
நஞ்சா....?
இல்லை
குடிப்பதற்கு
நல்லதுதானா?
யாருக்குத் தெரியும்?
அமிர்தமும் நஞ்சுதானே!
மூளைக்குள்ளே
சோர்வு
வளர்ந்து வளர்ந்து
பெருகுகிறது.

கடற்கரையில்
அவ்வளவு இரைச்சல்!
நீரில் மிதப்பது
யாருடைய பிணம்
"அவன்?"

சளசளவெனும்
இரவு சொல்வதெல்லாம்
"நான் ஒரு கொடுங்கோலன்"

## சமாதானம்

தமிழ் அகராதியில்
இருந்து...
தானாகவே கழன்று விட்ட
சொற்களில் ஒன்று.

திருமலை சுந்தா.




## நிலவிற்குப் பிறக்கும் பௌர்ணமிகள்



நிலவு
உளவு பார்த்து;
பின் நட்சத்திரங்களிடம்
பிரியா நட்பு கொண்டு
இயற்கை தரிசனத்திற்காக
தவமிருக்கும்!
▫▫
சாகரம்
சந்திர வசீகரத்தினை
படம் பிடித்துக் காட்டும்!
▫▫
இரவின்
இரகசியங்கள் சுமந்துகொண்டு
வைகறை-
கிழக்கின் தாழ்வாரத்தில்
முகம் கழுவும்!
▫▫
நிலாவின் கூந்தல் விட்டு
தவறி விழ்ந்த பனிப்பூக்கள்
சூரியனுடன் சமர் செய்யும்!
தோல்வி என்று தெரிந்தும்
முயற்சிக்கும்!
▫▫
சூரிய சில்மிஷமில்லாத
நாட்களில்....
பூமியை ஸ்பரிசிப்பதாக
முடிவெடுத்துப் போகும்!
▫▫
பகலவன்
படுக்கைக்குப் போவதால்...
இரவு வரும்!
அதனால்.....,
அமாவாசை
ஆட்சி செய்யும்!
▫▫
அதன்பின்
நிலாவிற்குப் பௌர்ணமி
பிறக்கும்-
இரவு; பகல்
இரண்டும் செய்து கொண்ட
ஒப்பந்தம் கிழியும் வரை....

இஸ்லாஹிய்யா. கே. முனாஸ்

## "கண்ணீர்ப் பூக்கள்"

என்
காதல்
பூங்காவில்
நீ
ஒரு
கண்ணீர்ப் பூ!

வார்த்தைகளை
மனசிற்குள் தொலைத்துவிட்டு
மௌனத்தில்
காவியம்
படைத்தவள்!

இதழ்களில்
வசந்தத்தை
காட்டிவிட்டு
இரவுகளை
போர்க்களமாக
மாற்றியவள்!

என் எழுத்துலக
பிரவேசத்துக்கு
ஏடுகளையும்
'மை' நிரப்பிய
'பேனா'வையும்
பரிசளித்துவிட்டு
கற்பனைகளை
களவாடிச்சென்றவள்!

ஹெந்தளை நவா

## !?நன்றி!...

வானவில்லில்
ஊஞ்சல் கட்டினேன்
புதைந்துபோன
ஞாபகங்களை
நிழலாட (ச்) செய்வதற்கு!

இழந்துபோன
உறவுகளின் ஜீவரசங்கள்
என் நிம்மதியை
தீய்த்துவிட்டன!

என் நெஞ்சிலே
முடிந்துவைத்த
உன் நினைவு முடிச்சுகள்
'நீ'
என்னை மறந்துபோன
நேரம்-கனத்தது!

ஏன் வாழ்வின்
சகல சுகங்களும்
அடகு வைக்கப்பட்டுள்ளன
தைக்கும்
உன் நினைவுகளால்!

நான்
தேடி வந்தபோது
உன் இதய வாசலை
தாழிட்டுக்கொண்டாய்!



அந்நேரம்
புஷ்பவதியான
என் கற்பனைகள்
உன் காலடியில்
தரிசானது!

என் மனசெல்லாம்
புண்ணாக
வெந்து கொண்டிருக்கிறது-
உன்னை நினைத்த
பாவத்திற்காய்....!

அப்பாஸ்-மாவனல்லை.

## ஆதங்கம்

இந்த தேசத்தின் நிம்மதியை
குலைத்துச் சென்ற
யுத்தத் தென்றலைச்
சாடுகிறேன் நான்!!

புன்னகையை மறந்து
புரியாத வினாவோடு
பேருக்காக வாழ்ந்திடும்
பெற்றோர்களைக்
காண்கிறேன் தினம்!

நான் நேசித்த அமைதி
என் கண்ணெதிரேயே
சிதறுண்டு போகிறதை
நேற்றும் இன்றும்
சந்தித்தவாறு.....

அள்ளுண்டுபோன
அழகான சௌந்தர்யங்கள்
மீண்டும் வந்திடாதோ என்ற
வெகுவான ஆதங்கத்தில்
வியாபித்து
நிற்கின்றேன் நான்!

லோரி செல்வா.

## காதல் தீ

என்
எல்லாக்கனவிலும்
வந்து போகிறாய்!
நினைவுகளில் விஷம் தடவிய,
'ஆட்டோகிராப்' வசனங்கள்
என் உயிரின் விசையை
இழுத்துப் பிடித்தது.
••
உன்
ஞாபகத்தீயில்
அதிகமாய் செத்தது
என் வாழ்க்கை ஒன்றுதான்!
••
இந்த பிரபஞ்சத்தின்
எந்த மூலையிலும்
உன் நினைவுடன் நீந்தி
மரணித்துப் போவேன்-
விடிய விடிய முயன்றும்
உன்னை மறந்துபார்க்க....!

இந்த மனப் பிரளயத்தில்
வழியில்லையே கண்மணி!
••
என் தூரத்துக்கிளியே
மன்னித்துக்கொள்!
உன்னை எழுதிய
என் இளநெஞ்சில்
இனி எந்ததேவதையும்
குடியிருக்க முடியாது.

கன்ஸியா.

## கவிகள்

வானக்கவிகள்
மழையாய்க் கொட்டும்;
வாரிதிக்கவிகள்
அலையாய்க் கத்தும்;
கானகக் கவிகள்
கனிகளாய்ச் சிதறும்;
காதல் கவிகள்
கனவாய் சுவைக்கும்!
ஏழையின்கவிகள்
இல்லாமை பேசும்;
இருப்பவன் கவிகள்
ருசியினைப் பேசும்;
பாட்டாளி கவிகள்
பசியினைப் போக்கும்;
பரத்தையர் கவிகள்
பார்த்திட கூசும்!
இளையோர் கவிகள்
என்றும் இனிப்பவை!
முதியோர் கவிகள்
முன்னெடுக்க உகந்தவை;
காலத்தின் கவிகள்
அனுபவ முத்துக்கள்;
கலைஞனின் கவிகள்
கற்பனை சொத்துக்கள்!

நா. ஜெயபாலன்-பபிலை.





## திருவிழாக்கள்

மோதல் தவிர்ப்பு
மத்தாப்பு,
பேச்சுவார்த்தை
புஸ்வாணம்,
நம்பிக்கை
பட்டாசுகளும்
கண்கொள்ளாக்
காட்சிதான்!
இந்த
தீர்வுத்
திருவிழாக்களில்!

திருவிழாக்கள்
வரும்
போகும்;
வருடா வருடம்
மறுபடியும்
வரும்!

அரசியல்
வியாபாரிகளுக்கு
அமோக
வசூல்!

தொலைந்துவிட்ட
நிம்மதிக்
குழந்தைகள்
இன்னும்
கிடைக்கவில்லை!

திருவிழாக்கள்
வரும்
போகும்!
மறுபடியும் வரும்!

கருங்கொடியூர் கவியூரன்.

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்



அவர்: தினமும் பத்துப் பேருக்கு நான் காதல் கடிதம் கொடுக்கிறேன்.
நண்பர்: அட....அப்படியா?
அவர்: ஆமா...நான்தான் தபால்காரனாச்சே!




மகன்: பிள்ளையாருக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் தேங்காய் உடைக்கிறதா வேண்டிக்கிட்டிருக்கேன்.
தந்தை: அடப்பாவி! நடக்கிறகாரியமாடா?
மகன்: பயப்படாதீங்கப்பா! நான் பரீட்சையில் பாஸ் ஆனால்தான் உடைக்கிறதா வேண்டிக்கிட்டேன்......!

▫▫

ஆசிரியர்: பட்டம் பறக்கிறது. இது என்ன காலம்?
மாணவன்: சரியான காற்றுக் காலம்.



கமலா: தலைவலி என்று வந்த என் கணவரிடம் அப்படி என்ன சொன்னீர்கள் டாக்டர்? தினமும் இரவு நேரத்தில் சுடுகாட்டுப் பக்கம் அலையுறாரே?
டாக்டர்: தினமும் இரவில் ஆவி பிடிக்கச் சொன்னேன்!

## இந்த வாரம் உங்கள் பலன்

(23.07.95 முதல் 29.07.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள்நட்டம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச் செலவு | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக்கவலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனப்பயம் நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன்படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-உயர்ந்த நிலை, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- காரியத் தடை, கௌரவக் குறைவு.. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருளாதார கஷ்டம், கடன் சுமை. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட பிரயாணம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, குடும்பக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- உறவினர் கலகம், மனப்பயம். | காலை 7 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும் காரிய சித்தி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனச்சுமை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-வீண் குறை கேட்டல், மனப்பயம். | பகல் 11 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி-பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் சனி, அதிஷ்ட இலக்கம்-8

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கற்கடகம் | - சூரியன், புதன், வெள்ளி |
| கன்னி | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்-இடபம், மிதுனம், கற்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- துன்பநிலை மாறும், பணவிரயம். | காலை 9 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- குடும்ப சுகம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-காரிய சித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- பொருள் வரவு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்-துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி-உயர்ந்த நிலை, பெரியோர் பகை. | காலை 8 மணி |
| சனி- மனக்கவலை, பொருள் இழப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், உறவினர் உதவி. | காலை 9 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- இனசனக் கொண்டாட்டம், மனமகிழவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பணவரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் நட்பு, தேகசுக நன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 1 மணி |
| வியாழன்- காரிய சித்தி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி-புதிய நம்பிக்கை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, உறவினர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, கௌரவம். | காலை 9 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பெரியோர் பழி. | காலை 9 மணி |
| புதன்- உறவினர் பகை, முயற்சி தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- வெளியிடப் பயணம், உறவினர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெவ்வாய், அதிஷ்ட்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- காரிய சித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 9 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 9 மணி |
| சனி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- துன்பம் நீங்கும், காரிய சித்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்-பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன விரோதம், பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, தெய்வ நம்பிக்கை. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்





## தம்பி

பள்ளிக்குப் போகணும் தம்பி- நீ
பாடங்கள் படிக்கணும் தம்பி
பகுத்தறிவை வளர்க்கணும் தம்பி-நல்ல
பண்போடு திகழணும் தம்பி.

துள்ளி விளையாடு தம்பி- நண்பனை
தோளோடு சேர்த்திடு தம்பி
தூய்மையாய் இருந்திடு தம்பி- நாளும்
துடிப்பாய் விளங்கிடு தம்பி.

எள்ளி நகைக்காதே தம்பி-யாரையும்
ஏளனம் செய்யாதே தம்பி
இன்னல் விளைக்காதே தம்பி- நல்ல
இன்பம் குவியும் தம்பி.

அனுப்பியவர்:- எம். முகைதீன்.

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்
ஏமாற்றம் தொலைகின்ற காலம் வந்ததே - இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே - கெட்ட
நயவஞ்சக காரருக்கு நாசம் வந்ததே
-சுப்பிரமணிய பாரதியார்-

# தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

பாப்பா முரசு சிறு கதை

ஓர் ஊரில் வினோதன் என்ற வியாபாரி இருந்தான். இளைஞனான அவனுக்கு இருபது வயதிருக்கும். பல ஊர்களுக்குச் சென்று அவன் வியாபாரம் செய்வான். சிறுவயதிலிருந்தே அவன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததால் அவனுக்கு வியாபார நுணுக்கங்கள் எல்லாம் தெரியும். அதனால் அவனுக்கு நிறைய லாபமே வந்தது. அவனிடம் எப்போதும் பணம் இருக்கும்.

அவன் வியாபாரத்திற்காக வெளியூர் சென்று திரும்பும்வரை அவனுடைய தந்தை சின்னத்தம்பி மிகவும் கவலையோடிருப்பார். நிறையப் பணத்துடன் செல்லும் வினோதனிடமிருந்து திருடர்களும், வழிப்பறிகாரர்களும் அதனை அபகரிக்க முயன்று, அந்தப் போராட்டத்தில் அவனைக் கொன்று விட்டால் என்ன செய்வது என்பதே அவர் கவலை.

அதனால் வினோதன் ஒவ்வொரு முறையும் வியாபாரத்திற்காகப் புறப்படும் போது "தனியாகப் போகாதே; எவரையும் நம்பாதே; இரவில் வெளியில் செல்லாதே; யார் பேச்சையும் கேட்காதே, எவர் எதை உண்ணக் கொடுத்தாலும் உண்ணாதே..." என்று அறிவுரை கூறுவார்.

வினோதனும் "சரியப்பா" என்று சொல்வான்.



அறிவுரைகள் கூறுவதோடு இன்னொன்றையும் அடிக்கடி சொல்வார் சின்னத்தம்பி. "வினோதா! வியாபாரத்திற்கு நீ தனியாகச் செல்கிறாய்; வியாபாரம் முடிந்து நீ தனியாக வருகிறாய்; எப்போதும் உன்னிடம் நிறையப் பணமிருக்கும். அதனால் திருடர்கள் உன்னை வழிமறித்து அவைகளை அபகரிக்க முயற்சித்து உன் உயிருக்கு ஏதாவது ஆபத்து வரலாம். அதனால் தற்காப்புக்காக நீ ஒரு ஆயுதம் வைத்திருப்பது நல்லது. அதற்காக பெரிய கத்தி வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சிறு ஊசி கூடப் போதும்." என்று கூறுவார்.

இதைக் கேட்டு வினோதனுக்குச் சிரிப்பு வரும். 'கத்தி வைத்திருந்தாலாவது பரவாயில்லை. சிறு ஊசியை வைத்து என்ன செய்ய முடியும்?' என்று தனக்குத் தானே கூறிக்கொள்வான்.

ஒரு நாள் வினோதன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு வரும்போது நன்றாக இருட்டி விட்டது. அன்று அவனிடம் நிறையப் பணம் இருந்தது.

அவனை வெகு நேரமாகக் கண்காணித்து வந்த ஒரு திருடன், அவனைப் பின் தொடர்ந்தான். ஒரு திருப்பத்தில் அவனை மறித்து, தன்னிடமிருந்த கூரான கத்தியைக் காட்டி,

"பணத்தைக் கொடுத்து விடு. இல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று பயமுறுத்தினான். 'அப்போதுதான் தற்காப்புக்கு ஆயுதம் ஏதாவது வைத்துக்கொள்', என்று தந்தை சொன்னது நினைவுக்கு வந்தது.

"ஐயோ அப்பா! நீங்கள் சொன்னதைக் கேட்காமல் போய் விட்டேனே!" என்று வாய்விட்டு அழுதான்.

"உன் அப்பா என்ன சொன்னார்?" என்று கேட்டான் அந்தத் திருடன்.

"தற்காப்புக்காக ஒரு ஊசியாவது வைத்துக்கொள். அது உன்னைக் காப்பாற்றும் என்று அடிக்கடி கூறுவார்?" என்றான் வினோதன்.

"கூரான கத்தியை விடவா சின்னஞ்சிறு ஊசி பெரிசு?" என்று தனது சட்டையில் குத்தி வைத்திருந்த ஊசியை வினோதனிடம் கொடுத்து,

"இந்தா ஊசி, இது உன்னை எப்படிக் காப்பாற்றப்போகிறது என்று பார்ப்போம்," என்றான் திருடன்.

அதை வாங்கிய வினோதன், அப்படியும் இப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டான் திருடன்.

"உடைந்த ஊசி" என்றான் வினோதன்.

"உடைந்த ஊசியா? இருக்காதே!" என்று ஊசியைப் பார்க்கக் குனிந்தான்.

ஊசியைச் சரேலென்று திருடனின் கண்ணில் குத்தி விட்டான் வினோதன். கண்ணிலிருந்து இரத்தம் பீறிட கீழே விழுந்து திருடன், "ஐயோ...ஐயோ" என்று கத்தினான்.

அதுதான் சமயமென்று ஒரே ஓட்டமாக தன் ஊரை நோக்கி ஓடினான் வினோதன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.07.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 100
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 97

பரிசுக்குரியவர்:
சவ்ரான் ஃபாருக்,
உடதலவின்ன.

பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| பா. நிரஞ்சன்,<br>இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு. | எ.எச். ஹாரிஸ். சிலா/ நஸ்ரியா<br>மகா வித்தியாலயம், சிலாபம். |
| ஆ. கிரிஷாந்தினி,<br>த.ம.ம. வித்தியாலயம், பதுளை. | சு. யோகேஸ்வரராஜா. தம்பிலுவில்.<br>த.ம.ம.வி. தம்பிலுவில். |
| அ. முஹம்மத் அஸாம்<br>ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | ந. நவீனா இல. 65/227,<br>விஸ்ட்வைக் றோட், கொழும்பு 15. |
| எம். கஜரதன்,<br>உடப்பு. | லி. அரவிந்தன். ஸ்ரீ கோனேஸ்வர<br>இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| ந. பவிதா<br>நாமகள் வித்தியாலயம் கல்குடா | ரீ. ரதீஸ், 141/3, மருதானை றோட்,<br>மருதானை. |

## வாரம் ஒரு நாடு



### டென்மார்க்

**தலைநகா** - கோபன் ஹேகன்
**பரப்பளவு** - 43,074 சதுர கிலோ மிற்றர்
**மக்கள் தொகை** - 52,00,000
**மொழி** - டானிஷ்
**எழுத்தறிவு** - 99%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - குரோன்
**அமைவிடம்:** வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளது. சுமார் 500 தீவுகளடங்கியது. இதன் தெற்கில் ஜேர்மனியும், கிழக்கில் சுவீடனும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:** மிகப்பழமையான நாடு. இரண்டு உலகப் போர்களிலும் டென்மார்க் நடுநிலை வகித்தது. 1939 இல் ஜேர்மனியுடன் போரில்லா ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், 1940 இல் ஜேர்மன் படைகள் டென்மார்க்கில் நுழைந்தன. 1945 இல் ஜேர்மனிக்கு எதிர்ப்புக் கூடியது. இவ்வருடத்திலேயே ஜேர்மனி, டென்மார்க்கை விட்டு விலகியது. 1953 இல் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. பரம்பரை அரச வம்ச ஆட்சியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற அமைப்பும் கொண்டது. மகாராணிக்கு பாராளுமன்றத்திலும் அதிகாரம் உள்ளது.

**பொருளாதாரம்:** கப்பல் கட்டுதல், துணி ஆலைகள் இரும்பு, உருக்கு ஆலைகள், ஆகிய துறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. மொத்தப்பரப்பில் 75 சதவீதம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பால் பொருட்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நாட்டில் 67 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இங்கு அணுமின் நிலையம் ஒன்று கூட இல்லை.

## வெளவால் மீன்



பசுபிக் கடல் பகுதியில் வெளவால் மீன்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த மீனின் செதில் பகுதிகள் இறக்கை போல் விரிந்திருப்பதால் இதை வெளவால் மீன் என்கின்றனர். ஆனால் இவை வெளவால் போன்று கறுப்பு நிறமாக இல்லாமல் கவர்ந்திழுக்கும் பல வண்ணங்களைக் கொண்டிருக்கின்றன. கடும் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் பட்டை தீட்டியது போல் இதன் உடல் அமைப்பு இருக்கின்றது. இந்த அழகே மீனுக்கு எதிரியாக உள்ளது. தூரத்தில் வரும் போதே பளிச்சென்று தெரிவதால் எதிரிகள் இந்த மீனைச் சுலபத்தில் பிடித்துத் தின்று விடுகின்றன. எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, கடல் தாவரங்களில் உள்ள இலைகளின் அடிப்பகுதியில் சென்று, நீச்சலடிக்காமல், இறந்தது போன்று அப்படியே மிதந்து கொண்டிருக்கும். எதிரிகள் அப்பால் சென்றதும், அங்கிருந்து தப்பி ஓடிவிடும்.

## ! விடுகதைகளும் விடைகளும் !

1 பந்தல் கால் நாலு, பவழக்கால் நாலு, வெள்ளித் தடி இரண்டு, வெண்சாரம் ஒன்று - அது என்ன?
2. நாலு காலுண்டு, நடப்பதே இல்லை. நம்மைப்போல் கைகள் உண்டு, பிடிப்பதே இல்லை. அது என்ன?
3. வட்டமுகம் இரண்டு பக்கம், முகத்தில் கறுப்புத் திலகம், முகத்தை விரலால் தட்டத்தட்ட முனகல் சத்தம் எங்கும் கேட்கும். அது என்ன?
4. போவான், போய்க்கொண்டே இருப்பான், போகுமிடமெல்லாம் கோடிட்டே போவான்? அவன் யார்?
5. பொங்கும் அழகு தரும், பொன்போல மினுமினுக்கும், மங்கலத்தின் சின்னம் அது. மங்கையரின் தோழி அது. அது என்ன?
6. தரையில் வளராத மரம், தலைமேலே வளரும் மரம், கிளை உண்டு, இலை இல்லை. அது என்ன?
7. எவருக்கும் முகம் காட்டுவாள், ஆனால் முதுகை மட்டும் காட்டமாட்டாள். அவள் யார்?
8 அக்காள் சப்பாணி, தங்கை நாட்டியக்காரி இந்த இருவரும் இல்லாவிட்டால் எந்தக் குடும்பமும் நடக்காது - அவர்கள் யார்?
9. அடங்கிக் கிடப்பான், திடீரென்று அலறி அலறி குரல் கொடுப்பான். எடுத்துக் காதில் வைத்தால் ஏதோ சொல்லிக் கதை அளப்பான்! அவன் யார்?

### விடைகள்

1. [illegible] 5. மஞ்சள்
2. [illegible] 6. [illegible]
3. மத்தளம் 7. கண்ணாடி
4. [illegible] 8. உரல், உலக்கை
9. தொலைபேசி


தொகுப்பு:- செல்வி ஏ. அகல்யா

# மரணத்தை வென்றவள்

## நான்! நான்!! நான்!!!



இப்போது பூலான் தேவி



7000 கிராமவாசிகள் முன்னிலையில் பூலான் சரணடைந்தபோது-

கொள்ளைக்காரியாக மாறியது நிர்ப்பந்தம். மனசு மட்டும் எப்போதும் வெள்ளைதான். யார் அது? பூலான்தேவிதான்.

இந்தியாவைத் தாண்டியும் பெரும் பிரபலமான பெயர் பூலான்தேவி. அவரது புகழைப்பார்த்துவிட்டு 'சொந்தக் கதையைச் சொல்லுங்கள் படமாக்குகிறோம் என்று கேட்டார்கள். 'சரி' என்றார் பூலான்தேவி.

படத்தைப் பார்த்தவருக்கு அதிர்ச்சி. நிர்வாணக் காட்சிகள் அதிகம். தனது கொள்ளைக் கூட்ட காதலனின் மேலே இருந்து பூலான்தேவி உறவு கொள்வது போலவும் ஒரு காட்சி வருகிறது. "அப்படி நடந்ததே இல்லை" என்று மறுத்ததோடு கோட்டுக்கும் போனார் பூலான்தேவி.

இதற்கிடையே-சிறையில் இருந்து வந்த பின்னர் 'உமத்சிங்' என்பவரைக் கல்யாணம் செய்தார் பூலான்.

பூலான்தேவியின் பிரபலத்தை வைத்து பணம் சம்பாதிக்க நினைத்தார் உமத்சிங். அதனால் அவரது உறவை வெட்டி விட்டார் பூலான்.

பூலான்தேவி இப்போது எப்படி இருக்கிறார்?

அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி பெண்களின் முன்னேற்றத்திற்காகப் போராடி வருகிறார். ஒரு காலத்தில் துப்பாக்கிதான் நியாயம் கிடைக்க ஒரே வழி என்று நம்பியவர் இன்று அமைதிவழிக்கு திரும்பிவிட்டாலும், மனதுக்குள் இன்னமும் பழைய பூலான்தேவியில் பாதி இருக்கவே செய்கிறது.

இந்தப் பேட்டியைப் படித்துவிட்டு நீங்களே சொல்லுங்கள், பூலான் மாறிவிட்டாரா?

**கேள்வி: நிஜமான மகிழ்ச்சி என்றால் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்: *என் வாழ்க்கையில் நான் மகிழ்ச்சியாக இருந்ததே இல்லை. அதனால் அது பற்றி நான் என்ன சொல்ல முடியும்!*

**கேள்வி: எதைக் கண்டால் உங்களுக்கு பயம்?**

பதில்: *நான் பயத்தை அறிந்தது இல்லை. அதை எதிர்க்கப்பழகியவள். எதிர்த்துப் போராடப் பழகியவள்.*

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் யார்?**

பதில்: *உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் முலாயம்சிங் யாதவ். அவர் இல்லாவிட்டால் இன்னும் பல சித்திரவதைகளுக்கு ஆளாகியிருப்பேன். சிறையிலிருந்து வெளியே வந்திருப்பேனா என்று கூட தெரியாது.*

**கேள்வி: மற்றவர்களிடம் உங்களுக்கு பிடிக்காதது?**

பதில்: *பொய்! இரட்டை வேடம். ஏமாற்று வேலை.*

**கேள்வி: உங்களுக்குள் நீங்கள் விரும்பாதது?**

பதில்: *ஏழ்மையான-தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்ததை வெறுக்கிறேன். அப்படி பிறந்ததால்தான் பலவித அநியாயங்களுக்கு நான் உள்ளாக்கப்பட்டேன். அடுத்தது என் முகம். நான் அழகானவள் இல்லை.*

**கேள்வி: உங்களுடைய சொத்து?**

பதில்: *என் வாழ்க்கை*

**கேள்வி: உங்களை எது கவலையடையச் செய்கிறது?**

பதில்: *மற்றவர்கள் தங்கள் சுயநலத்திற்காக என்னை ஏமாற்றும் போது.*

**கேள்வி: உங்களுக்குப் பிடித்த வார்த்தை?**

பதில்: *அம்மா.*

**கேள்வி: எங்கே செல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: *எங்கே தனிமையில் நிம்மதி கிடைக்குமோ அங்கே.*

**கேள்வி: யாரையாவது காதலிக்கிறீர்களா?**

பதில்: *என்னை நானே காதலிக்கிறேன்.*

**கேள்வி: நீங்கள் எப்போதாவது பொய் சொல்வீர்களா?**

பதில்: *மற்றவர்கள் தான் என்னை பொய்சொல்ல வைக்கிறார்கள். சேகர்கபூர் எடுத்த படத்தை எதிர்க்கும் படி உமத்சீங் தான் என்னைப் பொய் சொல்ல வைத்தார். பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்து என்னை அப்படி சொல்லச் சொன்னார்.*

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் எந்தச் சம்பவத்துக்காக நீங்கள் அதிகம் வருத்தப்படுகிறீர்கள்?**

பதில்: *உமத்சிங்கை திருமணம் செய்தமைக்காக வருந்துகிறேன்.*

**கேள்வி: அழுத அனுபவம்........?**

பதில்: *என் கடந்த காலத்தை நினைத்தால் அழுகை வரும்.*

**கேள்வி: மரணம் பற்றி?**

பதில்: *அது எந்த ரூபத்தில் வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.*



'83இல் பூலான்-கிராமத்தில் ஹீரோயின்

# தப்புக் கணக்கு

பேரறிஞர் சி.என். அண்ணாதுரை சொன்ன குட்டிக்கதை

அண்ணன் தம்பி இருவர் - அண்ணன் ஊர்ப்பெரிய தனக்காரன். - எங்கும் கலியாணம் கார்த்திகை என்றாலும், பஞ்சாயத்து பாகப்பிரிவினை என்றாலும் அண்ணன்தான் செல்வான். அமளி அடங்கும். ஊர் சீர்படும்.

தம்பி ஏருண்டு தானுண்டு என்று இருப்பவன்.

அண்ணன் தனக்கேற்றது செய்கிறான், நாம் நமக்கு ஏற்றது செய்கிறோம் என்றுதான் 'தலையணை மந்திரம்' ஏறுகிறவரையில் எண்ணிக் கொண்டிருந்தான். அது தலைக்கேறியதும் 'ஏன்! நீமட்டும்தான் ஊர்ப் பெரியதனம் பார்க்க வேண்டுமா? நான் என்ன நம்ம குடும்பத்து உழவு மாடா?, என்று அண்ணனிடம் வம்புக்கு நின்றான்.

அண்ணன் சூட்சுமம் தெரிந்து கொண்டான்- "தம்பி! நீயே இனி, ஊர்ப் பெரிய தனக்காரர் வேலையைப் பார். நான் காடு கழனியைக் கவனித்துக் கொள்கிறேன். எதற்கும் இரண்டோர் நாள் என்னோடு வா. ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நான் எப்படிக் கவனித்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்வாய்" என்று கூறி அழைத்துச் சென்றான்.



அன்று ஒரு சாவு-மகன் கோவெனக் கதறி அழுகிறான், தாய் இறந்ததற்காக.

ஊர்ப் பெரிய தனக்காரரான அண்ணன் அவனைத் தேற்றி,

"என்னப்பா செய்யலாம்! எவ்வளவு அருமையான குணம். அம்மாவுக்கு எங்களிடமெல்லாம் அன்பு தெரியுமா? அதிகம் சொல்வானேன், அவர்கள் உனக்கு மட்டும் தாயல்ல, எனக்கும் தாயாராகத்தான் இருந்தார்கள்" என்றான்.

தம்பி கேட்டுக் கொண்டான்-பூ! பூ! இவ்வளவுதானா, பெரிய தனக்காரன் வேலை- என்று எண்ணினான். மறு நாளே பட்டத்துக்கு வந்து விட்டான்.

எட்டாம் நாள் வேறோரிடத்தில் ஒரு இழவு.

மனைவியைப் பறிகொடுத்த கணவன் மண்ணில் புரண்டு அழுகிறான்.

"ஐயயோ! அவள் போனபிறகு நான் எப்படி வாழ்வேன்- எனக்கேன் சாவுவரக்கூடாது? என் ஆசைக் கனியே! அமுத நிலவே!" என்றெல்லாம் கூறிக் கதறுகிறான்.

பெரியதனக்காரனாகிவிட்ட தம்பி அருகே சென்றான்; அவனை அணைத்துப் பிடித்தபடி,


"அழாதே அப்பா! அழாதே! என்ன செய்யலாம்! எவ்வளவு நல்லவர்கள்,எவ்வளவு அன்பு!அதிகம் சொல்வானேன்-அவர்கள் உனக்கு மட்டுமா மனைவியாக இருந்தார்கள்? எனக்கும்தான்" என்றான்.

சாவு வீடு படுகளமாகிவிட்டது.

"அண்ணா அண்ணா! எனக்கு வேண்டவே வேண்டாம் இந்தப் பெரிய தனக்கார வேலை!" என்று சொல்லிவிட்டான் தம்பி.

# புது மாப்பிள்ளைக்கு வந்த யோகமடா..

"திருமணம் செய்து கொள்வதால் ஒருவனுடைய கவனம் திசை திரும்பிவிடுகிறது என்றவாதத்தை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்."



சர்ச்சின் டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் உலகில் புகுந்து ஆறு வருடங்களாவதற்குள்ளாக- "துடுப்பாட்டத்தில் உலகின் முன்னிலையினை எட்டிப் பிடிக்கப் போகிறார் இவர்" என்று பல விமர்சகர்களும் ஏகமனதாகப் பாராட்டும் நிலையினைப் பெற்று விட்டார் சச்சின் டெண்டுல்கர். 'ஸ்போட்ஸ் வேர்ல்ட்' சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியின் சில பகுதிகள் :

**கே: கடந்த இரு வருடங்களில் உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?**

டெண்: எதிப்பார்ப்புக்கள் எப்போதும் வானளாவ உயரமாகத்தான் இருக்கும்! எனினும் என்னைப் பொறுத்தமட்டில் மகிழ்ச்சியான வாழ்க்கையினைப் பெற்றிருக்கிறேன். எனது தோளில் பல கடமைகள் ஏறியுள்ளன. அவற்றையும் தாங்கி தீர்த்து வைப்பதில் வெற்றிகாண வேண்டும்.

"பணம் வாழ்க்கைக்கு பிரதானம் தான். பாதுகாப்பினை அது வழங்குகிறது."

**கே: சர்ச்சின் டெண்டுல்கர் என்றிருப்பதில் எத்தகைய அனுகூலங்களைப் பெற்றிருக்கிறீர்கள்?**

டெண்: எல்லாரிடமும் அடக்கத்துடன் வாழவிரும்புகிறேன். சகலருக்கும் மரியாதை செலுத்துவதுடன் முதியவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கக்கருதுகிறேன். எனக்குக் கிடைத்துவரும் புகழுக்காக மக்களிடமிருந்து பிரத்தியேகமான எதையும் நான் எதிர்பார்க்கவில்லை.

**கே: இருப்பினும் ஆசைகளும் இருக்கலாம் அல்லவா....? டியகோ, மர்டோனா போன்றோர் அதற்காகவே பெருமுயற்சிகளில் ஈடுபடுகின்றனரே!**

டெண்: அதற்காக சமுதாயக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். எடுத்துக்காட்டாக போக்குவரத்து விதிகளை மீறினால் யாராவது ஒருவர் தெருநடுவே உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். டெண்டுல்கர் என்ற நிலையில் நான் இதனை அனுமதிக்க மாட்டேன். இந்தப் பெயருக்கு களங்கம் ஏற்படாமல் எச்சரிக்கையாக இருப்பேன்.

**கே: நீங்கள் திருமணம் செய்துள்ளதைப் பலர் அதிசயத்துடன் பார்க்கின்றனர். இதனால் கிரிக்கெட்டில் உள்ள உங்கள் கவனம் திசை மாற்றப்படக்கூடும் என்பதனால் சற்றுத் தாமதித்து மணம் முடித்திருக்கலாமே என்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர்......?**

டெண்: இந்த வாதத்தை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அவசியமானதொன்று திருமணம். திருமணம் எனது வாழ்விலும் சாதாரணமான ஒரு பகுதியே! கவாஸ்கார், வெங்கஸ்கர், சிறிகாந்த், கபில் தேவ் ஆகிய எல்லோரும் திருமணமானவர்களே! அவர்களுடைய திருமணம் எந்தவகையிலும் கிரிக்கெட் விளையாட்டுக்கு குந்தகமாக இருந்ததில்லை.

கிரிக்கெட் விளையாட்டிலுள்ள என்னுடைய ஆர்வத்தை எனது திருமணம் எவ்வகையிலும் திசைதிருப்பப் போவதில்லை என்றே நம்புகிறேன்.

**கே: திருமதி அஞ்சலி டெண்டுல்கர் கிரிக்கெட்மீது ஆர்வமுடையவரா?**

டெண்: முன்னர் ஈடுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது சற்று ஆர்வம் காட்டத்தலைப்பட்டுள்ளார்.

**கே: உங்களிடம் ஒரு பெரிய சிகரெட் தயாரிப்பு நிறுவனமோ அல்லது பியர் குடிவகை தயாரிப்பாளரோ விளம்பரத்துக்கு ஒத்தாசை தருமாறு கேட்டால் ஏற்றுக் கொள்வீர்களோ?**



அஞ்சலி மேத்தா

டெண்: நான் ஒரு விளையாட்டு வீரன். இத்தகைய பொருட்களின் விளம்பரங்களை நான் ஏற்க மாட்டேன். எனக்கென்றொரு 'இமேஜ்' இருக்கிறது. அதனை நான் பாதுகாக்கக் கடமைப்பட்டவன். வருங்கால சந்ததிக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது அவசியமல்லவா?

**கே: உங்கள் இமேஜை பாதுகாக்க வேண்டும் என்கிறீர்கள். உங்களை ஒரு சஞ்சிகை கடுமையாக விமர்சிக்க நேர்ந்தால் அதனை எவ்வாறு ஏற்பீர்கள்?**

டெண்: நான் போதுமான ஓட்டங்கள் எடுக்கவில்லை என்பதற்காக அவசரப்பட்டு வீண் பழி சுமத்தும் வகையில் விமர்சிக்கப் பட்டால் நான் ஓரளவு ஆத்திரமடைய நேரிடலாம். ஏனையோரைப்போல எனக்குள் சிந்திக்க அவகாசம் தேவைப்படும். எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பேன் என்று எதிர்பார்க்கக்கூடாது.

" மன்னிப்பே கிடையாது, நாங்கள் மிக மோசமாக விளையாடினோம்."

**கே: பணத்தின் முக்கியம் பற்றி என்ன கருதுகிறீர்கள்? இன்றுள்ள கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் பலர் பணப் பைத்தியங்களாகிவருவதாக அறியப் படுகிறதே?**

டெண்: பணம் வாழ்க்கைக்கு பிரதானம் தான்! ஓரளவு பாதுகாப்பினை அது வழங்குவதால், குடும்பத்தை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்ற கவலையினைத் தவிர்த்து விளையாட்டில் கவனம் செலுத்த முடிகிறது. எடுத்துக் கொண்ட பணியில் ஊக்கத்தை அதிகப்படுத்த பணம் உதவுகிறது. பணத்தை சம்பாதிக்க வேண்டுமே என்ற கவலையை விடுத்து கிரிக்கெட்டில் கூடுமான கவனத்தை செலுத்தும் போது பணம் தானாகவே வந்து சேர்கிறது.

**கே: சார்ஜா விளையாட்டின் போது பாகிஸ்தானிடம் தோற்றது பற்றியும் சண்டிகரில் மேற்கிந்திய அணியிடம் தோற்றது பற்றியும் தங்களுடைய ஆய்வு எவ்வாறு இருந்தது?**

டெண்:அதில் ஆய்வு எதுவும் தேவையில்லை! மன்னிப்பே கிடையாது நாங்கள் மோசமாக விளையாடினோம்; வேறு எதுவும் கூறுவதற்கில்லை!

**கே: கிரிக்கெட்டில் ஏதாவது சாதனை நிலைநாட்டும் ஆவலுண்டா?**

டெண்: நான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெற வேண்டும் என்பதே என் அவா! உடன் விளையாடுவோரினதும் எதிரணியினரதும் மதிப்பைப் பெறவேண்டும் என்று விரும்புகிறேன்.

**கே: மிகவும் முக்கியஸ்தரான ஷேன் வோர்ன் உங்களை உலகின் முதல்தர துடுப்பாட்டக்காரர் என்று வர்ணித்துள்ளார். பலர் இதனை ஆமோதிக்கின்றனர். "டெண்டுல்காரா அல்லது லாறாவா சிறந்தவர் -யார் முடிசூடப் போகின்றனர்" என்று எதிர் பார்க்கின்றனர். 'உலகில் தலைசிறந்த துடுப்பாட்டக்காரன்' என்ற மகுடம் உங்கள் சிரசை அலங்கரிப்பதானால் உங்கள் மனோநிலை எவ்வாறிருக்கும் என்பதனைக் கூற முடியுமா?**

டெண்: ஷேன் வோர்ன் போன்றவர்கள் கூறுவது உண்மையில் எனக்கும் பெருமையாகவே இருக்கிறது. இருப்பினும் இது நிலைப்பதில்லையே! இந்த ஆண்டு பிரைன் லாராவுக்கென்றால் அடுத்த வருடம் அதே மகுடம் எனக்கு வரலாம், ஆனால் இது நிலைக்காமல் மாறிக் கொண்டு போகக் கூடியதல்லவா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

### 34

ஒரு நாள் தாய் தனது தைரியத்தையெல்லாம் சேகரித்துக் கொண்டு, இகோரின் பேச்சுக்களால் தன் மனத்தில் தோன்றியுள்ள கற்பனைச் சித்திரத்தை அவனிடம் விளக்கிக் கூற முனைந்தாள்.

"நான் சொல்வது சரிதானே, இகோர்?" என்று அசட்டுச் சிரிப்போடு கேட்டாள் அவள்.

அவன் கடகடவென்று சிரிக்கத் தொடங்கினான்; சிரிக்கும் போது அவனது கண்மணிகள் உருண்டு புரண்டன. மூச்சு வாங்கும் போது அவன் நெஞ்சைத் தடவிக் கொடுத்துக் கொண்டான்.

"அப்படித்தான், அம்மா, அப்படித்தான்! சரித்திரத்தின் உயிர் நாடியையே நீங்கள் தொட்டுவிட்டீர்கள். நீங்கள் சொன்ன சரித்திரம் இருக்கிறதே, அதில் கொஞ்சம் ஒட்டு வெட்டு வேலை செய்து மிகைப்படுத்தி அலங்காரம் பண்ணி விட்டீர்கள். என்றாலும் நீங்கள் சொன்னவற்றிலெல்லாம் உண்மை இருக்கத்தான் செய்கிறது. இந்தத் தொந்தி விழுந்த குள்ள மனிதர்கள் இருக்கிறார்களே, இவர்கள் தான் மகா பாதகர்கள், மக்களை உறிஞ்சி உறிஞ்சி உயிர் வாழும் விஷப் பாம்புகள். பிரேஞ்சுக்காரர்கள் இவர்களை **பூர்ஷ்வா** என்று சொல்வது ரொம்பச் சரி; ரொம்பப் பொருத்தம். பூர்ஷ்வா என்றால் -ஒன்றும் அறியாத பாமர மக்களை அடித்துச் சுரண்டி, அவர்களது இரத்தத்தையே உறிஞ்சிக் குடிப்பவர்கள் என்று பொருள்."

"நீங்கள் பணக்காரர்களைத் தானே சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் தாய்.

"அவர்களையேதான். அதுதான் அவர்களது துரதிருஷ்டம்! ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் உணவில் தாமிரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து ஊட்டி வந்தால், அந்தத் தாமிரம் அந்தப் பிள்ளையின் எலும்புகளின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. அந்தப் பிள்ளை குள்ளப் பிறவியாகவே போய்விடுகிறது. ஆனால், ஒருவனை தங்கம் என்ற விஷத்தை ஊட்டி வளர்த்தாலோ? அப்போது அவன் இதயமே குன்றிக் குறுகி உணர்ச்சியற்றுச் செத்துப் போய்விடும்; பிள்ளைகள் ஐந்து காசுக்கு வாங்கி விளையாடுகிறார்களே ரப்பர் பந்து, அந்த மாதிரிப் போய்விடும்!"

ஒரு நாள் இகோரைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது பாவெல் சொன்னான்:

"அந்திரேய்! உண்மை என்ன தெரியுமா? எந்த மனிதன் சிரித்துச் சிரித்து விளையாட்டாய்ப் பேசுகிறானோ, அவனது இதயத்தில் தான் வேதனை இருந்து கொண்டே இருக்கிறது. இதுதான் வழக்கம்."

ஹஹோல் பதில் சொல்வதற்கு ஒரு கணம் தயங்கினான்; கண்களைச் சுருக்கி விழித்தான்.

"நீ சொல்கிறபடி பார்த்தால், ருஷ்ய தேசம் முழுவதுமே சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துச் சாகத்தான் வேண்டும்!"

நதாஷா வந்து சேர்ந்தாள். அவளும் சிறையிலிருந்து தான் வந்தாள். ஆனால் வேறு ஒரு நகரிலுள்ள சிறையில் இருந்தாள். சிறை வாசம் அவளை எந்த விதத்திலும் மாற்றி விட்டதாகத் தெரியவில்லை. அவளது முன்னிலையில் ஹஹோல் வழக்கத்துக்கு மீறிய உற்சாகத்துடன் நடந்து கொள்வதாகத் தாய்க்குத் தோன்றியது. அவன் ஒவ்வொருவரையும் கேலியும் கிண்டலுமாகப் பேசினான்; அவளை வாய்விட்டு கலகலவென்று சிரிக்க வைத்தான். ஆனால் அவள் சென்ற பிறகு, அவன் தனது வழக்கமான சோக கீதத்தை சீட்டியடித்துக் கொண்டு, கால்களை இழுத்து இழுத்துப்போட்டு அறைக்குள் குறுக்கும் மறுக்கும் நடக்கத் தொடங்கினான்.

சாஷாவும் அடிக்கடி வந்து கொண்டிருந்தாள். அவள் வரும்போதெல்லாம் புருவங்களைச் சுழித்தபடி ஒரே பரபரப்போடுதான் வருவாள். என்ன காரணத்தாலோ அவளது முகபாவம் எப்போது பார்த்தாலும் ஒரே வக்கிரமும் முறைப்பும் கொண்டதாகவே இருந்தது.

ஒருமுறை அவளை வழியனுப்பிவிட்டு வருவதற்காக பாவெல் வாசல் நடைவரைக்கும் போனான்; போகும் போது



அவன் கதவைச் சாத்தாமல் விட்டு விட்டுப் போனதால் அவர்கள் வெளியே பேசிக் கொண்ட பேச்சுத் தாயின் காதிலும் விழுந்தது.

"நீங்கள் தான் கொடியைச் சுமந்துகொண்டு போகப் போகிறீர்களா?" என்று கேட்டாள் சாஷா.

"ஆமாம்."

"முடிவாகி விட்டதா?"

"ஆம், அது என் உரிமை."

"மீண்டும் சிறைக்குப் போகவா?"

பாவெல் பதில் பேசவில்லை.

"நீங்கள் போகாமலிருக்க முடியாதா....." என்று ஆரம்பித்தாள் அவள்; ஆனால் வார்த்தை தடைப்பட்டது.

"என்னது?"

"இல்லை, அந்தப் பொறுப்பை வேறு யாருக்காவது விட்டுவிடுங்களேன்."

"இல்லை" என்று உறுதியாகச் சொன்னான் அவன்.

"நன்றாக யோசியுங்கள். உங்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது. எல்லோரும் உங்களை விரும்புகிறார்கள். நஹோத்கா நீங்களும் மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். நீங்கள் வெளியில் இருந்தால், எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆனால், கொடியைத் தாங்கி நீங்களே சென்றால், அவர்கள் நிச்சயம் உங்களைக் கைது செய்வார்கள்; வெகு தூரத்துக்கு, வெகு காலத்துக்கு நாடு கடத்தி விடுவார்களே!"

அந்தப் பெண்ணின் குரலிலிருந்த பயபீதியையும் தாபத்தையும் தாயால் உணர முடிந்தது. சாஷாவின் வார்த்தைகள் அவளது இதயத்தில் பனித் துளிகளைப்போல் குளிர்ந்து விழுந்தன.

"இல்லை. நான் யோசித்தாகிவிட்டது. எதவும் என் உறுதியை மாற்றிவிட முடியாது" என்றான் பாவெல்.

"நான் கெஞ்சிக் கேட்டால் கூடவா?"

பாவெலின் குரல் திடீரென்று உத்வேகமும் கரகரப்பும் பெற்றது.

"நீங்கள் இதுமாதிரிப் பேசக்கூடாது. ஊஹூம். இப்படிச் பேசக் கூடாது நீங்கள்!"

"நானும் மனிதப் பிறவிதானே!" என்று மெதுவாகக் கூறினாள் அவள்.

"ஆமாம். அதிசயமான மனிதப் பிறவி!" என்று அவளைப் பார்த்து அவளைப் போலவே மெதுவாய்ச் சொன்னான் அவன்; எனினும் அவனுக்கு தொண்டை அடைபடுவது போலிருந்தது. "நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர். அதனால் தான் - அதனால்தான்- இந்தமாதிரி நீங்கள் பேசக்கூடாது!"

"சரி, வருகிறேன்" என்றாள் அவள்.

அவளது காலடியோசையின் போக்கிலிருந்து அவள் அவசர அவசரமாய் ஓடுகிறாள் என்பதைத் தாய் உணர்ந்து கொண்டாள். பாவெல் அவளைத் தொடர்ந்து வெளி முற்றத்துக்குச் சென்றான்.

தாயின் இதயம் பயத்தால் குன்றிக் குறுகி வேதனைப்பட்டது. அவர்கள் எதைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை; என்றாலும் தன்னைப் பொறுத்த வரையில் தனக்கு ஒரு பேராபத்து விளையப்போகிறது என்பதை மட்டும் அவள் மனதுக்குள் உணர்ந்தாள்.

"அவன் என்னதான் செய்ய விரும்புகிறான்?"

பாவெல் அந்திரேயோடு வந்து சேர்ந்தான்.

"ஐயோ, இஸாய், இஸாய்! அவனை என்னதான் செய்கிறது?" என்று தலையை அசைத்துக்கொண்டே சொன்னான் ஹஹோல்.

"இந்த மாதிரிக் காரியத்தைக் கைவிட்டு விட வேண்டும் என்று நாம் அவனை ஒருமுறை எச்சரிக்கத்தான் வேண்டும்" என்று முகத்தைச் சுழித்துவாறு சொன்னான் பாவெல்.

"பாவெல், நீ என்ன திட்டம் போடுகிறாய்?" என்று தலையைத் தாழ்த்திக்கொண்டு கேட்டாள் தாய்.

"எப்போது? இப்போதா?"

"மே முதல்....முதல் தேதிக்கு!"

"அதுவா?" என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு சொல்லத் தொடங்கினான் பாவெல். "நான் கொடியைத் தாங்கிக் கொண்டு, அணி வகுப்புக்குத் தலைமை தாங்கிச் செல்லப்போகிறேன். இந்தக் காரணத்துக்காக, அவர்கள் மீண்டும் என்னை ஒரு வேளை சிறையில் தள்ளுவார்கள்."

தாயின் கண்களில் குத்தல் எடுத்தது; வாய் உலர்ந்து வறண்டது. பாவெல் அவள் கரத்தைப் பிடித்தெடுத்துத் தடவிக் கொடுத்தான்.

"அம்மா! இதை நான் செய்யத்தான் வேண்டும். என்னை உனக்குப் புரியவில்லையா, அம்மா!"

"நான் எதுவுமே சொல்லவில்லை, அப்பா!" என்று தலையை லேசாக நிமிர்த்தியவாறு சொன்னாள் அவள். ஆனால் அவனது கண்களிலுள்ள உறுதி நிறைந்த ஒளியை அவளது கண்கள் சந்தித்தன, அவள் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவன் பெருமூச்செறிந்தான்; அவள் கரத்தை நழுவவிட்டான்.

"நீ இதைக்கண்டு வருத்தப்படக்கூடாது, அம்மா. சந்தோஷப்படவேண்டும்" என்று அவன் கண்டிக்கும் பாவனையில் பேச ஆரம்பித்தான். "மரணத்தை நாடிச் செல்லும் தங்கள் மைந்தர்களை, புன்னகையோடு வழியனுப்பி வைக்கும் தாய்மார்கள் என்றைக்குத் தோன்றப் போகிறார்கள், அம்மா!"

"அடடே! உபதேசிகர் வந்துவிட்டாரடா!...." என்று முனகினான் ஹஹோல்.

"நான்தான் எதுவுமே சொல்லவில்லையே" என்று திரும்பச் சொன்னாள் தாய். "நான் உன் வழியில் குறுக்கே நிற்கவில்லை; ஆனால் எனக்குச் சங்கடமாயிருக்கும்போது, நான் ஒரு தாய்போல நடந்து கொள்வதைத் தடுக்க முடியாது...."

அவன் அவளை விட்டு விலகிச் சென்றான்; அவனது வார்த்தைகளின் குத்தலை உணர்ந்தாள் அவள்.

"ஒரு மனிதன் தன் இஷ்டப்படி வாழ்வதற்குக்கூட, குறுக்கே நிற்கிறது ஒருவகைப் பாசம்!"

"இல்லை, பாஷா. அப்படிச் சொல்லாதே" என்று அவள் நடுங்கிக் கொண்டு சொன்னாள். அவன் மேற்கொண்டும் ஏதாவது கூறி, தன் இதயத்தைப் புண்படுத்திவிடக் கூடும் என அவள் பயந்தாள்; "எனக்குப் புரிகிறது. நீ வேறு ஒன்றுமே செய்யமுடியாது. உன் தோழர்களுக்காக, நீ இப்படிச் செய்யத்தான் வேண்டும்...."

"இல்லை. எனக்காகவேதான்!" என்றான் அவன். அந்திரேய் வாசல் நடைக்கு வந்தான். வாசல் நடை அவன் உயரத்துக்குச் சிறிதாக இருந்ததால், அவன் தன் கால்களை ஓரளவுக்குச் சரித்து நின்று கொண்டான்; கதவு நிலையிலே தோளைச் சாய்த்து, மற்றொரு தோளையும் தலையையும் முன்புறமாக நீட்டிக்கொண்டு நின்றான்.

"மகாப்பிரபு! இந்த எண்ணத்தைக் கைவிடுவதால் ஒன்றும் குடிமுழுகப் போவதில்லை" என்று தனது அகன்ற கண்களை பாவெலின் மீது பதித்துப் பார்த்துக்கொண்டே சொன்னான் அவன். ஏதோ ஒரு கல்லிடுக்கிலிருந்து எட்டிப் பார்க்கும் பல்லியைப் போலிருந்தது அவன் நின்ற நிலை.

தாயோ அழுது கொட்டத் தயாராக நின்றாள்.

"அட கடவுளே, மறந்து விட்டேனே" என்று சொல்லிக் கொண்டே அவள் வாசல் நடையைக் கடந்து வெளியே வந்தாள். தான் அழுவதைத் தன் மகன் பார்த்துவிடக் கூடாது என்றுதான் அவள் அப்படிச் செய்தாள். வெளியே வந்ததும் அவள் ஒரு மூலையில் தலையைச் சாய்த்துக் கொண்டு வெளிக்குத் தெரியாமல் பொருமிப் பொருமி அழுதாள். அவளது இதயத்தின் செங்குருதியே அவளது கண்ணீரோடு கலந்து கொட்டிப் பெருகுவதுபோல் அவள் உணர்ந்தாள்.

மூடியும் மூடாமலும் கிடந்த கதவின் வழியாக அவர்கள் இருவரும் தணிந்த குரலில் விவாதித்துக் கொண்டிருப்பது அவள் காதில் விழுந்தது.

"இது என்னப்பா வேலை? அவளைத் துன்புறுத்துவதில் உனக்கொரு ஆனந்தமா?" என்று கேட்டான் ஹஹோல்.

"இது போல் பேச உனக்கு உரிமை கிடையாது" என்று கத்தினான் பாவெல்.

"சரிதான். நீ உன்னை ஒரு முட்டாளாக்கிக் கொண்டுடிருப்பதை நான் மூச்சுக்காட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தால், நான் அருமையான நண்பன் தானப்பா. நீ ஏன் அப்படிச் சொன்னாய்? உனக்கு எதுவுமே புரியாதோ?"

"அதெல்லாமில்லை, எதுவானாலும் சரி. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று கறாராய்ச் சொல்லிவிட வேண்டும்; பயப்படக்கூடாது"

"அவளுக்குக் கூடவா?"

"எல்லோருக்கும் தான்! பாசமாகட்டும், நேசமாகட்டும். அது என் காலைக்கட்டி என்னை முன்னேறவிடாமல் தடுக்குமானால், அவற்றை நான் விரும்பவே இல்லை..."

"அடாடா! வீராதி வீரன்! போய் மூக்கைத் துடைத்துக் கொள். இதையெல்லாம் சாஷாவிடம் போய்ச் சொல் அவள் தான்...."

"அவளிடம் ஏற்கெனவே சொல்லியாயிற்று!"

"சொல்லிவிட்டாயா? பொய் சொல்கிறாய். நீ அவளிடம் மிருதுவாகப் பேசினாய். அன்போடு பேசினாய். நான் கேட்காவிட்டாலும் எனக்கு அது தெரியும். ஆனால் நீ உன் சூரத்தனத்தையெல்லாம் உன் தாயிடம் வந்து காட்டுகிறாய்! ஆனால், உன் சண்டப்பிரசண்டமெல்லாம் சல்லிக் காசுக்கு பிரயோஜனமில்லை."

பெலகெயா தன் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஹஹோல் ஏதாவது கடுமையாகப் பேசிவிடப் போகிறானோ என்ற பயத்தில் அவள் அவசர அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு சமையலறைக்குள் வந்தாள்.

(தொடர்ந்து வரும்)

# மதில் மேல்

## கனகசபை தேவகடாட்சம்

"என்னங்க! நீங்க இன்னைக்கு செய்தது சரியா? என்னதான் இருந்தாலும் இப்படி ஏசி இருக்கக்கூடாது. சிவலிங்க அண்ணா எவ்வளவு பொறுமையாக இருந்தார்.

பொதுவாகத்தானே மதில் கட்டிறம். அரை அடிதானே அகட்டிக் குடுக்க வேண்டி இருக்கு! பக்கத்து அயல் ஆபத்துக்குத் தேவை!"

ராஜனின் மார்பில் படர்ந்தபடி அவன் பிடரி மயிரை கோதிக் கொண்டு பவ்வியமாக கூறினாள் பத்மா.

"இந்தக் கதை ஒண்டும் நீ கதைக்காதே!

அரை அடி என்ன....ஒரு இஞ்சியும் தள்ள மாட்டன்.

கொலைதான் விழும்..ஓ...

என்ற குடும்ப மானமே இதிலதான் இருக்கு! பொறு! இன்னும் ரெண்டு கிழமைக்குள்ள பொது மதில கட்டிக் காட்டிறன்." ஆத்திரத்துடன் முழங்கினான் ராஜன்.

பத்மா என்ன.....அந்த இரவே அத்துடன் மௌனித்தது. ஆனால் பத்மாவின் சிந்தனை மட்டும் யாத்திரை செய்தது.

தனது இரு பிள்ளைகளையும் ஒரு



கணம் எண்ணிக்கொண்டாள். ஆண்களுக்கு எங்கே புரியப் போகிறது.

அயலுடன் பகைப்பது எத்தனை பாதிப்பை உண்டுபண்ணும். அரைஅடியில் தன் கணவனின் 'கௌரவத்தை நினைத்தாள். ஆறடி நிலம் கூட....அதுவும் 'டயராக' இருந்தால் சாம்பலும் இல்லை.

உருண்டது ஒரு மாதம்!

மீண்டும்....கடந்த காலங்கள்! விடியும் பொழுது.....பீதி, பயத்துடன்!

வெடிகள்! 'செல்' தாக்குதல்கள்! அவலங்கள்! ஓலங்கள்! மரணங்கள்! மறுபடியும் ஆரம்பம்.

அன்று வெள்ளிக் கிழமை. விடிந்தும் விடியாத காலை!

காதைத் துளைத்தது வெடிச் சத்தங்கள்.

ராஜனின் வீட்டு முன் வீதியால், ஜனங்கள் அல்லோலகல்லோலப் பட்டு, புளுதியைக் கிளப்பிய வண்ணம் ஓடிக் கொண்டு இருந்தார்கள். ராஜனும் பத்மாவும் மெதுவாக படலையைத் திறந்து வீதியை நோக்கினார்கள். இறுதியாக 'சில்லரைப் பாய்ச்சலில்' வந்த முதியவரிடம் சம்பவத்தை வினவினார்கள்.

"ஐயோ! நடையில போன ஆமிக்காரங்களுக்கு வெடியாம். அந்தா! சுட்டு வாரான்கள்"

பதறினாள் பத்மா! செய்வது தெரியாத நிலை. எங்கே ஓடுவது? பொருட்கள் எதை எடுப்பது? சிந்தித்து முடிவெடுக்க முடியாத நிலை. ராஜனும், பத்மாவும் ஓடிச் சென்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை ஆளுக்கு ஒன்றாக தூக்கிக் கொண்டு பின்புறமாக ஓடினார்கள்.

மதில் சுவர்! அந்த சீன மதில் சுவர்!

பின்பக்க அவசர பயணத்தைத் தடுத்தது.

வேகமாக ராஜன் கொண்டுவந்த கதிரை, பத்மாவை மதிலால் பாய்வதற்கு துணை செய்தது.

பின் வீட்டு சிவலிங்கத்தின் மனைவி பத்திரமாக பத்மாவையும் பிள்ளையையும் கைகொடுத்து இறக்கினார்.

ராஜன் மற்றப் பிள்ளையை ஏந்தியவாறு மதிலில் இருந்த வண்ணம் சிவலிங்கத்தின் வீட்டுப்புறம் ஒரு காலை கீழே நகர்த்தினான். மதிலின் மத்தியில் இருந்தவண்ணம் 'அந்த அரை அடி' நிலத்தை ஒரு கணம் மீட்டினான். கண்கள் குளமாகியது.

"கொலையே விழும் என்று கூக்குரலிட்டவன். இப்போது கொலைக்குப் பயந்து ஏன் பாய்ந்து ஓடுகிறாயா?" என்று 'அந்த அரை அடி' மதில் ஏளனம் புரிவது போல் தோன்றியது ராஜனுக்கு!

வெடிகளின் ஒலி இப்போது அண்மையில் கேட்கிறது.

"ராஜன்" என்று மெதுவாக கூப்பிட்டவாறு கையை நீட்டினான் சிவலிங்கம்....ராஜனின் குழந்தை அவன் கையில் இருந்து கொண்டு ஏதோ தனக்கு எல்லாம் விளங்கியது போல தன் 'பொக்கை' வாயால் சிரித்தது!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இந்திய தேசத்து தேவதை

அந்த 'இந்தியன் ஏர்லைன்ஸ்' விமானம் ரன்வேயில் சுழன்று விருட்டென்று மேலெழுந்தபோது கூட, அதனுள்ளேயிருந்த நான் அல்லாடவில்லை.

ஆனால், என் மனம் அல்லாடியது.

விமானத்தின் உள்ளிருந்த சொகுசுத்தனம் கூடப் போலியாய்ப்பட்டது.

நான் 'அங்கர்' பியர் டின்னொன்றை உடைத்து வாயில் கவிழ்த்து, சிகரட்டொன்றைத் தீக்கொளுத்திய போதுதான், அந்த விமானப் பணிப்பெண் வேகமாய் வந்து.."ப்ளீஸ்...டோன்ற் ஸ்மோக் ஹியர்" என்றாள்.

சிகரட்டை ஆஷ்ட்ரேயில் அமிழ்த்தேன்- அணைத்தேன்.

"ஃபாஸ்டின் யுவர் சீட் பெல்ட்! ப்ளீஸ்" என்ற பணிப்பெண் அவளாகவே என் இருக்கைப் பட்டியை மாட்டிவிட, மவுனமாயிருந்தேன். (அழகாயிருந்த அவளின் இடுப்பு வளைவுகளை இரசிக்கக் கூடிய நிலையில் நானில்லை.)

பியர் ரொம்பவும் கசந்தது,

என் மனதைப்போல...

காரணம்-காதல்!

காதல் கசக்குமா?

ஆனால்....இந்த நிமிடம் எனக்குக் கசந்தது.

காதல் கசப்பதற்குக் காரணமானவள்.... என் தேவதேவி-!

அதுவும் கடல்கடந்த காதல்.

இலங்கைப் பிரஜையான எனக்கு இந்திய தேசத்துப் பெண்மீது காதல்; அக்கரையில் வாழும் அவளுக்கு இக்கரை வாலிபனான என்மீது காதல்.

ஆனால் இந்த நிமிடம்....

அந்தக் காதல் ஒரு கேள்விக்குறியாகிப்போய்; என் நினைவுகள் பின்னோக்கிச் சுழன்றன.

□□

ஒரு வருடத்துக்கு முன்னையதோர் நாள்!

சென்னை எனும் தமிழ்நாட்டின் தலைநகரத்தில்- தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்லாமல் ஹிந்தி, உருது, ஆங்கிலம், மார்வாடி, கன்னடம், மலையாளம், தெலுங்கு, குஜாராத்தி எனப்பல வகை மக்கள்- மொழிபேசும் மக்கள் செறிந்து வாழ..... 'பூக்கடை' எனும் வியாபாரத் தெருவுக்கு அருகேயிருந்த ஒரு பழக்கடையில் கொஞ்சம் ஆப்பிள் பழங்களை வாங்கிக் கொண்டு யதார்த்தமாய் தமிழில் விலை கேட்டேன்.

"எவ்வளவப்பா?"

-கடைக்காரர் மலங்க மலங்க விழித்தார். மீண்டும் கேட்டேன். "தமிழ் தெரியுமா?" பதிலில்லை.

எனக்கு எரிச்சலாய் வந்தது. ஹிந்தி மொழியில் கேட்டேன்.

"ஹிந்தி மாலும்....? ஆப்பிள் கித்னா ருபிய?"

(ஹிந்தி தெரியுமா? ஆப்பிள் என்ன விலை?)

அவன் அதே மவுனமாய்....

நான் உடம்பில் ரொம்பவும் சூடேறினேன்.

எனக்குத் தெரிந்த (சுமார்) அத்தனை மொழிகளிலும் கேட்டேன்.

"டூ யூ நோ இங்கிலீஷ்?"

"மலையாளம் சம்சாரிக்கும்?"

"தெலுங்கு தெல்சா....?"

எதற்கும் பதிலில்லை. அப்போது தான்....

பின்னாலிருந்து சிரிப்பொலி கேட்டது;

> "இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் நேற்றைய தினம் (மட்டும்) என் தேவதையை சந்திக்காமலேயே இருந்திருப்பேனோ என்னவோ....."



அவள் அதே ஹிந்தி மொழியில் சொன்னாள்.

(அதன் தமிழ் வடிவம்):

"நீங்கள் என்னதான்... எத்தனை முறை தான் கேட்டாலும் அவனால் பதில் சொல்ல முடியாது. ஏனெனில்.... அவனொரு செவிட்டு ஊமை. கடை முதலாளி எங்கேயோ பக்கத்துல போயிருக்கார்போல... இவன் சாதாரண வேலையாள். நான்தான் தினமும் இங்கே 'ஷொப்பிங்' வர்றேனே. முதலாளி வரும்வரை வெயிட் பண்ணுங்க...."

நான் தாமதித்தேன்.

முதலாளி வந்ததும் விலை கேட்டுப் பணம் கொடுத்தேன்.

எனக்காகக் காத்திருந்த அவளோடு திரும்பினேன்.

இளம் மஞ்சள் நிற சல்வாரில் அவள் நின்றுகொண்டிருந்தாள்- அந்த இந்திய தேசத்து தேவதை.

மனிஷா கொய்ராலாவின் முகச்சாயல். ரவீனா ராண்டனின் நிறம். மூவாறு வயதைக் கொண்ட குழந்தைத்தனமான முகத்தில் அதே குழந்தைத் தனமான புன்னகை.

"க்யா?" (என்ன?) என்றேன் ஹிந்தியில்.

பேசிக்கொண்டே 'பாரிமுனை' வரை நடந்தேன். கால்கள் வலிக்கவில்லை. மாறாக... அந்தத் தேவதையின் பொற்பாதங்களையெண்ணி என் மனம் வலித்தது.

"உங்களுக்குக் கேரளாவா?"

என்றாள் ஹிந்தியில்.

ஏனெனில் கேரளத்து முகச் சாயல் எனக்கு.

"இல்லை....நான் சிலோன்-ஸ்ரீலங்கா"

என்றேன் ஹிந்தியில்.

அவள் நம்ப முடியாமல் பார்த்தாள். பிறகு நம்பினாள்.

பறகு பாரிமுனை (பாரிஸ் கார்ணர்) வரை இலங்கை இனப்பிரச்சனையைப் பற்றிப் பேசிக்கொண்டே நடந்தோம். பாரிமுனையில் அவளுக்கான பஸ் வர... அவள் ஏறிப்போனாள்.

அவளைப் பிரிந்ததில் நானும் சோர்ந்து போனேன்.

என்னமாதிரி பெண்ணவள்! எத்தனை கலகலப்பாய்ப் பழகுகிறாள்!! தென்றலாய் வந்து...மணம் பரப்பி....தென்றலாகவே போய்விட்டாளே. இந்த முதல் சந்திப்பே என்னைப் பாடாய்ப் படுத்தியது.

அப்புறம்....

யதேச்சையாய் இரண்டு மூன்றுமுறை சந்தித்துக்கொண்டோம். பிரிந்தோம். இப்படியாக....

வியாபார நோக்கில் நான் ஒவ்வொரு முறையும் இந்தியா போகும்பொழுதெல்லாம் அவளைச் சந்திக்காமல் வருவதேயில்லை. அவளும்.... நான் இலங்கையில் இருக்கும் வேளையில் எனக்கு மடல் எழுதத் தவறுவதேயில்லை.

காலவோட்டத்தில்;

ஒருநாள்...நாமிருவரும் மவுண்ட் ரோடில் நடந்துகொண்டு...மழைக்காக ஒரு ரெஸ்டா ரண்டில் ஒதுங்கியபோது- பாதாம் கீருக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருந்த போது, தன் ரோஸ்நிற உதடுகளை விரித்து அவளாகவே சொன்னாள்,

"மே தும்ஸே ப்யார் கர்த்தாஹே!"

(நான் உன்னைக் காதலிக்கிறேன்.)

"க்யாஹ்?" என்னவென்று நானும் ஹிந்தியில் அதிர்ந்து....

அவள் மீண்டும் ஆங்கிலத்தில் சொன்னாள் "ஐ லவ் யூ"

நான் மவுனமாயிருந்து பின் சொன்னேன்,

"மே தும்ஸே ப்யார் கர்த்தாஹு!"

(நானும் உன்னைக் காதலிக்கின்றேன்.)

அடுத்த கணமே அவள் என் நெஞ்சில் மிருதுவாய் சாய்ந்து கொண்டாள்.

□□

இப்படித் தொடங்கிய நம் காதல், ஒரு வருடகாலமாக எந்தவிதப் பிரச்சனையுமே இல்லாமல் இயல்பாய்ப் போய்க் கொண்டிருக்க....

விதியென்ற பெயரில் நேற்றுத்தான் நம் காதலில் கீறல் விழுந்தது.

இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் நேற்றைய தினம் (மட்டும்) என் தேவதையை சந்திக்காமலேயே இருந்திருப்பேனோ என்னமோ?

நேற்று;

'மெரீனா பீச்சில்' நாமிருவரும் உலாவிக் கொண்டிருக்க,

பக்கமாயிருந்த கம்பியூட்டர் ஜாதகம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவனை மக்கள் சூழ்ந்திருந்தார்கள். என் தேவதை சொன்னாள். "சோதிடம் பார்ப்போமா?"

நானும் இணங்கினேன். "பார்ப்போம்!"

சோதிடக்காரன் ஜாதகம் பார்த்து சொல்ல...எனது ஜாதகத்தை என்னைவிட ஆவலாக, என் தேவதையே கேட்டாள். அவனும் சொல்லிக்கொண்டே போனான்.

"நீங்க பிறந்த நேரம் நல்லநேரம். ஆனால் இப்போ உச்சியில சனியிருக்கு. நவம்பர் மாதம் வரும்வரைக்கும் நினைப்புகள்- நம்பிக்கைகள் ஈடேறாது. உங்க ராசி தனு. ஆயுள்ரேகை பலமாயிருக்கு ஆனால்....."

அவன் நிறுத்திவிட்டு என்னையும்-என் இந்தியத் தேவதையையும் மாறி மாறிப் பார்த்தான். என் தேவதையின் கண்கள் விரிந்தன.

"என்ன?" என்றேன் சுருதியேயில்லாமல்....

"சொல்லட்டுங்களா?"

"சொல்லுப்பா...."

"உங்க மணவாழ்க்கை நல்லாயிருக்காது. ஏன்னா....உங்களுக்கு ரெண்டு கல்யாணங்கள் நடக்கும்னு ரேகை சொல்லுது." அவன் வார்த்தையில் நடுங்கினான்.

நான் அதிர்ந்தேனோ இல்லையோ என் தேவதை அப்பட்டமாக அதிர்ந்தது தெரிந்தது. அவளது முகம் களையிழந்து கறுத்துப் போய்....

நான் பலவந்தமாக அந்த இடத்தில் இருந்து அவளை நகர்த்தினேன்.

ஆனாலும்;

எதையோ இழந்துவிட்ட தவிப்பில் அவள் முகம் இருண்டிருந்தது!

'தான் அடையப்போகும் அன்பாளனுக்கு இரண்டு திருமணங்கள்' என்றால் எந்தக் காதலிதான் தாங்கிக்கொள்வாள்? அந்த வகையில்....

என் தேவதையும் சராசரிப் பெண்தானே!

மெரீனாவின் ஓரமாய் அவளை அழைத்துப் போனபோது,

மனம் உடைந்து, உடம்பு குலுங்கி அழ ஆரம்பித்தாள். எனக்கு ஆறுதல்படுத்தத் தெரியவில்லை.

"ஏண்டா அழுவுறே....ஜோதிடமெல்லாம் பொய்டா! வெறும் வயிற்றுப் பிழைப்பு."

"இல்ல! என் மனதுக்கு ஏதோ பயமாப்படுது"

"ஏண்டா பயப்படுறே...உனக்கு நம்பிக்கையில்லேன்னா நாம இன்னுமொரு ஜோதிடனிடம் ஜாதகம் பார்ப்போம். அவன் என்ன சொல்லுவானோ கேப்போம். எல்லாம் பொய்டா கண்ணா!"

"சரி வேறொரு ஆள்கிட்டப் பார்ப்போம்!"

என்றாள் எனது இனிய தேவதை.

ஆட்டோவில் ஏறிப்போனபோது 'சாந்தி தியேட்டர்' பக்கம் வேறொரு ஜோதிடன் அகப்பட, நான் எனது கைரேகைகளைக் காட்ட....ஒலிம்பிக் விளையாட்டைப் பார்க்கும் ஆர்வத்தில் என்னவள் இருக்க...என் நெஞ்சுக்குள் ஏதோ பயம் வந்தது உண்மை. ஜோதிடன் சொல்லத் தோடங்கினான்:

"நீங்க தனு ராசிக்காரர். ஆனால் இப்போ உச்சியில சனியிருக்கு. ஆனாலும் உங்களுக்கு ரெண்டு சம்சாரங்கள் வாய்க்குமென்று ரேகை சொல்லுது."

என் மனதுக்குள் பக்கென்று பலூன் வெடிக்க,

என் இனியவளின் கண்களிரண்டிலும் கண்ணீர்வடிய..அவள், என்னை ஏதோ சந்தேகமாய்ப் பார்த்தாள்.

விதியின் விளையாட்டில் நானென்ன பண்ண முடியும்?

எவ்வளவோ ஆறுதல் கூறியும், அவள் "வீட்டில் தேடுவார்கள். நேரமாயிட்டுது."

என்று புறப்பட்டுப் போனாள். ஆனால்.. அவள் போனதற்கான காரணம் 'வீட்டில் தேடுவது அல்ல' என்று எனக்குத் தெரியும். பலனில்லை.

ஒவ்வொரு முறையும் நான் இலங்கைக்கு வரும்போதும், ஏர்போர்ட் வரும்வரை வழியனுப்ப வரும் என் இந்திய தேசத்து தேவதை இன்றைக்கு வரவேயில்லை.

என்மீது அவளுக்குக் கோபமா?

என்மீது அவளுக்குச் சந்தேகமா?

இல்லை-

என்னை இன்னொருத்தியுடன் பங்கு போட விரும்பாத மனோபாவமா? எதுவும் நானறியாத நிலையில்...

'இந்தியன் ஏர்லைன்ஸ்' கொழும்பு ஏர்போர்ட் ரன்வேயில் வட்டமடிக்கும் நேரம்தான் நான் சுயநினைவடைந்தேன். என்றாலும்; மனம் பூராவும் என் இந்திய தேசத்து தேவதையைப் பற்றிய நினைப்பே வியாபித்திருந்தது.

நான் அடுத்த தடவை இந்தியா தேசம் போவதற்குள் என்னவள் தெளிந்திருப்பாளா? இல்லை....எமக்குள்ளான இடைவெளி நீளுமா? தெரியவில்லை.

அனாலும்; மனதுக்குள் தித்திப்பாய் சொல்லிக்கொண்டேன்.

"மே தும்ஸே ப்யார் கர்த்தாஹு!"

**மாவனல்ல ரிஸ்கி ஷெரீப்**

---

# மன நிறைவு

**கல்முனை எம்.சி. கலீல்**

பக்கத்து வீட்டு பாத்திமாவின் அடுப்பு நாளாந்தம் எரிந்து நம்ம வீட்டுப் பக்கம் புகைகளைக் கக்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் நம்ம வீட்டு அடுப்பு எரிந்து நான்கு நாட்களாகிறதே.

என்ன செய்வது? கையிலோ காசும் இல்லை. கடன்தர யாரும் இல்லை. வேலை இழந்திருக்கும் எனக்கு யார் தான் காசு



கொடுத்து உதவப் போகிறார்கள். பட்ட கடனையே இதுவரைக்கும் என்னால் கொடுக்க முடியவில்லை. இந்த லட்சணத்தில்

எப்ப தான் இந்தக் கஷ்டம் என்னை விட்டு அகலப் போகிறதோ? பொழுது விடிந்தால் கடன்காறர்கள் என்னை விட்டு வைப்பார்களா? இந்த இரவு இன்று விடியாமல் இருந்து விட்டால்..... எண்ண அலைகள் சுற்றிச் சுழல பெருமூச்சு விட்டான் சலீம்.

சோகத்தில் தூக்கமே வரவில்லை. ஆனால் கண்கள் மட்டும் மூடிக்கிடந்தன. சிந்தனைகள் சிறகடித்தன. எப்படியோ இந்தப் பாழாய்ப்போன இரவு இன்று விடியத்தான் போகிறது.

அப்போ என் பச்சிளம் குழந்தைகள் பசி, பசி என்று அழுவது என் காதுகளைத் துளைக்கப் போகிறதே! காலை ஆகாரத்திற்கு இன்று நான் என்ன செய்வேன்? என்னால் கூட இந்தப் பசியின் வேதனையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தச் சின்னஞ் சிறுசுகள் என்றெண்ணிய வாறே கண்களைத் திறக்கும் காலைக் கதிரவன் தன் ஒளிகளைப் பரப்ப ஆரம்பித்தான்.

செய்வதறியாது திகைத்தவனாக யாரிடமும்-ஏன் தன் மனைவி சரினாவுக்கு கூட சொல்லாமல், மெல்ல நகர்ந்து தன் கால் போன போக்கில் எதை எதையெல்லாமோ எண்ணிக் கொண்டு விரைவாக நடந்தான்.

சிறிது தூரம் நடந்ததும் மனதால் இறைவனை வேண்டியவனாக மனதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான் சலீம். "இறைவா அன்றாடம் நீ எனக்கு அள்ளி அள்ளி காசுகளை தராவிட்டாலும் இன்றைய பொழுதிற்காவது என் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு உணவளிக்க மாட்டாயா?" என்று காப்பவன் மீது கரங்களை உயர்த்தி கேட்டவனாக மெல்ல நடந்தான்.

யாரோ கைதட்டும் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தான் சலீம். என்ன ஆச்சரியம் வயதான ஒருவர் "தம்பி இங்கு கொஞ்சம் வருகிறீரா? எனக்கு இந்த சாமான்களை எல்லாம் தூக்கிச் கொண்டு போக முடியல்ல. இந்த சாமான்களை எல்லாம் என் வீட்டுக்கு கொண்டு வந்து தருகிறீரா காசு தருகிறேன்".

யோசித்தான் சலீம். தன் குடும்பச் சுமைகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? ஆம் என்று தலைஅசைத்தவனாக அப் பாரங்களை சுமந்து கொண்டு பசியின் தாக்கத்தால் தள்ளாடித் தள்ளாடி நடந்தான்.

போக வேண்டிய இடம் வந்தது. அந்த வயதானவர் "இதுதான் எங்க வீடு. இங்கு சாமான்களை இறக்கு" என்று கூறி ஒரு தொகைப் பணத்தை சலீம் இடம் கொடுத்து விட்டு சென்றார்.

மறுகணமே தன் கண்களையே நம்ப முடியாதவாறு சலீம் ஆனந்தத்தில் ஆழ்ந் தான். அந்த வயதானவர் கொடுத்தது ஒரு ஐம்பது ரூபாநோட்டு. பாரச் சுமைக்கு கொடுப்ப தென்றால் பத்து ரூபா தான் கிடைக்கும். ஆனால் அனுதாபத்திற்கு கிடைத்ததுதான் அந்த ஐம்பது ரூபா.

எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்தவனாக கடைவீதிக்குச் சென்று தன் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு சில உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு மனநிறைவோடு வீடு சென்றான் சலீம்.

---

# தங்கைக்கோர் மடல்

**சி.சிறீரவி-இரத்தினபுரி**

அன்பின் "தங்கை"க்கு!

உன் அண்ணன் "நல்ல தம்பி" எழுதுவது: எப்படியம்மா "ராதா" சுகமாய் இருக்கிறாயா? "அன்புள்ள அப்பா" வை நல்லாக் கவனிச்சுக் கொள்ளு. "ராதா" அம்மா



வின்ர "தாய் மனசு" பத்தி தெரியும் தானே? அவட மனசு புண்படுற மாதிரி நடத்திடாதேம்மா. மற்றும் தம்பிமார் "சேரன் பாண்டியன்" ரெண்டு பேரையும் கவனிச்சுப் பாத்துக்க. அவங்ககூட சண்டை சச்சரவு வெச்சுக் கொள்ளாத. பாவம் சின்னப் பசங்க தானே? "ஏன்" நீ மிச்சநாளாக் கடிதம் எழுதேல்ல. [illegible] ஏதும் பிரச்சனையா? அது பத்தியும் விபரமாக் கடிதம் போடும்மா?

ஆ....நானும் மறந்திட்டேன். போன கெழம ஒன்னியப் பொண்ணு பாக்க வர்ரதாச் சொன்னாங்க தானே? வந்தாங்களா? "கவுமெண்ட் மாப்பிள்ளை"யாமே என்ன ஒனக்குப் புடிச்சிருச்சா? என்ன சொன்னாங்க "மாப்பிள்ளை" வீட்டுக் காரங்க. பாவம்மா "மாப்பிள்ளை" "தாயில்லாப் பிள்ளை" யாமே! அவரு மனசி நோகிறமாதிரி ஏதும் பேசினியா? அதப் பத்தியும் கடதாசி எழுது "ராதா"

ஏனென்னா நானும் "மனிதன்" தானே? எனக்கென்னு ஒருத்தி காத்துக் கிட்டிருக்கா அது உனக்குத் தெரியும் தானே? ஒவுட்டுக் கழுத்தில் "மூன்று முடிச்சு" விழுந்தாத்தானே, நானும் அவளை "மாலையிட்ட மங்கை" எண்டு சொல்லி என் "மனைவி" "குடும்பம்" எண்டு ஆக்கிக்கலாம். ஆமாம்மா அதுக்கெல்லாம் "நல்ல நேரம்" னு ஒண்ணு வரணுமில்லியா?

உனக்கு முக்கியமான ஒன்னு எழுத மறந்திட்டனே. இஞ்ச எனக்கு ஒரு பிரண்டு இருக்கான். அவன் பேரு வந்து.... வந்து..."மிஸ்டர் பாரத்" அவனோ"தங்க மனசுக்காரன"ம்மா அவன் எனக்காக எதையும் "தியாகம்" செய்வான். ஆமாம்மா நாங்க அப்பிடிப்பட்ட உயிர் "நண்பர்"கள்

ஆ...நம்ம குடும்பத்தப் பத்தியெல்லாம். ஒன்ன பொண்ணு பாக்க வாறது பத்தியெல்லாம் சொல்லியிருக்கேன்.

இப்ப கடைசியா ஒன்னப் பொண்ணு பாத்தாங்களே, அவங்க அப்பிடி இப் பிடிண்ணு ஏமாத் தீட்டா அவன் உன்னை கரம் பிடிப்பேன்னு சொல்லி "சத்தியம்" பண்ணிக் கொடுத்திட்டானம்மா. "வாழ்வே மாயம்"ணு சொல்லிக் கிட்டு இருக்காத.

ஏம்மா "ராதா" இந்தா இப்போதே இந்த அண்ணன் "உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்" அப்பிடி இப்பிடின்னு "தில்லு முல்லு" ப் படாம திட்ட வட்டமா நிதானமா அப்பாக்கிட்ட கேட்டு முடிவெடு. இந்தக் கடிதத்தோட "பணம்" கொஞ்சம் அனுப்பிவைக்கிறேன்.

உடனே பதில் அனுப்பிவை, நீ அனுப்புவே, ஏனென்னா "என் தங்கச்சி படிச்சவ"

"என்றும் அன்புடன்"

"படிக்காதவன்"

உன் அண்ணன்

"நல்ல தம்பி"

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கோபம் இனிக்கும்

## இலக்கிய நயம்

"கண்ணே!"

"என்ன?"

"செங்கரும்புச் சாறு கேட்டேன், நீயோ வெஞ்சினம் காட்டுகிறாயே நியாயமா?"

"ஆலையில்தான் கிடைக்கும் சாறு!"

"ஆலையில் சிக்கிய கரும்பு தேவையில்லை."

சேலைக்குள் சிக்கிய மேனியில் முளைத்த கரும்புதான் தேவை."

"சரசப் பேச்சு தேவையில்லை."

"நல்லது, சமரசமாகி விடலாம், சமருக்குத் தயாராகியும் விடலாம்!"

"சமரசமும் - சமரும் இரு துருவங்கள்!"

"நீ சொல்வது நாட்டுக்கு உரிய தத்துவம்!"

"தாங்கள் சொல்வது?"

"வீட்டுச் சுவர் நான்குக்குள் நடக்கும் பருவப் பாடத்துக்கு உரிய தத்துவம்!"

"அறிவுச் சிகரமய்யா தாங்கள்!"

"அதுதான் சொல்கிறேன், பற்றிக் கொள், கட்டிக்கொள், சிகரம் உன் வசமாகும்படி நடந்து கொள் என்று!

"சுற்றிச் சுற்றி ஒரே இடத்தில்தான் நின்று கொண்டிருக்கிறீர்கள்."

"என்ன செய்வது, வாழையுடல் மேனி எழில் கட்டிப் போட்டு விட்டதே என்னை!"

"களம் பல கண்டவர் தாங்கள், வெட்டிப் போட்டுவிட்டுச் செல்லலாம் அல்லவா?"

"பகைவரின் பிடியென்றால் வெட்டி வரலாம், இது பாவையின் பிடி, எப்படி தட்டிச் செல்லலாம்?"

"எல்லாம் நடிப்பு!"

"சொல்லிவிட்டு அப்படிச் சுழிக்கலாமோ உதட்டை? பழிப்பு என்று நினைக்கலாம் நீ, அழைப்பாகவல்லவா படுகிறது எனக்கு!"

"விரசம்.. விரசம்!"

"நவரசமே உன் வசம், அதை ரசிப்பதும், ரசிப்பை நேரில் சொல்வதும் எப்படியாகும் விரசம்?"

"வீசும் வார்த்தைகளை விட உங்கள் விழிகள் செல்லும் இடங்கள் மோசம்!"

"நன்றாக இருக்கிறது"

"என்ன?"

"அனைத்துமே! இலைமறை கனிகள் முதல் கலைவண்ண இதழ்கள் வரை!"

"நான் அதையா கேட்டேன்?"

"நான் அதைத்தானே கேட்கிறேன்; அப்படி முறைக்காதே; எதிரில் நந்தவனம் இருக்கும்போது எந்த மனமும் அதன் மேலே தானே இருக்கும்!"

"காரியம் சாதிக்க கச்சிதமான புகழ்ச்சி!"

"சரி தான்"

"என்ன சரிதான்?"

"நிறைகுடம் தழும்பாது!"

"புரியவில்லை."

"அடக்கம் அதிகம் உன்னிடம், அதுதான் உண்மையைச் சொன்ன போதும் புகழ்ச்சி என்கிறாய்."

"இதுதான் சமரசம் என்பதா?"

"சத்தியமாய் இதுதான், துல்லியமாய் நீ கண்டுபிடித்தற்கு பத்தியமாக ஒன்று தரவா?"

"விடுங்கள்! மல்யுத்தம் செய்வது போல் ஏன் இந்த முரட்டுத்தனம்? அப்பா... இரத்த ஓட்டமே கைபட்ட இடத்தில் கட்டுப்பட்டு நின்றுவிட்டது."



"அப்படியா.. வைத்தியம் செய்யவா..? வசீகர வைத்தியம்!"

"பைத்தியங்கள் வைத்தியம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை."

"நீ சொல்வது மருத்துவ சாஸ்திரம். நான் சொல்வது மதன சாஸ்திரம். ஆணில் பெண்ணுக்கு பைத்தியம், பெண்ணில் ஆணுக்குப் பைத்தியம், இரண்டு பைத்தியங்கள் தங்கள் நோயை தாங்களே வைத்தியம் செய்வதுதான் மதன சாஸ்திரம்!"

"அற்புதமான தத்துவம்!"

"எது, மதன சாஸ்திரம்தானே? அதுதான் சொல்கிறேன் வைத்தியத்தை ஆரம்பித்து விடலாம் என்று!"

"ஆனால், பைத்தியம் எனக்கில்லையே!"

"இன்ப அரங்கினில் நடக்கும் நாடகத்தில் பெண் சொல்லும் கருத்துக்கு விளக்கம் எதிர்ச் சொல்லில்தான் இருக்கும். ஆம் என்றால் இல்லை. இல்லை என்றால் ஆம். வேண்டாம் என்றால் வேண்டும், போங்கள் என்றால் வாங்கள்..!"

"இது எங்கே படித்த பாடம்?"

"படித்தது அல்ல, படித்தவர்கள் சொன்னது."

"நீங்கள் படிக்கவில்லை?"

"துடுப்பு வேண்டுமே தோணி செலுத்த, அடுப்பு வேண்டுமே பொங்கல் நடத்த, அது போல் அணைப்பு வேண்டுமே இன்பக் கடலை தாண்டிக் கடக்க, பொங்கும் இன்பப் படையல் நடத்த!"

"மீண்டும் வேதாளம்..."

"இருக்கலாம், ஆனால் முன்னே இருப்பது முருங்கை மரமல்ல, முல்லைக் கொடி!"

"அய்யய்யோ..."

"என்ன?"

"வெளிச்சம், சர விளக்கை அணைத்து விட்டு வாருங்கள்."

"சர விளக்கை அணைத்தால்தான் சரச விளக்கம் கிடைக்குமோ? அப்பாடா... இத்தனை நேரம் எங்கிருந்தது இந்தச் சிரிப்பு? விளக்கு இருக்கட்டும்!"

"வேண்டாம்!"

"இரசிக்க வேண்டுமே!"

"என்ன?"

"முல்லைப் பூ மோக இதழ்களில்! அதனை இரசிக்க வேண்டாமா?.. நான்.. சரி.. சரி அணைக்கிறேன். ஓ.. விளக்கைத் தான் அணைக்க வேண்டுமோ?"

"அவ்வளவு ஆசையோ?"

"எனக்கு மட்டும்தானோ?"

"எனக்கும்தான்"

"இருளைக் கழுவும் முத்துப்பல் சிரிப்பு. கொத்தி எடுக்கிறது... ஒரு கேள்வி கேட்கலாமா?"

"கேளுங்கள், பொல்லாத கை இது.."

"இதுதான் இதம்.."

"என்ன?"

"கேள்வி கேட்கலாம் என்று சொன்னாயே, இதமான மனது என்று பாராட்டினேன்!"

"ம்..ஹூம்.. கேள்வி எங்கே?"

"நான் என்ன தவறு செய்தேன்?"

"யார் அப்படிச் சொன்னது?"

"இல்லையென்றால் என் இல்லாள் என் மீது ஏன் எரிந்தாள்?"

"சொல்லமாட்டேன்."

"அறியாமல் நான் உன்னைத் தூங்க விடமாட்டேன்."

"இப்போது மட்டும் தூங்கவோ விடப் போகிறீர்கள்? ஆனாலும் பாவம் நீங்கள், அதனால் சொல்கிறேன், தங்களுக்கு பிடித்த மானவர்களிடம் தவறு காணாவிட்டாலும் பெண்கள் பொய்க் கோபம் காட்டுவது ஏனாம் தெரியுமோ? நான் ஊடல் கொள்ளும் போது உங்களுக்கு என்மேல் சினமோ வந்தது?"



"போடி கள்ளி, நீ விலகிப் போகப் போக விருப்பம் அன்றே எனக்குள் விருட்சமானது!"

"அதுதான்! அதற்காகத்தான் - பொய்க் கோபம் - இந்த ஊடல்.."

"அடி... கள்ளி.. நீ பொல்லாத கள்ளியடி."

"பாராட்டை திருவள்ளுவருக்குச் சொல்லுங்கள். அந்தக் கருத்தை அவர் தான் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்."

இரசனையோடு ஊடல் கொண்டதற்கு காதலி சொன்ன விளக்கம் இந்தக் குறளிலேதான் இருக்கிறது.

**"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர் அளிக்கு மாறு"**

ஊடறுவகை -அதிகாரம் 133
பாடல்-1321

**தருவது - ரசிகன்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–110

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | ■ |
| 4 | | | | | ■ | 5 |
| | | ■ | ■ | 6 | ■ | |
| ■ | ■ | 7 | | | | |
| 8 | | | | | ■ | |
| | ■ | | ■ | 9 | 10 | |
| 11 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

01. இறையருளை ஈர்க்க பக்தர்கள் வாயில் பண்ணோடு எழுவது.
03. முக்கனிகளில் ஒன்று.
04. இதற்கு இருபக்கமும் அடிதான்.
07. குற்றம் செய்தால் இது விதிக்கப் படும்.
08. எதிலும் இது இருந்தால் தான் சேமிக்க முடியும்.
09. வாரத்தில் ஒரு நாள்.
11. இதை வைத்தியரின் ஆலோசனையின் பேரிலேயே உட்கொள்ள வேண்டும்.

### மேலிருந்து கீழ்

01. சிலரின் உடலில் காணப்படும் இது, சிலருக்கு அழகு தரும்; வேறு சிலருக்கு தழும்பு போலிருக்கும்.
02. நீரிலும் நிலத்திலும் வாழும் ஒரு பறவை.
05. தூய்மையான தங்கத்தை இப்படிச் சொல்வார்கள்.
06. இது சமையலுக்கு உதவும் ஒரு வாசனைப் பொருள்.
07. கீரை வகைகளில் ஒன்று.
08. பெரும்பாலானோரின் பொழுது போக்கு.
10. எண்சாண் உடம்புக்கு இதுவே பிரதானம்

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 29.07.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-110
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-108ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1அ | ■ | 2கா | கி | 3த | ப் | 4பூ |
| 5க | ற் | பூ | ர | ம் | ■ | ச் |
| ரா | ■ | ல் | ■ | 6ப | ட் | சி |
| தி | 7வி | ■ | 8வ | தி | ■ | ய |
| ■ | 9ரோ | கி | ணி | ■ | 10ச | ம் |
| ■ | த | ■ | 11க | டு | கு | ■ |
| 12க | ம் | ப | ர் | ■ | னி | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.108இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. எஸ். நிர்மலன் கொழும்பு-11.
2. பாத்திமா ஷர்மிளா றிஸ்வி, கொழும்பு-12.
3. கே. சிவரஞ்சினி, திருகோணமலை.
4. எம். ஜீவரத்தினம், மன்னார்.
5. திருமதி. செல்வி சந்திரகுமார், மாத்தளை.
6. எம். உபைதுல்லா, பாணந்துறை.
7. பி. ரோய் கண்ணா, எல்ல.
8. எம். ஐ. பர்ஸானா, மருதமுனை.
9. எல்கா துரைராஜா, ஹட்டன்.
10. ஏ. அலோசியஸ், கொச்சிக்கடை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**'முன்னேறிப் பாய்தல்' குறித்து உங்கள் கருத்து என்ன சிந்தியா?**

ஆர்.ரோனுகா–கொழும்பு 6

*பொதுமக்கள் தாக்கப்பட்டபோது அதில் புலிகளும் மிகச் சிலர் சிக்கிக் கொண்டதற்காக அரசு வருத்தம் தெரிவித்தால் பொருத்தமாக இருக்கும்.*

□□

**அள்ள அள்ள வற்றாதது எது? கொடுக்கக் கொடுக்கக் குறையாதது எது?**

திருமதி சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை

*யுத்த களத்தில் பெருகும் செந்நீர்! தேர்தல் கால வாக்குறுதிகள்!*

□□

**நக்மா பற்றி லேட்டஸ்ட் வம்பு ஏதாவது உண்டா?**

க.சுதர்சன்– செங்கலடி

*அவரைப் பற்றிய வம்பு:சிம்புகபூரை காதலித்து விட்டு, தமிழக அரசியல்வாதியின் மகன் ஒருவர் தன்னைக் காதலிப்பதை அனுமதித்துக் கொண்டிருக்கிறார். கவர்ச்சிக் காட்சிகளில் ஹீரோக்களால் எப்படியும் கையாளப்பட தயாராக இருக்கிறார். நக்மா மூட்டிவிடும் வம்பும் இருக்கிறது. நாகார்ஜுனுக்கும் மனிஷா கொய்ராலாவுக்கும் 'ஒரு இது' என்று கதை கட்டிவிட்டதே நக்மாதானாம். இது மனிஷா சொன்னது.*

□□

**காதல் பலவிதம்; அதில் சில விதம்-கூறும் பார்க்கலாம்?**

எஸ்.பாலச்சந்திரன்–நீர்கொழும்பு.

*"எங்கிருந்தாலும் வாழ்க" என்பர் சிலர்; "என்னையா ஏமாற்றி விட்டாய்; எங்கு போனாலும் பார்க்கிறேன் ஒரு கை" என்பர் வேறு சிலர். பாலச்சந்திரன்! நீர் இதில்....?*

**பொதுவாக மனிதர்களிடம் இருக்க வேண்டியது எது? இருக்கக் கூடாதது எது?**

செல்வி.நஸீரா சம்சுதீன்– கந்தளாய்.

*இருக்க வேண்டியது-மனிதம். இருக்கக் கூடாதது. மிருகம். மிருகம் வீட்டில் வளர்க்கலாம் தப்பில்லை; மனதில் வளர்க்கக் கூடாது நஸீரா!*

□□

**காதலின் அடித்தளம் எவ்வாறு அமைய வேண்டும்?**

என்.எம்.சியாம்– முகிரியாவ.

*அன்பு- புரிந்துணர்வு-நம்பிக்கை என்பவைதான் சீமெந்து, மணல், கல்லு. உரிய அளவில் சேர்த்துக் குழைத்து இதம்-பதம் உறுதியாக போட்டுவிடுங்களேன் சியாம், அடித்தளத்தை!*

□□

**நவாலி தேவாலயத் தாக்குதலை அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளிப் படுத்த மறுத்தது எதைக் காட்டுகிறது?**

மா.சுமித்திரா– நுவரெலியா.

*கடந்த கால அரசு செய்திச் சுதந்திரத்தை மறுத்தது பற்றி பேசும் செய்திச் சுதந்திரம் மட்டுமே வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு இருக்கிறது என்று தெரிகிறது.*

□□

**உலக அழகிப் போட்டிக்கும் போட்டியாக ஆணழகன் போட்டி ஆரம்பித்து விட்டார்களே?**

எம்.உஸ்மான்– பாணந்துறை.

*இலங்கை வானொலி தமிழ் சேவை நிகழ்ச்சி ஒன்றிலும் அப்படியான அர்த்தத்தில் கூறப்பட்டது. அபத்தமான தகவல். தொன்று தொட்டே ஆணழகன் போட்டி நடந்து வருகிறது. இலங்கையில் கூட பல்லாண்டுகளாக நடந்து வருகிறது.*

□□

**'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கை பற்றி கூறும் சிந்தியா?**

ஜெ.வசந்த குமார்–தெஹிவளை

*முன்னேறிப் பாய்தலுக்கு புலிகள் பலத்த எதிர்ப்பைக் காட்டாமல் பதுங்கியபோதே ஊகிக்கப்பட்ட பாய்ச்சல் தானே அது. எல்லாமே பாய்ச்சல், வீச்சல் என்றிருக்கும் போது மக்களின் நிலைதான் மாய்ச்சலோ என்று கவலைப்படுவது தவிர வேறென்ன செய்ய முடியும் வசந்த குமார்!*

□□

**திருமணத்தின் பின்னர் டெண்டுல்கரின் ஆட்டம் எப்படியிருக்கும்?**

பா.தேவிகா– கம்பஹா

*ஒரு வருடத்துக்குள் தெரியக்கூடும். அடுத்த வருட உலகக் கிண்ணப் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் அணி இலங்கை வரக் கூடுமல்லவா? அதைத்தான் சொன்னேன்.*

□□

**இன்றைய தேதியில் புதுக்கவிதைகளின் தரம் வளருகிறதா-தேய்கிறதா?**

எம்.பரமேஸ்வரி-வவுனியா.

*கவிஞர்கள் என்று நிறையப்பேரும், கவிதைகள் என்று மிகச் சிலவுமே இருப்பதுதான் நிலவரம். இப்போது சொல்லுங்கள் பரமேஸ்வரி-பு.க.வளருகிறதா- தேய்கிறதா?*

□□

**டியர் சிந்தியா! போரை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்கச் சொல்கிறார்களே, நடக்குமா?**

க.சிவசங்கர்-மட்டக்களப்பு

*அதற்கான சந்தர்ப்பமே சமீபத்தில் இல்லை. ஆனால் ஒன்று, போரை நிறுத்து மாறு கோரி தமது சமாதான பேரார்வத்தைக் காட்ட நினைக்கும் சிலருக்கு போர்தான் கை கொடுக்கிறது. போர் இல்லாவிட்டால் பாவம் இவர்கள்-எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதாம்? மொத்தத்தில் பலருக்கு பல விதத்தில் போர் உதவுகிறது, சாதாரண மக்களைத் தவிர.*

□□

**இந்திய அரசு வாயே திறக்கவில்லையே கவனித்தீரா?**

செ.காசிநாதன்-திருமலை

*எதிரிக்கு எதிரி நண்பன்தானே! நண்பனைக் குறைசொல்ல தயங்க வேண்டும்தானே!*

### மகாபாரதம்-அங்கம்-87

கடந்த 09.07.95 ஞாயிறு இரவு 7.00 மணிக்கு எம்.ரீ.வியில் மகாபாரதம் அங்கம்-85 ஒளிபரப்பாகவில்லை. 16ம் திகதி இவ்வங்கம் ஒளிபரப்பானது. 86வது அங்கம் முரசு 110ல் (ஜூலை 16–22) பிரசுரமானது. இது 23ம் திகதி ஒளிபரப்பாகும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே அங்கம் 87 இந்த இதழில் இடம் பெறவில்லை. இவ்வங்கம் 30ம் திகதி ஒளிபரப்பார்கலாம் என்று எதிர்பார்ப்பதால் முரசு 112 (ஜூலை 30–ஆகஸ்ட் 06) இதழில் பிரசுரமாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

# ஒரு நிமிச நிசப்தம்




## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

சபரி கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தான்.

சுருள் சுருளான அடர்த்தியான கிராப் சீப்பின் பற்களுக்கு சிக்காமல் சுருண்டன. சபரியின் ஹேண்ட்சமுக்கும் பர்சனாலிடிக்கும் இந்த சுருள் கிராப் ஒரு பிரதானமான அம்சம். கோதுமை நிறம். பெண்மைத்தனமான கண்கள். புன்னகைக்க ஆரம்பித்து, உதடுகளை லேசாக விரித்தாலோ, உதட்டை இறுக மூடினாலோ கன்னத்தில் விழுகிற குழி எந்தப் பெண்ணின் மனசையும் லேசாய் சுண்டும்.

"டேய்... சபரீ....ஈ....ஈ...ஈ"

அம்மாக்காரி குரல் கொடுத்தாள் சமையலறையிலிருந்து.

"இதோ வந்துட்டேம்மா...."

"தட்டுல இட்லி எடுத்து வைக்கச் சொல்லிட்டு அங்கே என்னடா பண்ணிட்டிருக்கே....? சீக்கிரம் வாடா...."

"வந்துட்டேன்... வந்துட்டேன்.."

சீப்பை கண்ணாடியின் இடுக்கில் சொருகிவிட்டு, தேங்காய்ப்பூ துவாலையை தோளில் போர்த்திக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான்.

அம்மாக்காரி தன் மெலிந்த கையால் ஓலைத்தடுக்கை எடுத்துப்போட உட்கார்ந்தான். "இட்லிக்கு தொட்டுக்க என்னம்மா பண்ணியிருக்கே?"

"வெங்காய சட்னி...."

கிண்ணத்தை நகர்த்தினாள். நிமிஷ நேரத்தில் இரண்டு இட்லிகளை வயிற்றுக்குள் தள்ளிவிட்டு, தண்ணீர் டம்ளரை கையில் எடுத்துக் கொண்ட போது அம்மாக்காரி முனகினாள்.

"சபரி.."

"என்னம்மா...?"

"மளிகை சாமான் பூராவும் ஆயிடுச்சுடா...ஒரு நூறு ரூபா குடுத்துட்டுப் போனா எல்லாத்தையும் வாங்கிப் போடலாம்...."

சபரி டம்ளரிலிருந்த தண்ணீர் பூராவையும் முழுமூச்சில் குடித்து விட்டு காலி டம்ளரை கீழே வைத்தான்.

"என்னம்மா....அதுக்குள்ளே....மளிகை சாமான் ஆயிடுச்சா? தேதி இன்னைக்கு என்ன தெரியுமாம்மா.....? இருபது..."

"நான் என்னடா பண்ணட்டும்...? போன மாசம் இருந்த விலைவாசிக்கும் இந்த மாச விலைவாசிக்கும் நிறைய வித்தியாசம்... நீ குடுத்த பணம் எப்படி காணும்....?"

"ஆபீஸ்லதான் அட்வான்ஸ் கேக்கணும்...."

"தருவாங்களா.....?"

"ம்.....தருவாங்க; அடுத்த மாசம் சம்பளம் தர்றப்போ பிடிச்சிக்குவாங்க; வெங்காயச் சட்னி ஜோரா இருக்கம்மா... கொஞ்சம் போடேன்!"

அம்மாக்காரி எடுத்துப் போட்டாள். இட்லியை இரண்டாய் விண்டு ஒரு துண்டை சட்னியில் தோய்த்து வாயில் திணித்துக் கொண்டே "அம்மா..." என்றான்.

"என்னடா....?"

"உனக்கு மாத்திரை இருக்கா....? ஆயிடுச் சுன்னா ஞாபகம் படுத்தம்மா, செலவுக்கு பயந்துட்டு கம்ன்னு இருந்துடாதே....."

"இன்னும் ரெண்டு நாளைக்கு வருண்டா...."

"டானிக்?"

"அரை பாட்டில் அப்படியே இருக்கு"

அரைடஜன் இட்லிகளை உள்ளே தள்ளி-அம்மாக்காரி தந்த காப்பியை உறிஞ்சிவிட்டு-சட்டை-பேண்ட்டுக்குள் நுழைந்து வாசலில் நின்றிருந்த தன் சைக்கிளை ஸ்டாண்டில் இருந்து விடுவித்த போது பின்பக்கமாய் வீட்டுக்காரரின் குரல் கேட்டது.

"தம்பி....!"

சபரி திரும்பினான்.

வீட்டுக்காரர் வாயில் வேப்பங் குச்சியை மென்று கொண்டே சிரித்தார்.

"என்ன தம்பி ஆபீசுக்கு புறப்பட்டு விட்டீங்களா?"

"ம்..."

"ரெண்டு நாளா உங்களைப் பார்த்து பேசணும்னு....! ஆனா முடியலை. நான் படுக்கையை விட்டு எழுந்திருக்கிறதுக்குள்ளே நீங்க ஆபீஸ் போயிடறீங்க...."

"என்னவிஷயம்.....?"

"கார்ப்பரேஷனில் வரியை ஏத்திட்டாங்க..."

"அதனால....?"

"அடுத்த மாசத்திலிருந்து வாடகை அம்பது ரூபா ஜாஸ்தியாகும்..."

சபரி எரிச்சலோடு அவரைப் பார்த்தான்.

"ஆறு மாசத்துக்கு முன்னாடிதான் வாடகையில் இருபது ரூபா ஏத்தினீங்க?"

வீட்டுக்காரர் இளித்தார்.

"அது தண்ணிவரி..."

"இந்த வீட்டுக்கு நீங்க கேக்கிற வாடகை அதிகம்."

"அப்படி அதிகம்ன்னு நீங்க நினைச்சா காலி பண்ணிடுங்க தம்பி. ஐயாயிரம் ரூபா அட்வான்ஸ் குடுத்து ஐநூறு ரூபா வாடகைக்கு பார்ட்டி ரெடியா இருக்கு...."

எரிச்சலோடு வீட்டுக்காரரைப் பார்த்தான் சபரி. சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு மௌனமாய் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"என்ன தம்பி பதில் பேசாமே போறீங்க?"

"பேசறதுக்கு என்ன இருக்கு...?..அடுத்த மாசத்திலிருந்து நீங்க கேட்ட வாடகையைத் தர்றேன். மழை வந்தா ஒழுகிற அந்தக் கூரையை மட்டும் கொஞ்சம் ரிப்பேர் பண்ணிக் குடுத்திடுங்க போதும்....."

அதுக்கென்ன பண்ணிக் குடுத்திட்டா போச்சு....." வீட்டுக்காரர் சொல்லிக் கொண்டே இளிக்க, அந்த இளிப்பைக் காண சகிக்காமல் சைக்கிளை ஏறி மிதித்தான் சபரி.

ட்ராபிக் தெரியும் தெருமுனைக்கு வந்து ஜாக்ரதையாய் ஊர்ந்து ஹெட்குவார்ட்டர்ஸ் ரோட்டில் திரும்பினான்.

எதிரே அந்த கார் வந்தது.

அபிநயாவின் சிவப்புநிற ஹெரால்ட்.

"ஹாய் அபி..." முகம் ஒரு பிரகாசத்துக்குப் போக அடித்தொண்டையில் சத்தமில்லாமல் கூவி சைக்கிளை 'ச்க்' கென்று ப்ரேக் போட்டு நிறுத்தினான்.

அபிநயாவும் ஹெரால்டை ஒதுக்கினாள்.

சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு அவளருகே ஓடி வந்தான் சபரி. "பட்டப்பகல்ல நிலாவோட தரிசனம்...."

அவனுடைய கேலியை மதித்து புன்னகைக்காமல் சலனமில்லாத முக பாவத்தோடு சபரியை ஏறிட்டாள் அபிநயா.

"ஆபீஸுக்கு புறப்பட்டுட்டீங்களா?"

"ஆமா..."

"எனக்காக ஒரு அரைநாள் லீவு போட முடியுமா?"

சபரி தன் இரண்டு புருவத்தையும் அரை மில்லி மீட்டர் உயர்த்தினான்.

"லீவு போடணுமா....எதுக்கு....?"

"லீவு போட்டுட்டு என்கூட வாங்க சொல்றேன்...."

"பிடிவாதமே உனக்கு இன்னொரு பெயர் அபிநயாவா? ஒரு ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணு. இந்த சைக்கிளை நமக்கு தெரிஞ்ச டைலர் கடையில நிறுத்திட்டு வந்துடறேன்."

"சீக்கிரமா வாங்க"

அவள் சொன்ன மாதிரியே சீக்கிரமாய் வந்தான் சபரி.

அபிநயா கதவைத் திறந்துவிட, காருக்குள் வந்தான் சபரி. அபிநயா ஸ்ப்ரே பண்ணியிருந்த பிளேசர் சென்ட் குப்பென்று அவன் மூக்குக்கு வந்தது.

காரைக் கிளப்பினாள்.

"எங்கே போறோம் அபி?"

"யாரோட டிஸ்டர்பன்ஸும் இல்லாமே நாம கொஞ்ச நேரம் பேசணும். ஏதாவது ஒரு இடத்தை நீங்க சொல்லுங்க சபரி..."

"ஆர்.எஸ்.புரத்தில் இருக்கிற ட்ராகன் ரெஸ்டாரெண்ட் போயிடலாமா அபி....? இந்நேரம் போனா ப்ரீயா இருக்கும்..."

"கூட்டம் இருக்காதே?"

"ஊ.....ஹூ...ம்..."

காரை ஆர்.எஸ்.புரம் போகும் மார்க்கத்தில் திருப்பினாள் அபிநயா.

"என்ன விஷயம் அபி?"

"ட்ராகனுக்குப் போய் சொல்றேன்...."

"எனிதிங் சீரியஸ்?"

"ட்ராகனுக்குப் போய் சொல்றேன்..."

சபரி புன்னகைத்து அவளைப் பார்த்தான்.

அபிநயா கட்டியிருந்த பிங்க் நிற சேலைத்தலைப்பு காற்றில் படபடக்க, காதோரம் சுருண்டிருந்த கேசம் ஒன்று காற்றை உபயோகப்படுத்தி-அபிநயாவின் கன்னத்தில் 'எஸ்' போட பழகிக் கொண்டிருந்தது. சந்தனத்தால் செய்த மாதிரி நீண்டிருந்த விரல்கள் காரின் ஸ்டீரியங்கை அலட்சியமாய் கையாண்டு கொண்டிருந்தது.

"விஷயம் என்னவாயிருக்கும்ன்னு நான் சொல்லட்டுமா அபி?"

"ம்..."

"உங்கப்பாவுக்கு நம்ம விவகாரம் தெரிஞ்சு போயிருக்கும்..."

"நோ...."

"உன்னைப் பெண் பார்க்க எவனாவது வரப்போறான்?"

"நோ..."

"ரெண்டும் இல்லேன்னா பின்னே என்னவாம்?"

"ட்ராகன்ல போய் சொல்றேன்"

"சஸ்பென்சே! உன்னுடைய இன்னொரு பெயர் அபிநயாவா?"

தலையில் கைவைத்து போலியாய் ஆயாசப்பட்ட சபரி மயக்கம் வருகிற மாதிரி பாவனை காட்டினான்.

நிழலான திவான் பகதூர் ரோட்டில் கார் நிதான வேகத்தில் ஓடி ட்ராகனுக்கு எதிரே வந்து நின்றது.

ட்ராகன் ரெஸ்டாரெண்ட் சைனீஷ் பாணியில் ஏராளமான கண்ணாடி ஜன்னல்களோடு இருந்தது. ரெஸ்டாரெண்டின் முகப்புக் கதவைத் திறந்து விடுவதற்காக, சலவைக்கு போய் விட்டு வந்த வெள்ளை யூனிபாமில் வெயிட்டர் ஒருவன் பவ்யமாய் காத்திருந்தான்.

காரை பார்க் செய்து விட்டு உள்ளே போனார்கள் சபரியும் அபிநயாவும்.

ஸ்பீகரில் 'பொனியெம்' மெலிதாய் அதிர்ந்து கொண்டிருக்க சொற்பமான கூட்டம் கட்லெட், முள்கரண்டிகளோடும், கோலா பாட்டில்களோடும் தெரிந்தது.

கண்களை ஒற்றியெடுக்கிற இதமான அரை வெளிச்சம். காலியாய் இருந்த நாற்காலிகளில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள். வெயிட்டர் ஒருவன் காலியான டம்லர்களை வைத்து அதில் ஐஸ்வார்ட்டரை நிரப்பி விட்டு போக-அபிநயாவை பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான் சபரி.

"இதுதான் ட்ராகன் ரெஸ்டாரெண்ட்..... இனிமே நீ விஷயத்தைச் சொல்லலாமே அபி?"

"சபரி...."

"ம்"

"நம்ம காதலுக்கு ஒரு பிரச்சனை முளைச்சிருக்கு..."

"என்ன பிரச்சனை.....?"

அபிநயா பதில் சொல்லத் தோன்றாமல் சபரியின் முகத்தையே பார்த்தாள். சபரி ஐஸ் நிரம்பியிருந்த டம்லரை உள்ளங்கைகளால் வைத்து உருட்டிக் கொண்டே கேட்டான்:

"ஜாதிப் பிரச்சனையா....? பணப் பிரச்சனையா?"

"விபரமா சொன்னா மேற்கொண்டு பேச வசதியா இருக்கும்..."

"சபரி...! நாம ரெண்டு பேரும் காதலிக்க ஆரம்பிச்ச அந்த ஆரம்ப நாள்லேயே நீங்க என்கிட்ட ஒரு சந்தேகத்தை கிளப்பினீங்க. அந்தஸ்தோட உச்சாணிக் கொம்புல இருக்கிற எங்கப்பா நம்ம காதலை ஒத்துக்கு வாரன்னு கேட்டீங்க....அப்போ நான் எங்கப்பாவை பத்தி பெருமையா சொன்னேன். எங்கப்பா அந்தஸ்தை பார்க்க மாட்டார். என்னோட ஆசையைத் தான் பார்ப்பார். பணத்தோட வர்ற மாப்பிள்ளையைக் காட்டிலும், குணத்தோட வர்ற மாப்பிள்ளையைத் தான் அவர்க்கு பிடிக்கும்ன்னு சொன்னேன்....."

"ஆமா சொன்னே...! உங்கப்பா இப்ப என்ன சொல்றார்?"

"அவர் நினைக்கிற அந்த குணமான மாப்பிள்ளைக்கும் பத்து லட்ச ரூபாய் சொத்து மதிப்பு இருக்கணுமாம்..... இன்னிக்கு சொல்லிட்டார்...."

"விளையாட்டுக்கு சொல்லியிருப்பார்....."

"விளையாட்டில்லே சபரி; சீரியஸாவே சொல்லிட்டார்... அப்பாவோட குணத்தைப் பத்தி எனக்குத் தெரியும்....என்னை மாதிரியே பிடிவாதம் அவர்க்கும் இருக்கு...இன்னிக்கு வீட்டுக்கு வந்த புரோக்கர்கிட்ட அவர் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன்.... எனக்கு வரப்போகிற வரனுக்கு பத்து லட்சரூபா மதிப்பாவது இருக்கணும்னு சொல்லிட்டிருந்தார்....."

சபரி முகம் மாறியிருந்தான். அபிநயா கேட்டாள்:

"நீங்க என்ன பண்ணப் போறீங்க சபரி?"

"ராஜினாமா பண்ணிடலாம்னு இருக்கேன்."

"ராஜினாமாவா....? எதை ராஜினாமா பண்ணப் போறீங்க?"

"என்னோட 'காதலன்' உத்யோகத்தை...."

"சபரி..!" மெலிதாய் கத்தினாள் அபிநயா. "இந்த வார்த்தையை தமாஷுக்கு கூட சொல்லாதீங்க."

"வேற என்ன பண்ணச் சொல்றே அபி....? வீட்டு வாடகையை பத்து ரூபாய் ஏத்தினாலே-அதை நினைச்சு ராத்திரி பூராவும், தூங்காமே புரண்டுட்டிருக்கிற நடுத்தரவர்க்க ஜாதி நான். குருடனுக்கு கோஹினூர் வைரம் கிடைச்ச மாதிரி உன்னோட காதல் எனக்கு கிடைச்சிருக்கு. நீ என்னை விரும்பறதா என்கிட்ட சொன்னப்பவே நான் உனக்கு 'காஷன்' கொடுத்தேன். இந்தக் காதல் கல்யாணத்துல போய் முடியும்ங்கிற நம்பிக்கை எனக்கில்லை.... நிறைய பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும்ன்னு சொன்னேன்...நீ கேட்கலை.... உங்கப்பா உன்னோட ஆசைக்கு குறுக்கே நிக்க மாட்டார்ன்னு நீதான் சொன்னே..." இன்னிக்கு அவரே வரப்போகிற மாப்பிள்ளைக்கு பத்து லட்சரூபா மதிப்பு சொத்தாவது இருக்கணும்னு சொல்றார்... இந்த மாச மளிகை சாமானை வாங்கிப் போடுறதுக்காக-ஆபீஸ்ல அட்வான்ஸ் கேக்க வேண்டிய நிலைமையில இருக்கிற எனக்கு இதெல்லாம் சாத்தியமா படலை அபி....!"

"உங்க ஒப்பாரியை கொஞ்சம் நிறுத்துறீங்களா சபரி?"

"அபி"

"நம்ம கல்யாணம் நடக்கத்தான் போகுது...."

"பஞ்சாயத்து தேர்தல் நடந்தாலும் நடக்குமே தவிர, நம்ம கல்யாணம் நடக்காது"

"பிரச்சனைகளைப் பார்த்து நீங்க பயப்படறீங்க சபரி..."

"இது பயப்படற பிரச்சனை... அபி! அதனால் தான் பயப்படுறேன்." அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே வெயிட்டர் பவ்யமாய் குனிந்து மெனுக்கார்டை நீட்டினான். அபிநயா மெனுக்கார்டை தள்ளி வைத்துவிட்டு சொன்னாள்:

"ரெண்டு ஆரெஞ்ச் மில்க்ஷேக்..."

வெயிட்டர் நகர-சபரி சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க...?" -அபிநயா கேட்டாள்.

"நான் இப்போ குடிக்கப்போற 'ஆரெஞ்சு மில்க்ஷேக்'குக்குக்கூட நீதான் பில் 'பே' பண்ணப்போறே...! ஒரு ஹோட்டல் பில்லைக்கூட 'பே' பண்ண முடியாத என்னால உங்கப்பாவுக்கு எப்படி பொருத்தமான மாப்பிள்ளையா இருக்க முடியும்...?"

"எல்லாம் முடியும்....."

"எப்படி....?"

"பொய் சொல்லணும்."

"என்னாண்ணு பொய் சொல்லணும்...?"

"நான் சொல்லித் தர்றேன்......"

பொய் சொல்லிக் கல்யாணம் பண்ணிக்க எம் மனசுக்கு சம்மதமில்லை அபி... பொய் சொல்லிக் கல்யாணம் பண்ணிக்கிறதைக் காட்டிலும், உங்கப்பாவுக்கு தெரியாமலேயே ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு நேரா அவர் கால்ல போய் விழுந்துடலாம்...."

"அப்படித் திருட்டுத்தனமா கல்யாணம் பண்றது எனக்குப் பிடிக்காது சபரி. உங்களையும் நான் இழக்க விரும்பலை... எங்க சொத்தையும் நான் இழக்க விரும்பலை. நான் அப்பாவுக்கு விரோதமா கல்யாணம் பண்ணிகிட்டா அவர் சொத்துல ஒரு சல்லிக் காசுகூட எனக்குக் கிடைக்காது. அவரோட சம்மதத்தின் பேர்லதான் இந்தக் கல்யாணம் நடக்கப் போகுது...."

"எப்படி நடக்கும்....?"

"உங்களுக்கு பணக்கார முலாம் பூசணும்......"

"மூலாம் பூசினா எதுவும் நிக்காது அபி..." சபரி சிரித்தான்.

"ஆரெஞ்ச் மில்க்ஷேக்' நீளமான கண்ணாடி டம்ளர்களில் ஐஸ், துண்டங்களோடு டேபிளில் வந்து உட்கார்ந்தது.

இருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

"சபரி! இந்த விஷயத்துல நீங்க் தைரியம் சொல்லுவீங்கன்னு நினைச்சேன்....ஆனா நீங்களே பயப்படுறீங்க...."

"நாம என்னதான் பொய் சொன்னாலும் நாளைக்கு விஷயம் வெளியே தெரிஞ்சா அசிங்கமாயிடும் அபி....அப்ப மாத்திரம் உங்கப்பாவுக்கு கோபம் வராதா என்ன?"

"நான் சமாளிச்சுக்கிறேன்....."


ஆரெஞ்சு ஜூஸை ஒரு வாய் விழுங்கிக் கொண்டே சபரி கேட்டான். "எனக்கு பணக்கார முலாம் பூசறதா சொன்னியே அபி எப்படிப் பூசப்போறே....?"

"இன்னும் ரெண்டு நாள்ல சொல்றேன்....."


சொல்லிவிட்டு ஆரெஞ்சு நிற பாணத்தை உறிஞ்ச ஆரம்பித்தாள் அபிநயா.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: மில்ரோய்
வயது: 22
முகவரி:78, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
பொழுதுபோங்கு: முத்திரை சேகரித்தல்,வானொலி, பத்திரிகை.




பெயர்: எம். பஹ்மி
வயது: 19
முகவரி: 69, மார்க்கெட் வீதி, தர்காநகர்.
பொழுதுபோக்கு: உதைபந்து விளையாடுதல்,




பெயர்: ரி. தர்மப்பிரியா
வயது: 11
முகவரி: இலுப்படிச்சேனை, பன்குடாவெளி, செங்கலடி..
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், புத்தகம் படித்தல்.



பெயர்: கே. ஆதம்பாவா
வயது:-19
முகவரி: 207,பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது-01.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, வானொலி.



பெயர்: எஸ். விஜயன்
வயது: 21
முகவரி: NO,7, CARYLE GARDENS, SOUTHALL, MIDDX, UB 1 2BN, LONDON, U.K.
பொழுதுபோக்கு:வானொலி, பத்திரிகை,பேனாநட்பு.



பெயர்: எம். இஸ்ஸடீன்
வயது: 26
முகவரி: P.O BOX. NO.1383 CODE NO. 92364, AL FIRDOUSE, KUWAIT.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், கிரிக்கெட்.

பெயர்: எம். பாயிஸ்
வயது: 25
முகவரி: SAUDIA CATERING P.O. BOX- 21871 , RIYADH - 11485 K.S.A.
பொ.போ: கதைப்புத்தகம், வானொலி

பெயர்: எஸ். மதன்
முகவரி: 60, PAVANELINK WAY # 814, DON MILLS ONT. M3 C1 A1, CANADA.
பொ.போ: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: ரி. தனராஜ்
வயது: 18
முகவரி: 238, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வானொலி,சினிமா,கதைப்புத்தகம்.

பெயர்: ஏ. அஸீஸ்
வயது: 19
முகவரி: 38, மெயின் வீதி, மொனராகலை.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: கே. நாகேந்திரா
வயது: 22
முகவரி: 15, ஹிஜ்ராபுரம், ஹட்டன்.
பொழுதுபோக்கு: டி.வீ, நாவல்.

பெயர்: ஐ. அமிர்
வயது: 20
முகவரி: என்.சி. ரோட், திருகோணமலை.
பொ.போ: வழமையானவை.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்




4
3
6
3
3
1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# ஒன்றோடு ஒன்று சேர்ந்தது



வடபகுதி மக்களுக்கு கற்பகதரு பனை. உறுதிக்கு பனையின் கம்பீரம் உதாரணம். வளத்துக்கும் பனை உத்தரவாதம்.

அருகிலுள்ள பனை இலட்சத்தில் ஒரு ஆச்சரியம். இரு பனைகள் ஒட்டிப் பிறந்த இரட்டையராய் வளரும் இந்தக் காட்சி அபூர்வம். இப் பனை வடமராட்சியில் வல்லிபுரக் கோவிலுக்கு அருகில் இருக்கிறது. (படமும்-தகவலும், யசோகன்-வவுனியா)

# ஐந்தும் ஒன்றல்ல



படத்தில் இருப்பவை விதையற்ற தோடம்பழங்கள். படத்தை கூர்ந்து பாருங்கள். மொத்தமாக ஐந்து தோடம்பழங்கள் இருக்கின்றன. இல்லையில்லை ஆறு தோடம்பழங்கள் என்கிறீர்களா? தப்பு. ஆறாவதாக சின்னதாக இருப்பது தவளை. தோடம்பழ நிறத்தில் தவளை மாற்றப்பட்டது படப்பிடிப்பாளர் செய்த சாகசம். வித்தியாசமான சிந்தனை.

Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

4
3
3
6
8
6

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11

# திரையுலகச் சிங்கம்

தருவது - லியோ டெ



நமது சிவாஜி மாதிரி-நடிக்கும் பாத்திரமாகவே மாறிவிடும் ஹொலிவூட் நடிகர் அன்ரனி குயின்.

ஒமர் முக்தார் படம் உட்பட அன்ரனி குயினின் நடிப்புக்கு தீனி போட்டவை பல படங்கள்.

சிவாஜி கணேசன் ஒரு முறை அன்ரனி குயின் நடித்த படத்தைப் பார்த்து விட்டு, 'அந்தச் சிங்கம் போல என்னால் நடிக்க முடியாது' என்று அடக்கத்தோடு வியந்து பாராட்டியிருந்தார்.

திரையுலக சிங்கம் என்று ஹொலிவூட்டில் அழைக்கப்பட்ட அன்ரனி குயினுக்கு இப்போது 78 வயது. அவரது மனைவி கதரீனுக்கு 86 வயது. இருவரும் தம் முதிர் காலத்தை மகிழ்ச்சியோடு கழிக்கின்றனர்.

ஹொலிவூட் நடிக- நடிகைகள் பலர் தமது இறுதிக் காலத்தில் எங்கே நிம்மதி என்று தவிப்பதுதான் வழக்கம்.

குவிந்து கிடக்கும் பணம், அதனால் கிண்ணத்தில் மது, எண்ணத்தில் சரசம் என்று கும்மாளமிட்டுவிட்டு எல்லாமே திகட்டிவிட தவிப்பு வரும். இனி வாழ்க்கையில் என்ன இருக்கு என்ற விரக்தி வரும்.

அன்ரனி குயின் விதிவிலக்கு. அமைதியாக தனது மாளிகையில் மனைவியோடு பொழுது போகிறது. தெளிந்த நீரோடை போன்ற வாழ்க்கை. ஒரு சிங்கம் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கிறது.

# தேன் நிலவு மட்டும்



படத்தில் இருப்பது ஒரு ஹோட்டல். அட்டகாசமாக எழுந்து நின்றாலும் உள்ளே படு அடக்கம்.அதாகப்பட்டது ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று ஒரு அறை மட்டுமே இங்கே இருக்கிறது. ஜெர்மனியில் அம்பேர்க் என்னுமிடத்தில் உள்ள இக் ஹோட்டல்தான் உலகிலே மிகச் சின்ன ஹோட்டல்.

இக் ஹோட்டலில் அறை வாடகை எடுக்க பலத்த போட்டி. அதனால் ஒரு வருடத்திற்கு முன்னரே பதிவு செய்துவிட வேண்டும். மிக முக்கிய நிபந்தனை; தேன்நிலவு தம்பதிக்கு மட்டுமே அனுமதி கிடைக்கும்.

தேன் நிலவு கொண்டாடும் தம்பதி வந்தோமா வந்த காரியத்தை பார்த்தோமா என்று எவ்வித இடையூறும் இன்றி தேன்நிலவை இனிப்பாக பூர்த்தி செய்துவிட்டுப் போய்க் கொண்டே இருக்கலாம்.

தம்பதி இருவரும் அமர்ந்து உணவருந்தக் கூடிய வகையில் மட்டுமே உணவுக் கூடமும் இங்கே உண்டு. ஆக, உணவு உண்ணும் நேரத்தில் கூட கரடியாக யாரும் புகுந்து தம்பதியின் 'மூட்'டைக் கெடுக்க சான்ஸே இல்லை.

தேன்நிலவு தம்பதிக்கான அறையின் சுற்றளவு எட்டு அடி அகலம், 10 அடி நீளம், 28 அடி உயரம். அமர்க்களத்துக்கு ஏற்ற அடக்கம்.



# சேகரிப்பில் சாதனை



சிலர் முத்திரை சேர்ப்பார்கள். சிலர் முகவரி சேர்ப்பார்கள் (பிரபலமானவர்களின் முகவரி). ஆனால் இவரோ கழுத்திலே கட்டும் 'ரை'களை சேர்த்தார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தினுசு. கலர் வேறு, டிசைன் வேறு. இப்படியே இவர் சேர்த்துள்ள ரைகளின் மொத்த சேமிப்பு 5 ஆயிரத்தை தாண்டிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கரான இவரது பெயர் ஆர்னால்ட். வயது 48. என்ன ஒரு பெருமிதமாகப் போஸ் கொடுக்கிறார் அண்ணாச்சி!